வைகறை வெளிச்சம்
விலை ரூ.20/-
ஆசிரியர் மு. குலாம் முஹம்மது
Volume - 12 Issue - 06
ஜூன் 2019 - ரமழான் - ஷவ்வால் 1440



# இந்தியா தோற்றது

EVMS இயந்திரங்களின் உதவியால்

# ஜனநாயகம் வென்றது



## இலங்கை குண்டுவெடிப்பு!

# வேட்டையாடப்படும் முஸ்லிம்கள்!!



தோப்பில்
முஹம்மது மீரான்
சமுதாயப் பிணியகற்றிய சாகித்ய மருத்துவர்

- சித்ரவதைக்குள்ளாகும் காஷ்மீர மக்கள்
- நோன்புக்கு சீனாவில் தடை
- நான் விரும்பும் ஹிஜாப்
- கோ - எஜூகேஷனைக் கைவிட்ட பெல்ஜியம்!

இந்திய சுதந்திர தியாகிகளின் நோன்பு

بسم الله الرحمن الرحيم

(நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களின் உயிர்களையும், பொருள்களையும் நிச்சயமாக அவர்களுக்கு சுவனம் இருக்கிறது என்ற (அடிப்படையில்) விலைக்கு வாங்கிக் கொண்டான்; அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் போரிடுவார்கள் - அப்போது அவர்கள் (எதிரிகளை), வெட்டுகிறார்கள்; (எதிரிகளால்) வெட்டவும் படுகிறார்கள். தவ்ராத்திலும், இன்ஜீலிலும், குர்ஆனிலும் இதைத் திட்டமாக்கிய நிலையில் வாக்களித்துள்ளான். அல்லாஹ்வை விட வாக்குறுதியைப் பூரணமாக நிறைவேற்றுபவர் யார்? ஆகவே, நீங்கள் அவனுடன் செய்து கொண்ட இவ்வாணிபத்தைப் பற்றி மகிழ்ச்சி அடையுங்கள் - இதுவே மகத்தான வெற்றியாகும்.

(திருக்குர்ஆன்: 9:111)


04 இந்தியா தோற்றது! பாசிசம் வென்றது!! (கவர் ஸ்டோரி)

16 தோப்பில் முஹம்மது மீரான்

19 இலங்கை குண்டுவெடிப்பு! வேட்டையாடப்படும் முஸ்லிம்கள்!!

22 சித்ரவதைக்குள்ளாகும் காஷ்மீர மக்கள்

25 முஸ்லிம்களுக்கெதிராக மே மாதத்தில் இழைக்கப்பட்ட அநீதிகள்

28 எது முதலில்?

32 சிலுவைப் போர் 2.0

44 முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

50 ரமலான் மரபு நடை மதநல்லிணக்கத்தின் நாயகர்கள்

56 இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?



# வைகறை வெளிச்சம்

ஜூன் 2019 - ரமழான் - ஷவ்வால் 1440

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.

+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in



### 2019 நாடாளுமன்றத் தேர்தலில்

# இந்தியா தோற்றது

### (EVMS) மின்னணு இயந்திரங்களின் வழி

# பாசிசம் வென்றது

## 2019 தேர்தல்

இந்தத் தேர்தலில் அனைத்துத் தரப்பாரும் ஒத்துக் கொண்ட உண்மை! இந்தியா என்ற விரிந்து பரந்த நாடு. பல்வேறு மொழி, பல்வேறு மத நம்பிக்கைகள், பல்வேறு இனங்கள், இவற்றின் கூட்டு என்பதாகும்.

இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் வழிவிட்டு ஒவ்வொரு சமுதாயத்தவரும், இனத்தவரும் தங்கள் மதத்தவரும் தங்கள் உரிமைகளை தியாகம் செய்திருக்கின்றார்கள். கூடி வாழ வேண்டும். ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்பது அலட்சியம். இதனால் பார்போற்றும் நாடாக மளிந்தது.

இதுவே இங்கு பாசிசம் (பா.ஜ.க.) தலையெடுக்கும் வரை இருந்த நிலை. இப்போது இந்தியா என்ற கோட்பாட்டே கேள்விக்குறியாக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் மின்னணு வாக்கு இயந்திரங்கல் இந்தக் கோட்பாட்டையே தோற்கடித்துவிட்டன.

2019-இல் இதுதான் தேர்தல் முடிவு. கடந்த ஐந்து ஆண்டுகளாக மோடியின் முழு தோல்விகளால் நொந்தும், செத்தும் கொண்டிருந்த மக்கள் மூன்றே மாதத்தில் இனி இந்தியா எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். கெட்டுப் போகட்டும். இந்திய பொருளாதாரம் சீரழியட்டும், என முடிவு எடுத்துவிட்டார்கள் என நம்மை நம்பச் சொல்கின்றார்கள். இல்லை, இந்திய மக்கள் அப்படி அல்ல.

மோடியின் வெற்றி உண்மையான வெற்றி என்றால் இந்திய மக்கள் வட இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள். எங்களில் மடிந்த இளைஞர்களுக்கு இனி வேலையே வேண்டாம். அவர்கள் பக்கோடா விற்றுப் பிழைத்துக் கொள்வார் என்றும்,

விவசாயத்தை நம்பி விழும் இந்த இந்திய பெரு நாட்டில் இனி விவசாயிகள் எப்படி வேண்டுமானாலும் அழியட்டும். நாடு எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்றும்,

மலம் தின்று போராடிய விவசாயிகள் இனி மலமே திண்ணட்டும் என்றும்,

இருக்கின்ற சிறுதொழிகளும் அவற்றை அடுத்த சிறு பெரும் தொழில்களும் அழியட்டும் எங்களுக்கு அவற்றைப் பற்றிக் கவலை இல்லை என்றும்,

இந்தியாவின் மொத்த தொழிலும் அரசு நடத்தி வரும், இரயில்வே போன்ற தொழில்களும் அழியட்டும் என்றும்,

அவற்றில் இலாபத்தில் நடக்கும் தொழில்கள் எல்லாம் அதானிகளுக்கும், அத்வானிகளுக்கும் செல்லட்டும். அந்த குடும்பங்கள் மட்டுமே வாழட்டும் என்றும்,

வெளி நாடுகளில் குவியும் கறுப்பு பணங்கள் அங்கேயே

குவியட்டும். இனி அந்தப் பணத்தை இந்தியாவுக்குள் கொண்டு வந்திடும் முயற்சிகள் வேண்டாம் என்றும்,

முன்னாள் பொருளாதார முட்டாள் அருண் ஜெட்லி சொன்னது போல அவையெல்லாம் வெள்ளைப் பணம் தான் என்றும்,

பணமதிப்பிழப்பால் கறுப்புப் பணம் ஒழிந்திடவில்லை என்பது உண்மைதான், ஆனால் எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை என்றும்,

அதானாலும் பணமதிப்பிழப்பால் நலிந்து போன தொழில்கள், அதனால் இடிந்து போன தொழில்கள் அவற்றால் செத்துப் போன குடும்பத்தினர் இவர்களெல்லாம் எங்களிடம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்திடவில்லை என்றும்,

ஜி.எஸ்.டி.யால் யாரும் அழியட்டும். நாங்களே வேண்டுமானால் சேர்ந்து அழிகின்றோம் என்றும்,

பணமதிப்பிழப்பால் தீவிரவாதம் எந்ட்ரு சொன்ன மோடியே ஒரு தீவிரவாத செயலை காழ்மீரின் புல்வாமா பகுதியில் நடத்திக் காட்டினாரே. அதெல்லாம் பற்றி எங்களுக்கு கவலை இல்லை என்றும்,

இந்தியாவின் சொந்த மக்களே அந்நியர்களாக ஆக்கப்படுகிறார்களே! அதைப்பற்றியும் எங்களுக்குக் கவலை இல்லை என்றும்,

இந்தியாவின் பொருளாதாரத்தையும் வங்கிகளையும் மொத்தமாகக் கொள்ளையடித்துச் சென்றார்களே அவர்களும், அவர்களை ஓர் அழகியுடன் வழி அனுப்பி வைத்தார்களே அவர்களும், அவர்களுக்கு ஆசி வழங்கிய மோடி தலைமைப் பொறுப்பை ஏற்கட்டும். எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை என்றும்,

இந்தியாவின் சொந்த குடிமக்களாக வாழ்ந்த தொழிலதிபர்கள் 7,500 பேர் எங்களால் இனி இந்தியாவில் தொழில்களைத் தொடர முடியாது என வெளிநாடுகளுக்கு சென்றார்களே அவர்கள் மீண்டும் நம் நாட்டிற்கு வரவே வேண்டாம் என்றும்,

அவர்களுக்கு சாதகமான தொழில் சூழ்நிலைகள் இருக்குமிடத்திலேயே வாழட்டும். அங்கே தொழில்களைத் தொடங்கி வேலை வாய்ப்புகளை உருவாக்கி அவர்களை வாழ வைக்கட்டும் என்றும்,

ஜனநாயகத்தைத் தூக்கிப் பிடிக்கின்ற ஒரு நாட்டில் 5 ஆண்டுகளில் 19 நாட்கள் மட்டுமே நாடாளும் மன்றத்தை சந்தித்த ஒருவர் எங்களுக்கு போதும் என்றும்,

நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு கொண்டு வராமலும், நாடாளுமன்றத்தின் ஒப்புதலை கிஞ்சிற்றும் பெறாமல் பணமதிப்பு நீக்கம் (500 ரூபாய் 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவித்தது) என்ற பெரும் நடவடிக்கை போன்ற பல்வேறு நடவடிக்கையை மேற்கொண்ட ஒரு பாசிச வெறி போதும் என்றும்,

4000 கோடி - மக்கள் வரிப்பணத்தில் வெளிநாடு சுற்றுலாக்கள் சென்று வந்த ஒருவரே எங்களை ஆள வேண்டும் என்றும்,

புல்வாமா தாக்குதல் போன்றவற்றில் நாட்டின் பாதுகாப்பையே கோட்டைவிட்ட மோடியே நாடாள வேண்டும் என்றும்,

ஓர் அமைச்சரவையில் அத்தனை அமைச்சர் களையும் பொம்மையாக்கி விட்டு அனைத்தும் நான், எனது, என்னால் என செயல்பட்ட பாசிச சர்வதிகாரி மோடியே போதும் என்றும்,

கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பட்டப் பகல் படுகொலைகளும், கற்பழிப்புகளும் பெருக்கெடுத்து ஓடுகின்றனவே அவை இனியும் தொடர்ந்து தங்கு தடையின்றி தொடரட்டும் என்றும்,

கடந்த ஐந்து ஆண்டுகளாக மாநிலங்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் மத்திய அரசு பிடித்துப் பறித்து கொண்டே இருந்தது. மாநிலங்களின் உரிமைகளை அதிகாரங்களை ஒரேயடியாக பறிகொடுத்திடலாம். மோடி விருப்பம் போல் அழிக்கட்டும் என மக்கள் விட்டுவிட்டார்களா?

உலக அரங்கில் மகளீர் உரிமைகளில், பாலியல் கொடுமைகளில், சிறுபான்மை உரிமைகளில் மனித உரிமை தளத்தில் மிகவும் கேடுகெட்ட நாடு இந்தியா என வந்த அறிக்கைகள் ஆற்றோடு வந்த அவமானங்கள் அப்படியே இருக்கட்டும் என்றும்,

கற்பழிப்புகளை கரை க்அடந்து செய்தவர்கள் தாம் பாரதீய நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள். குறிப்பாக இவர்களின் ஆட்சி நடக்கும் மாநிலங்களில் இந்தத் தகாத செயல்கள் தாராளமாக நடக்கின்றது.(Front Line - May 11, 2018)

அவை அப்படியே தொடரட்டும். மத்தியில் பொறுப்பேற்கும் அரசின் ஆசியோடு என்றும் விட்டுவிட்டார்களா?

மக்கள் இல்லை! இல்லவே இல்லை. மோடியின் ஆட்சியில் மக்கள் மாண்டார்கள். இன்னும் பலர் செத்துக் கொண்டே இருக்கின்றார்கள். அவை அப்படியே தொடரட்டும். மத்தியில் பொறுப்பேற்கும் அரசின் ஆசியோடு என்றும் விட்டுவிட்டார்களா?

இல்லை! இல்லவே இல்லை!! மோடியின்

ஆட்சியில் மக்கள் மாண்டார்கள். இன்னும் பலர் செத்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

ஆகவே மக்கள் தந்த வெற்றியல்ல இது. மின்னணு வாக்கு இயந்திரங்கள் குறித்து யாரும் வாய் திறக்கவில்லை. மீடியாக்கள், ஊடகங்கள் இதைப் பற்றி விவாதிக்கவில்லை.

காஷ்மீரில் புல்வாமா தாக்குதல் - அதன் பிறகுப் பாலகோட் பயணம் இவற்றையெல்லாம் பற்றி பரப்பிய புருடாவும் விரைவிலேயே வெளிச்சத்திற்கு வந்து விட்டது. அது எதிர்பார்த்த பலனை தந்திடவில்லை.

ஊழலே செய்யாத உத்தமர் மோடி எனப் போட்ட வேஷம் ரபேல் போர் விமான விவகாரத்தில் கலைந்து போனது. அதில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மீது அவதூறை தூக்கி வீசும் ஒரு பெண்ணின் விவகாரத்தோடு மங்கிப் போகிறது. ஆனால் உண்மை நிச்சயமாக வெளிவரும்.

இவையல்லாமல் இன்னொரு சாக்குப் போக்கும் சொல்லப் படுகின்றது. மோடியின் விவகாரத்தில் அது நான்கு லட்சம் பேர் சங்கப்பரிவார அணியில் முழு நேர ஊழியராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் வீதி, வீதியாகச் சென்று பிரச்சாரம் செய்தார்கள். அதனால் விளைந்த வெற்றிதான் இது என்பது.

2001ஆம் ஆண்டே கிருஸ்டோபர் ஜாஃபர்லாட் இந்த உண்மையை தான் மேற்கொண்ட கள்வில் குறிப்பிட்டார். இப்போது இவர்களின் எண்ணிக்கை பல லட்சங்கள் அளவில் பல்கிப் பெருகிப் போயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த பல லட்சம் பெரும் 24X7 என முழு நேரமாக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். என்றாலும் தேர்தல் வெற்றித் தோல்விகளை அவர்களால் நிர்ணயிக்க முடியவில்லை என்பதை 2004 முதல் 2014 வரை காங்கிரஸ்-இன் கை ஓங்கியதிலிருந்து அறிந்திட முடிந்தது.

2014இல் காங்கிரஸ் கட்சியை ஊழல் நிறைந்த கட்சி எனக் காட்டித்தான் ஆட்சியைப் பிடித்தார் குஜராத் இனப்படுகொலை புகழ் மோடி. காங்கிரஸ் கட்சி 2014 ஆம் ஆண்டு தேர்தலை சந்தித்த போது அதன் பலவீனங்கள் பலபல என விரிந்து போனது. அந்தக் கட்சியைப் பயன்படுத்தி நன்றாகப் பணம் பண்ணியவர்கள் தேர்தலை சந்திக்கவே தயங்கினார்.

இத்துடன் "ஆப்கோ" என்ற யூத நிறுவனமும் பல்லாயிரம் கோடி பணத்தை பாரதீய ஜந்தா கட்சியிடம் பெற்றுக் கொண்டு செய்த தகிடுத்தங்கள் இவற்றின் வழியாகத்தான் வெற்றிப் பெற்றார்கள். அப்போதெல்லாம் அவர்களின் பல லட்சம் முழுநேர ஊழியர்களும் சாதிக்கவில்லை.

இப்போது அனைத்துத் துறைகளிலும் தோல்வியை மட்டுமே கடந்த ஐந்து ஆண்டுகளாக சந்தித்து வருகின்றார்கள். பா.ஜ.க.வை மக்கள் ஏற்றிடவில்லை. இதை அண்மையில் நடந்து முடிந்த சட்ட சபை தேதலில் கண்டோம். பாசிசம் படுதோல்வி அடைந்திருந்தது.


அதே போல் அண்மையில் நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு நடந்த உள்ளாட்சி தேர்தலிலும் படுதோல்வி அடைந்திருக்கின்றார்கள். இப்போதைய நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி இவர்களின் முழுநேர ஊழியர்களின் வெற்றி என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

21 லட்சம் மின்னணு இயந்திரங்களின் மாய ஜால வித்தையே இந்த வெற்றி இதனை இங்கே விரிவாகத் தருகின்றோம். இந்த உண்மைகளை உரக்க முழங்க ஆளில்லை. இதுதான் இந்தியா!


வேர்கள் வெளியீட்டகம்
8148129887
8248208144
52/1, மண்ணடி தெரு,
மண்ணடி,
சென்னை - 600001.






# ஈ.வி.எம். Vs ஜனநாயகம்

ஜனநாயகம் என்பது ஒரு கும்பலாட்சி **(mobocracy)** என்பது நம் கருத்து. அதில் பெரும்பான்மையினர் முடிவு செய்வதே சரி. சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கேற்ப வாழ்ந்து கொள்ளலாம். அதை மீறி அவர்கள் செயல்படுவார்களேயானால் அவர்கள் ஜனநாயகத்திற்கு எதிரானவர்களாகவே கருதப்படுவார்கள்.

இதை அறிஞர் அண்ணா அவர்கள் சற்று வேடிக்கையாகக் கூறுவார். ஜனநாயகத்தில் ஒரு பூனையை நிறுத்தி இது பூனையா, யானையா என்று ஓட்டெடுப்பு நடத்தினால் ஒருவேளை யானை என்று 51 வாக்குகள் பெற்றுவிட்டால் அதன் பின்னர் அந்த பூனை யானையாகவே கருதப்படும். இதற்கு மாற்றாக செயல்படுபவர்கள் ஜனநாயகத்திற்கு எதிரானவர்கள். பூனையை யானை என்று மாற்ற உங்களுக்கு தேவைப்படுவது பெரும்பான்மை (மெஜாரிட்டி) வாக்குகள் மட்டுமே.

ஒருவேளை இந்த ஜனநாயகத்தில் (கும்பலாட்சியில்) பெரும்பான்மையினர் நல்லவர்களாக இருந்தால், நல்லவை நடக்கலாம். பூனை பூனையாகவே இருக்கும், யானை யானையாகவே இருக்கும். நல்லவர்கள் ஆட்சிக்கு வரலாம். நல்லாட்சி நடக்கலாம். ஜனநாயகத்தை நம்பி இருப்பவர்களின் ஒரே நம்பிக்கை இதுதான்.

ஜனநாயகத்தை இன்னொரு விதமாக நையாண்டி செய்திருப்பார் அறிஞர் அண்ணா அவர்கள். பெரும்பான்மைக்கு தான் முக்கியத்துவம் தர வேண்டும் என்றால் இந்தியாவின் தேசியப் பறவையாக மயில் இருந்திருக்காது. காக்கை தான் இருந்திருக்கும் என்பார்.

இது ஒரு புறமிருக்க பெரும்பான்மையினர் விருப்பம் வேறு விதமான இருந்த போதும் கீழறுப்பு வேலைகள் மூலம் பெரும்பான்மையினரின் வாக்கை தாங்கள் பெற்றதாக மோசடி செய்து ஆட்சியை பிடிப்பது என்பதும் அதை ஜனநாயத்தின் பெயராலே நிகழ்த்துவதும் பெரும் வெட்கக்கேடு.

இந்த முறை நடந்த தேர்தலில் மோடி அரசை வீழ்த்த பல ஆயிரம் காரணங்கள் மக்கள் முன் இருந்தது. இருந்தாலும் மோடி வென்றிருக்கிறார். இது அவருக்கு எப்படி சாத்தியமானது?

இதற்கான விடையை ஆராய்வதற்கு முன் தேர்தல் நடைமுறைகள் என்னென்ன?

ஈ.வி.எம் எனப்படும் மின்னணு ஓட்டுப்பதிவு எந்திரத்தில் முறை கேடுகள் செய்யமுடியுமா? அப்படி செய்யப்பட்டதா?

இந்த எந்திரத்தை கையாளும் சாமானியர்களின் தவறுகளுக்கு அப்பாற்பட்டதா இது?

தொழில்நுட்ப ரீதியாக மின்னணு ஓட்டுப்பதிவு எந்திரத்தை ஹேக் செய்ய முடியும் என்பதை எப்படி நிறுவுவது?

வெறும் மின்னணு ஓட்டுப்பதிவு எந்திரங்களில் முறைகேடு செய்து மட்டுமே பிஜேபி ஆட்சியை பிடித்துள்ளதா? என்பது குறித்து ஆராய வேண்டியது அவசியமாகிறது.

**மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் (ஈ.வி.எம்.) தேர்தல் நடைமுறைகள்**

இந்த மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் இந்தியாவில் இரண்டு நிறுவனங்களிடமிருந்து மட்டுமே வாங்கப்படுகின்றன. ஒன்று பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் **(Bharat Electronics Limited)** மற்றொன்று

எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட். (Electronics Corporation of India Limited (ECIL)). இவை இரண்டும் பொதுத்துறை நிறுவனங்கள்.

இதற்கிடையே மனோரஞ்சன் ராய் என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் இந்த நிறுவனத்திடம் சில கேள்விகளை கேட்டிருந்தார். அதே கேள்விகளை அவர் இந்திய தேர்தல் ஆணையத்திடமும் கேட்டிருந்தார்.

## காணமல் போன 19 இலட்சம் வாக்குப்பதிவு இயந்திரங்கள்

அதில் தரப்பட்டிருந்த பதிலின் படி பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனம் இந்திய தேர்தல் ஆணையத்திற்கு 19,69,932 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை உற்பத்தி செய்து தந்துள்ளதாக கூறியுள்ளது. எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் நிறுவனம் 19,44,593 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை உற்பத்தி செய்து தந்துள்ளதாக கூறியுள்ளது.

ஆனால் இந்திய தேர்தல் ஆணையமோ பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 10,05,662 (பத்து இலட்சம் சொச்சம்) வாக்குப்பதிவு இயந்திரங்களை பெற்றுள்ளதாக கூறுகிறது.

அதேப்போல் இன்னொரு நிறுவனமாகிய எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 10,14,644 (பத்துலட்சம் சொச்சம்) இயந்திரங்களை மட்டுமே பெற்றுக்கொண்டதாக கூறியுள்ளது.

ஆக பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 9,64,270 (பத்து இலட்சம் சொச்சம்) எந்திரங்களும் எலெக்ட்ரானிக் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 9,29,949 (பத்து இலட்சம் சொச்சம்) எந்திரங்களும் ஆக மொத்தம் 18,94,219 (19 இலட்சம்) மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் இன்னும் இந்திய தேர்தல் ஆணையத்தால் பெறப்படவில்லை.

அப்படியானால் இந்த எந்திரங்கள் எங்கே தான் போனது? 19 இலட்சம் வாக்கு இயந்திரங்கள் எங்கே போனது?

இதைத் தான் கேள்வியாக எழுப்பி மும்பை உயர்நீதிமன்றத்தில் மனோரஞ்சன் ராய் பொதுநல வழக்கொன்றை தொடுத்தார். சாதாரணமாக இதை கேட்டால் இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தப்பி விடலாம் என்று எண்ணிய அவர் வேறுவிதமாக கிடுக்கிப்பிடி போட்டுள்ளார். அதாவது இந்த காணாமல் போயுள்ள 18,94,219 (பத்தொன்பது இலட்சம்) எந்திரங்களை வாங்கியதாக கணக்குக் காட்டி ரூ.116.55 கோடி ஊழல் செய்யப்பட்டுள்ளதாக அவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையம் கடந்த ஒரு வருடமாக இந்த வழக்கில் சரியான பதில் ஏதும் சொல்லாமல் இழுத்தடித்து வருகிறது.

<https://frontline.thehindu.com/cover-story/article27056139.ece>

## மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை கையாளும் தேர்தல் நடைமுறைகள்

பொதுவாக இந்த இயந்திரங்கள் விநியோக மையத்தில் பாதுகாப்பாக பூட்டி சீல் வைக்கப்பட்டிருக்கும். தேர்தல் நடப்பதற்கு முன்னால் தகுந்த அதிகாரிகளால் இந்த சீல் நீக்கப்பட்டு இந்த எந்திரங்கள் தேவையான இடங்களுக்கு அந்தந்த தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்படும். உதாரணத்திற்கு மைலாப்பூர் சட்டமன்ற தேர்தல் என்று வைத்துக்கொண்டால் மைலாப்பூர் தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு உட்பட்டு எத்தனை வாக்குச்சாவடிகள் உள்ளனவோ அந்த அளவிற்கும் .கூடுதல் கையிருப்பாக 10 சதவீதம் கூடுதலாகவும் அனுப்பி வைக்கப்படும்.

தேர்தல் நடத்தும் போது முதலில் இந்த எந்திரங்களை பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (பெல்) நிறுவன பொறியாளர்கள் ஆய்வு செய்து நன்றாக உள்ளதென்றால் அதற்கு தங்கள் கையொப்பமிட்டு சீல் வைப்பார்கள்.

அதன் பின்னர் மண்டல அலுவலர்கள் எத்தனை வேட்பாளர்கள் களத்தில் உள்ளனரோ அதற்கு ஏற்றவாறு அதில் கேண்டிடேட் செட்டிங் செய்து அதில் தங்கள் கையொப்பத்தை பதிவு செய்து காகிதத்தில் சீல் வைப்பார்கள்.

இதன் பின்னர் தேர்தல் நடக்கும் நாளுக்கு முன்னர் இந்த எந்திரம் பாதுகாப்புடன் வாக்குசாவடி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படும். அவரும் தேர்தல் கட்சி முகவர்களும் தேர்தல் நடக்கும் நாள் அன்று அதை மாதிரி வாக்குப்பதிவு நடத்தி பார்த்து சரியாக இருக்கிறதா என சரி பார்த்து தங்கள் கையொப்பமிட்டு காகித சீல் வைத்து தேர்தல் நடத்துவர்.

அதன் பின்னர் தேர்தல் முடிந்த பின்னர் அன்றைய மாலை இதே நடைமுறை பின்பற்றப்பட்டு காகித சீல் வைக்கப்பட்டு பின்னர் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

அங்கு மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு வாக்கு எண்ணிக்கை நடக்கும் அன்று இந்த காகித சீல் முத்திரைகள் சரியாக உள்ளதா என சரிபார்க்கப்பட்டு பின்னர் வாக்கு எண்ணப்படும்.

இதில் வாக்குச்சாவடி தலைமை அலுவலருக்கான பயிற்சி வகுப்புகளுக்காக சில மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் கையிருப்பில் இருந்து தரப்படுவதுண்டு. ஆனால் அது மிகக்குறைந்த அளவிலேயே வழங்கப்படுகிறது. இதனால் சரியாக பயிற்சி மேற்கொள்ள முடியவில்லை என ஆங்காங்கே குற்றச்சாட்டுகள் எழுவதுண்டு.

இப்படி மிகக்கடினமாக தேர்தல் வாக்குசாவடி அலுவலர்களுக்கே இந்த மின்னணு வாக்குச்சாவடி எந்திரங்களை கண்ணில் காட்டுவதில்லை தேர்தல் ஆணையம். ஆனால் சாதாரண மக்கள் இதை இந்தியா முழுவதும் கையில் வைத்து விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆக இத்தனை நடைமுறைகளை தாண்டி சாதாரண மக்களுக்கு சாமானியர்களுக்கு மின்னணு வாக்கு எந்திரங்கள் கையில் கிடைப்பது என்பது சாத்தியமே அல்ல. ஆனால் இது சாத்தியப் பட்டிருக்கிறது. சமூக தளங்களில் வெளிவந்த பல்வேறு வீடியோக்கள் மிகச்சாதாரணமான சாமானியர்கள் கையில் இந்த மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்கள் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருப்பதை வெட்ட வெளிச்சம் போட்டு காட்டின.

அப்படி சாத்தியப்பட்டிருக்கிறது என்றால் இதன் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்று விசாரிக்கப்பட வேண்டுமா? வேண்டாமா?

ஆனால் இதுவரை இப்படி அநாதையாக கிடைக்கப்பெற்ற மின்னணு வாக்கு எந்திரங்கள் குறித்து வழக்கேதும் பதியப்படவில்லை. யாரும் கைது செய்யப்படவில்லை.

சத்யம் டி.வி. தொலைக்காட்சி இப்படி ஒரு தலைப்பிட்டு விவாதம் நடத்தியது. குப்பைத்தொட்டியை தவிர மற்ற அத்தனை இடங்களிலும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் என்ற தலைப்பே அது.

<https://www.indiatoday.in/elections/lok-sabha-2019/ story/evm-manipulation-videos-on-twitter-1530716-2019-05-21>

<https://www.indiatimes.com/trending/wtf/days-before-election-results-videos-of-evms-stacked-in-cars-local-shops-go-viral-367647.html>

### மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் யாரும் தில்லுமுல்லு செய்ய இயலுமா?

நிச்சயமாக முடியும். உங்களுக்கு ஒரு உதாரணத்தை கூறினால் இதை எளிதில் விளங்கிக் கொள்ளலாம். உங்களிடம் ஒரு மின்னணு கடிகாரம் உள்ளது என வைத்துக்கொள்வோம். அதில் காலை 5 மணிக்கு அலாரம் வைத்துள்ளீர்கள் என வைத்துக் கொள்வோம். 5 மணிக்கு நீங்கள் அதைத் தொடவேண்டாம். அதுவாக 5 மணிக்கு அலாரம் அடிக்கத் தொடங்கி விடும்.

### குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு இயங்கும்படி செய்வது

இதுவே தான் மின்னணு வாக்குப்பதிவு எந்திரமும். நான் மேலே சொல்லியுள்ளது போல வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் கட்சி முகவர்கள் எல்லாம் இந்த மின்ன ணுவாக்கு எந்திரத்தை ஆய்வு செய்வது, மாதிரி வாக்குப்பதிவு நடத்தி சோதனை செய்வது எல்லாம் வாக்குப்பதிவு தொடங்கும் வரை தான். வாக்குப்பதிவு 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியப்பின் நடுவில் இந்த சோதனைகளை நீங்கள் செய்ய இயலாது.

காலை 9 மணிக்கு மேல் அல்லது 11 மணிக்கு மேல் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு வாக்கு விழ வேண்டும் என்று புரோகிராம் செய்யப்பட்ட ஒரு மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் அதன் வேலையை கனக்கச்சிதமாக செய்யும். அதை நடுவில் ஆய்வு செய்ய எந்த முகாந்திரமும் இல்லை. இது நாள் மற்றும் நேரத்தை கணக்கிட்டு முன்கூட்டியே செய்யப்படும் புரோக்ராம்.

இதில் ஒரு கேள்வி எழலாம். ஒரு குறிப்பிட்ட தொகுதியில் பிஜேபியின் வாக்காளர் வாக்குப்பதிவு எந்திரத்தில் எந்த இடத்தில் இடம் பெறப்போகிறார் என்பதை எப்படி முன்கூட்டியே அறிய இயலும். நிச்சயமாக அறிய இயலாது. அப்படியானால் எப்படி குறிப்பிட்ட வாக்காளருக்கு வாக்கு விழும்படி புரோக்ராம் செய்ய இயலும்.

இந்த கேள்விக்கான விடை சுலபமானது. எந்த வரிசையில் உள்ள வேட்பாளருக்கு வாக்குகள் விழும்படி செட்டப் செய்யப்பட்டுள்ளதோ அந்த வரிசையை பிஜேபி வேட்பாளருக்கு தந்து விட்டால் போதுமானது.

### குறிப்பிட்ட பட்டன்களை அழுத்தினால் இயங்கும்படி செய்வது

மற்றொரு வகை புரோக்ராம் ஒரு சில பட்டன்களை ஒன்று சேர்த்தோ அல்லது நீண்ட நேரமோ அழுத்துவதன் மூலம் செயல்பட செய்வது **(Trigger)**. உதாரத்திற்கு உங்கள் செல்போனில் உள்ள பவர் பட்டனை சாதாரணமாக அழுத்தினால் ஒன்றும் ஆகாது. அதுவே அதை நீண்ட நேரம் அழுத்தினால் செல்போன் ஆஃப் ஆகி ஆன் **(Restart)** ஆகும்.

இதேப்போல் ஒரு வாக்குச்சாவடியில் உள்ள களநிலவரத்தை கருத்தில் கொண்டு ஒரு நபரை வாக்களிக்கும் சாக்கில் உள்ளே அனுப்பி அந்த குறிப்பிட்ட ஒரு பட்டனை நீண்ட நேரம் அழுத்துவதன் மூலமோ அல்லது இரண்டு மூன்று பட்டன்களை அழுத்துவதன் மூலமோ ஒரு புரோகிராமை செயல்பட துவங்க வைக்க முடியும். இதை தொழில்நுட்பம் தெரிந்த வல்லுனர்கள் அனைவரும் ஒத்துக்கொள்கிறார்கள். வாக்குப்பதிவு

இயந்திரத்தில் உள்ள முதல் இரண்டு பட்டன்களையோ அல்லது வெவ்வேறு பட்டன்களையோ அழுத்தி பிடிப்பதன் மூலம் இப்படி ஒரு புரோக்ராமை துவங்க செய்யலாம்.

**ஒப்புகை வாக்கு சீட்டின் மூலம் கட்டுப்படுத்த இயலுமா?**

இப்போது இயல்பாகவே இன்னொரு கேள்வி எழும். அப்படியானால் இப்போது தான் ஒப்புகை வாக்குச்சீட்டு எந்திரமும் இணைக்கப்பட்டுள்ளதே என்ற கேள்வி. ஆனால் 2014 நாடாளுமன்ற தேர்தலில் எந்த ஒப்புகை சீட்டு எந்திரமும் **(voter-verified paper audit trail (VVPAT))** இணைக்கப் படவில்லை. தற்போதைய 2019 நாடாளுமன்ற தேர்தலில் தான் இது வாக்குப்பதிவு செய்யும் எந்திரத்துடன் இணைக்கப்பட்டது.

ஆனால் வேடிக்கை என்னவெனில் இந்த ஒப்புகை சீட்டுகள் எண்ணப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. அப்படியானால் இந்த கட்டமைப்பு எதற்கு என்று கேட்ட போது வாக்களிப்பவர்கள் தாங்கள் எந்த வாக்காளருக்கு வாக்களிக்கிறோம் என்பதை தெரிந்து கொண்டால் போதுமானது என ஒரு வேடிக்கையான பதிலை தேர்தல் ஆணையம் கூறிவிட்டது. ஒருவேளை ஒப்புகை சீட்டுக்கும் பதிவான வாக்குகளுக்கும் முரண் இருந்தால் என்ன செய்வது என்ற கேள்விக்கு தேர்தல் ஆணையம் பதிலளிக்கவில்லை.

**6 நாட்கள் தாமதிக்க முடியாது**

உடனே ஒட்டுமொத்த எதிர்கட்சிகளும் ஓப்பாரி வைத்துக்கொண்டு உச்ச நீதிமன்றத்தில் இந்த அநியாயத்திற்கு எதிராக முறையிட்டன. உச்சநீதிமன்றமும் விசாரித்தது. முதலில் எதிர் கட்சிகளின் வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் 5 சதவீத வாக்குப்பதிவு இயந்திரங்களில் உள்ள ஒப்புகை சீட்டுகள் சரிபார்க்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது.

மீண்டும் எதிர்கட்சிகள் ஒருங்கிணைந்து குறைந்தது 50 சதவீத வாக்குப்பதிவு இந்திரங்களாவது ஒப்புகை சீட்டுடன் சரி பார்க்கப்பட வேண்டும் என முறையிட்டன. உச்ச நீதிமன்றமும் இந்திய தேர்தல் ஆணையத்திடம் இதற்கு பதில் கேட்டது. இந்திய தேர்தல் ஆணையம் ஒரு ஏற்றுக்கொள்ள முடியாத பதிலை இதற்கு தெரிவித்தது. 50 சதவீத வாக்குப்பதிவு எந்திரங்களை சரிபார்க்க குறைந்தது 6 நாட்களாவது ஆகும். எனவே, அதற்கு வாய்ப்பில்லை என கூறியது. ஏற்றுக்கொள்ளவே முடியாத இந்த பதிலை உச்சநீதி மன்றம் ஏற்றுக்கொண்டது. 5 சதவீத வாக்குப்பதிவு இயந்திரங்களை ஒப்புகை சீட்டுடன் ஒப்பிட்டால் போதுமானது என உத்தரவிட்டுவிட்டது.

<https://www.thehindu.com/news/national/50-vvpat-verification-will-delay-lok-sabha-election-results-by-6-days-eci-tells-sc/article26673905.ece>

135 கோடி மக்கள் வாழும் இந்தியாவில் உள்ள ஜனநாயகத்தை நிலைநாட்ட ஆறு நாட்கள் தாமதம் ஒன்றும் பெரிதல்ல. நீங்கள் ஆறு நாட்கள் எடுத்துக்கொண்டே தேர்தல் முடிவை அறிவியுங்கள் என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அப்படி சொல்லாமல் 5 சதவீத ஒப்புகை சீட்டுகளை வாக்குப்பதிவு எந்திரத்துடன் சரிபார்த்தால் போதுமானது என்று கூறி விட்டது உச்சநீதிமன்றம்.

இப்போது இன்னொரு கேள்வி குறைந்த பட்சம் 5 சதவீத வாக்குப்பதிவு எந்திரங்களாவது சரி பார்க்கப்படும் தானே?

**5 சதவீத இயந்திரங்களில் முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டால்...?**

ஆம். நிச்சயம் சரிபார்க்கப்படும். ஆனால் ஒருவேளை தப்பு கண்டுபிடிக்கப்பட்டால் அது அந்த 5 சதவீத வாக்குப்பதிவு எந்திரங்களோடு முடிந்து விடும். அதற்காக தேர்தல் முடிவு பின்வாங்குதலோ அல்லது மற்ற தொகுதிகளிலும் மறுவாக்குப்பதிவோ எதுவும் நடத்தப்படாது. எனவே, 95 சதவீதம் பிஜேபியின் தகிடுதத்தங்களுக்கு பாதுகாப்பு கிடைத்து விடுகிறது.

இதையும் தாண்டி இந்த 5 சதவீத ஒப்புகை சீட்டுகள் எண்ணப்பட்ட தகவல்கள் தேர்தல் ஆணையத்தின் இணையத்தில் வெளியிடப் படவில்லை.

ஆனால் நாடு முழுவதும் 370க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை விட அதிகமான வாக்குகள் எண்ணப்பட்டுள்ளன. இது எப்படி சாத்தியம் என்பது புரியவே இல்லை என பல பத்திரிகைகள் கதறுகின்றன. ஆனால் ஆணவத்துடன் இதை சற்றும் சட்டை செய்யாமல் வெற்றி பெற்றதாக வெட்கம் இன்றி பிஜேபியினர் பிதற்றி வருகின்றனர்.

<https://www.thequint.com/news/india/lok-sabha-election-results-2019-mismatch-in-votes-polled-and-counted-in-evm-on-multiple-seats>

<http://www.puthiyathalaimurai.com/news/india/64620-evm-vote-count-mismatch-in-370-seats-and-ec-refuses-to-explain.html>

புதிய தலைமுறை பின்வருமாறு செய்தி வெளியிட்டுள்ளது:

“தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள தகவல்களை ஆய்வு செய்து சில விஷயங்களை குயிண்ட் வெளியிட்டுள்ளது. அதன்படி, 370க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வாக்குப் பதிவு இயந்திரங்களின் வாக்கு எண்ணிக்கை, பதிவான வாக்குகளின் எண்ணிக்கையுடன் ஒத்துப் போகவில்லை என்று தெரிகிறது. குறிப்பாக, தமிழகத்தைச் சேர்ந்த சில தொகுதிகளின் தகவல்களை வெளியிட்டுள்ளது அந்த இணையதள பத்திரிகை

தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள தகவல்களின்படி காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதியில் ஈவிஎம் இயந்திரத்தில் *12,14,086* வாக்குகள் பதிவாகி இருந்தன. ஆனால்*12,32,417* வாக்குகள் எண்ணப்பட்டன. அதாவது, *18,331* வாக்குகள் கூடுதலாக எப்படி வந்தன என்ற கேள்வி எழுகிறது. அதேபோல், தர்மபுரி தொகுதியில், ஈவிஎம் இயந்திரத்தில் *11,94,440* வாக்குகள் பதிவாகியிருந்தும் *12,12,311* வாக்குகள் எண்ணப்பட்டன. அதாவது, *17,871* வாக்குகள் கூடுதலாக இருந்துள்ளன. ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் ஈவிஎம் இயந்திரத்தில் *13,88,666* வாக்குகளும், எண்ணப்பட்டபோது *14,03,178* வாக்குகளும் இருந்தன. இதில், *14,512* வாக்குகள் கூடுதலாக இருந்தன.

அதேபோல், உத்தரப் பிரதேசத்தில் மதுரா தொகுதியில் ஈவிஎம் இயந்திரத்தில் *10,88,206* வாக்குகள் பதிவாகியிருந்த போது சுமார் *10,98,112* வாக்குகளும் எண்ணப்பட்டன. அங்கு, *9,906* வாக்குகள் கூடுதலாக இருந்துள்ளன. இந்தத் தகவல்கள் அனைத்து தேர்தல் ஆணையத்தில் இருந்து எடுக்கப்பட்டதாக அந்தச் செய்தி கூறுகின்றது. இந்தத் தகவல்கள் குறித்து தேர்தல் ஆணையத்திடம் கேட்டதாகவும், ஆனால் தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க மறுத்துவிட்டதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது"

ஆக இப்படி வாக்குப்பதிவிற்கும் வாக்கு எண்ணிக்கைக்கும் முரண்பாடுகள் இருந்த தொகுதிகளில் என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்றால் ஒன்றுமில்லை என்பதே பதில். தற்போது இந்த தகவல்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டதாக அறிய வருகிறோம்.


### வாக்குச்சாவடி தலைமை அதிகாரிகளின் தவறுகள்

பல வாக்குசாவடிகளில் மாதிரி வாக்குப்பதிவு செய்யப்பட்ட வாக்குகள் அழிக்கப்படாமலேயே வாக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதை சரி செய்ய சில இடங்களில் ஒப்புகை சீட்டுகள் எண்ணப்பட்டுள்ளன. ஆனால் பல இடங்களில் வாக்குசாவடி அதிகாரிகளே அதை சமன் செய்து அனுப்பி விட்டதாக தகவல்கள் கிடைக்கின்றன.

<https://www.thehindu.com/news/national/tamil-nadu/mock-poll-data-not-cleared-in-44-booths-ec-decides-to-count-only-vvpat-slips/article27090117.ece>

### மின்னணு வாக்குப்பதிவு இல்லாமல் வாக்குச்சீட்டுகள் மூலம் நடத்தப்பட்ட கர்நாடகா உள்ளாட்சி தேர்தல்

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் மூலம் நடத்தப்பட்ட நாடாளுமன்ற தேர்தலில் கிட்டத்தட்ட *52* சதவீத வாக்குகளை பெற்று *28* நாடாளுமன்ற இடங்களில் *25* இடத்தில் வெற்றி பெற்ற பிஜேபி அதற்கு அடுத்த வாரமே நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் அமோகமான வெற்றியை பெற்றுள்ளது. *1221* அறிவிக்கப்பட்ட இடங்களில் காங்கிரஸ் *509* இடங்களையும் ஜனதா தளம் *174* இடங்களையும் கைப்பற்றியுள்ளது. பிஜேபி *366* இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளது.




இந்த தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படாமல் வாக்கு சீட்டுகள்

ULB TYPE WISE STATE SUMMARY

| Sl. No. | ULB Type | Total Seats | Declared Seats | BJP | INC | JD(S) | BSP | NCP | CPI | CPI(M) | Independents | Others |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | City Muncipalities | 248 | 217 | 56 | 90 | 38 | 2 | 0 | 0 | 0 | 25 | 6 |
| 2 | Town Muncipalities | 783 | 714 | 184 | 322 | 102 | 1 | 0 | 0 | 2 | 102 | 1 |
| 3 | Town Panchayats | 330 | 290 | 126 | 97 | 34 | 0 | 0 | 0 | 0 | 33 | 0 |
| | Totals : | 1361 | 1221 | 366 | 509 | 174 | 3 | 0 | 0 | 2 | 160 | 7 |

பயன்படுத்தப்பட்டதே இதற்கு காரணம் என அனைத்து ஊடகங்களும் இப்போது செய்தி வெளியிடத் துவங்கியுள்ளன.

இதன் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடுகள் நிகழ்த்தியே பிஜேபி வெற்றி பெற்றுள்ளது உறுதியாகிறது. ஆனால் இது குறித்து பிரதான எதிர்கட்சியான காங்கிரஸ் எந்த கேள்வியும் எழுப்பாதது மட்டுமின்றி மோடியின் வெற்றிக்கு ராகுல் காந்தி வாழ்த்து தெரிவித்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மம்தா பானர்ஜி போன்ற ஒரு சிலரை தவிர்த்து வேறு யாரும் இதில் வாய் திறப்பதாக தெரியவில்லை.

**மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் மட்டும் தான் முறைகேடு செய்யப்பட்டதா?**

இது மிக முக்கியமான கேள்வி. வெறும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் மட்டும் முறைகேடு செய்து இந்த தேர்தலை பிஜேபி வென்றதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். சென்ற தேர்தலில் பிஜேபி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் முறைகேடு செய்தது என்று செய்திகள் வெளிவந்தவுடன் இந்த முறை அந்த ஒன்றை மட்டுமே வைத்துக்கொண்டு நாம் வென்று விட முடியாது என பிஜேபி உறுதியாக நம்பியது.

2014ம் ஆண்டு தேர்தலிலேயே அது வாக்குப்பதிவு எந்திரங்களைத் தாண்டி சில முறைகேடுகளை செய்தது. அது பலரால் இன்றுவரை கண்டுக் கொள்ளப்படவில்லை என்பது தான் வேதனை.

## வேண்டிய வாக்காளர்களை பல இடங்களில் சேர்ப்பது


இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பிஜேபியினரால் இந்த வேலை அமோகமாக நடத்தப்பட்டது. தேர்தல் கமிஷனின் அதிகாரிகளும் இதற்கு வெகுவாக துணை போனார்கள். 2014ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் லட்சக்கணக்கான புது வாக்காளர்கள் கடைசி நேரத்தில் எந்த வித ஆய்வுமின்றி சேர்க்கப் பட்டார்கள். இதன் பின்னர் இப்படி சேர்க்கப் படுவது தொடர்ந்தது.

ஒரே நபருக்கு ஒரே தொகுதியில் இரண்டுக்கும் மேற்பட்ட வாக்குகள், வெவ்வேறு தொகுதிகளில் பல வாக்குகள் என இவர்களின் பெயர்கள் சேர்க்கப்படுவது வெகு விமர்சையாக நடந்தது. இவர்களுக்கு தேவையானவர்கள் சேர்க்கப்பட்ட பின்னர், இப்படியும் முறைகேடு செய்யலாம் என்பது மற்ற கட்சிகளுக்கு தெரிய வந்த பின்னர் இந்த நடைமுறை தேர்தல் ஆணையத்தால் சற்று கடினப்படுத்தப்பட்டது.

2014ம் ஆண்டு தேர்தலின் போது எந்த வயதை சேர்ந்தவராக இருந்தாலும் வாக்காளர் பட்டியலில் எளிதாக சேர்க்கப்பட்ட நிலையில் தற்போது புதிய வாக்காளர்கள் அதாவது 18 வயது முதல் 25 வயது வரை உள்ள வாக்காளர்களை சேர்ப்பது மட்டும் எளிமைப் படுத்தப்பட்டுள்ளது.

25 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரை சேர்க்க வேண்டுமெனில் அவர் ஏற்கனவே ஏதாவது ஒரு தொகுதியில் உள்ள தனது பெயரை நீக்குவதற்காக நீக்கல் படிவம் 7ஐ தந்து அதற்கான ஒப்புகை சீட்டுடன் தான் படிவது 6ஐ தந்து புதிதாக சேர்க்க விண்ணப்பிக்க வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது.

ஆனால் 18 வயது முதல் 25 வயது வரையில் உள்ளவர்களுக்கு அவர்கள் புதிதாக வாக்காளர் பட்டியலில் இடம் பெற உள்ளவர்கள் என கருதி



| | | |
|---|---|---|
| பெயர்: வெங்கடாச்சலம் - தந்தை பெயர்: ராமச்சந்திரன் - வீட்டு எண்: 26-8 வயது: 77 பாலினம் :ஆண் (Photo is Available) | பெயர்: லட்சுமி - கணவர் பெயர்: வெங்கடாச்சலம் - வீட்டு எண்: 26-8 வயது: 71 பாலினம் :பெண் (Photo is Available) | பெயர்: மிஸ்சனு பிராசாத் பட்ராஸ் - தந்தை பெயர்: ஹரிலால் - வீட்டு எண்: 28 வயது: 37 பாலினம் :ஆண் (Photo is Available) |
| 163 RJE1052091 பெயர்: சீனிவாஸ் மல்லு - தந்தை பெயர்: உத்தம்ரெட்டி - வீட்டு எண்: 30 வயது: 56 பாலினம் :ஆண் (Photo is Available) | 164 RJE1052083 பெயர்: மீனாட்சி - கணவர் பெயர்: சீனிவாஸ் மல்லு - வீட்டு எண்: 30 வயது: 51 பாலினம் :பெண் (Photo is Available) | 165 RJE1052182 பெயர்: மீனாட்சி எம் ரெட்டி - கணவர் பெயர்: சீனிவாஸ் மல்லு - வீட்டு எண்: 30 வயது: 51 பாலினம் :பெண் (Photo is Available) |
| 166 RJE1124601 பெயர்: அவிஷா சாய் மல்லுரெட்டி - தந்தை பெயர்: சீனிவாஸ் மல்லு - வீட்டு எண்: 30 வயது: 28 பாலினம் :பெண் (Photo is Available) | 167 RJE1052174 பெயர்: அவிஷா சாய் - தந்தை பெயர்: சீனிவாஸ் மல்லு - வீட்டு எண்: 30 வயது: 28 பாலினம் :பெண் (Photo is Available) | 168 RJE0909630 பெயர்: இளங்கோவன் - தந்தை பெயர்: நல்வேந்திரண் - வீட்டு எண்: 31 வயது: 49 பாலினம் :ஆண் (Photo is Available) |
| 169 RJE0909051 பெயர்: ஜெயஸ்ரீ - கணவர் பெயர்: இளகோவன் - வீட்டு எண்: 31 வயது: 46 பாலினம் :பெண் (Photo is Available) | 170 RJE0909374 பெயர்: காயத்ரி - கணவர் பெயர்: இளங்கோவன் - வீட்டு எண்: 31 வயது: 24 பாலினம் :பெண் (Photo is Available) | 171 RJE1436880 பெயர்: கௌரி - தந்தை பெயர்: இளங்கோவன் - வீட்டு எண்: 31-6 வயது: 35 பாலினம் :பெண் (Photo is Available) |

அவர்களிடம் இப்போது படிவம் 7ஐ கேட்பது கிடையாது. அவர்கள் பெயரை பட்டியலில் சேர்க்க பெரிய அளவில் ஆய்வும் கிடையாது. அவர்களுடைய வயது சான்றிதழும் இருப்பிட சான்றிதழும் இருந்தால் போதுமானது.

இதை பயன்படுத்தி 18 வயது முதல் 25 வயது வரை உள்ள தங்களுக்கு வேண்டியவர்களை பல்வேறு இடங்களில் போலி இருப்பிட சான்றிதழ் தந்து ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வாக்காளர் பட்டியலில் பதிய வைக்கிறார்கள்.

இதனை ஆய்வு செய்திட வேண்டியவர்கள் பி.எல்.ஓ எனப்படும் பூத் அளவிலான அதிகாரிகள். பெயருக்கு தான் இவர்கள் அதிகாரிகளே தவிர பெரும்பாலும் இந்த பணியில் தற்காலிக பணியாளர்களும் கீழ்நிலை பணியாளர்களுமே நியமிக்கப்படுகிறார்கள். பெரும்பாலும் புதிதாக வரக்கூடிய விண்ணப்பங்களை நேரிடையாக அவர்களின் இருப்பிடத்திற்கு சென்று இவர்கள் ஆய்வு செய்வதே கிடையாது. இவர்களுக்கு அடுத் தடுத்த நிலையில் உள்ள மேற்பார்வையாளர்களும், உதவி தேர்தல் பதிவு அலுவலர்களும் இதனை ஆய்வு செய்வது கிடையாது. எனவே, ஒரு வாக்காளருக்கு இரண்டுக்கு மேற்பட்ட வாக்குகள் என்பது 18 முதல் 25 வயதிலான வாக்காளர்களுக்கு மிக சுலபமானது.

இதை நான் ஏதோ போகிற போக்கில் சொல்லவில்லை. ஒரு சில உதாரணங்களை மட்டும் உங்களுக்கு பானை சோற்றில் ஒரு சோறாக காட்ட விரும்புகிறேன்.

சென்னை மயிலாப்பூர் தொகுதியில் உள்ள ஒரே வார்டில் பதிவாகியுள்ள இரட்டை வாக்கை பாருங்கள். அருகருகே ஒரே வீட்டு எண்ணோடு வந்துள்ள இரண்டு பெயர்களையும் பாருங்கள். நான் குறிப்பிட்டுள்ள இந்த வாக்காளர்கள் பிஜேபி கட்சிக்காக இரண்டு முறை பதிந்தார்கள் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் ஒரே வார்டில் ஒருவருக்கு இரண்டு வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளது. அது நீக்கம் செய்யப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரே வார்டுக்குள்ளேயே அடுத்தடுத்து வந்துள்ள வாக்காளர்களையே ஆய்வு செய்து நீக்க முடியாதவர்கள் எப்படி வெவ்வேறு தொகுதிகளில் ஏமாற்று வேலைகள் செய்து பதிந்துள்ள வாக்காளர்களை கண்டிறிந்து நீக்க போகிறார்கள்.

இதைத்தடுக்க மிக எளிமையான வழி வாக்காளர் பட்டியலோடு ஆதாரை இணைக்கலாம். ஆனால் மற்ற விஷயங்களில் ஆதாரை இணைக்க முனைப்பு காட்டும் பிஜேபி இதில் முனைப்பேதும் காட்டவில்லை என்பதோடு அது சாத்தியமல்ல என்றும் தெரிவித்துள்ளது.

வாக்காளர் அட்டையோடு ஆதாரை இணைப்பது நல்ல யோசனை அல்ல என்று 2018ம் ஆண்டில் பிஜேபி அரசின் அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் திருவாய் மலர்ந்துள்ளார்.

<https://timesofindia.indiatimes.com/city/bengaluru/linking-aadhaar-voter-id-not-a-good-idea-union-it-minister/articleshow/63573627.cms>

# எதிரானவர்களின் வாக்குகளை நீக்குவது

**12 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்**

இது பெரிய அளவில் நடந்துள்ளது என்பது கர்நாடக முஸ்லிம்களால் முதலில் கண்டறியப் பட்டது. கர்நாடக சட்டசபை தேர்தலில் கிட்டத் தட்ட 12 இலட்சம் முஸ்லிம்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப் பட்டது கண்டறியப்பட்டது. பின்னர் இந்த ஆய்வு விரிவாக்கப்பட்டது.

அப்போது இந்திய அளவில் 12 கோடி வாக்காளர்கள் திடீரென்று நீக்கப்பட்டுள்ளார்கள் என்ற அதிர்ச்சியான தகவல் ஆய்வில் வெளிப்பட்டது. இவ்வாறு நீக்கப்பட்டவர்களிர் 3 கோடி பேர் முஸ்லிம்கள். 4 கோடி பேர் தலித்கள். குறிப்பாக உத்தரபிரதேசத்திலும் மஹாராஷ்டிராவிலும் இவ்வாறு நீக்கப்பட்டவர்கள் அதிகம். மஹாராஷ்டிராவில் 39,27,882 நபர்கள் இவ்வாறு நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் அதிகமானோர் தலித்கள். இது கிட்டத்தட்ட 4.6 சதவீத வாக்குகள்.

**ரேலேப் டெக்னாலஜி**

இதற்கான ஆய்வுகளை நிகழ்த்தியவர்கள் ரேலேப் டெக்னாலஜி **(Raylab Technologies)** என்ற ஒரு மென்பொருள் நிறுவனம். இந்த நிறுவனம் 800 சட்டமன்ற தொகுதிகளில் இந்த ஆய்வை மேற்கொண்டு இந்த உண்மைகளை கண்டறிந்துள்ளது.

இவர்கள் இந்த ஆய்வை மேற்கொண்ட விதம் அலாதியானது. இந்த நிறுவனத்தின் நிர்வாகிகளில் ஒருவரான காலித் ஷைஃபுல்லா என்ற மென்பொருள்

பொறியாளர் தான் எப்படி இந்த உண்மைகளை கண்டுபிடித்தார் என்பதை நமக்கு விவரிக்கிறார்.

கேரளா, பஞ்சாப், ஜம்மு-கஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள் ஆகியவற்றை தவிர்த்து மற்ற மாநிலங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறுகிறார். இதில் 10 தொகுதிகளில் கள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவிக்கிறார்.

**ஆய்வு செய்யப்பட்டது எவ்வாறு?**

இரண்டு விதமான தகவல்களை ஒப்பிட்டு பார்த்து தான் அவர்கள் இந்த உண்மையை கண்டறிந்தார்கள். அவர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்திலிருந்து மிக சமீபத்திய வாக்காளர் பட்டியலை தரவிறக்கம் செய்தார்கள். அது பி.டி.எஃப் கோப்பாக இருந்தது. இதனை டெக்ஸ்ட் கோப்பாக **(image format to text)** முதலில் மாற்றம் செய்தார்கள். அதன் பின்னர் டேடாபேஸ் கோப்பாக **(Excel format)** மாற்றம் செய்தார்கள். இதனை தகவல் தோண்டுதல் **(Data Mining, Collation and Analysis)** என்று கூறுவார்கள்.

**மக்கள் தொகை கணக்கெடுப்பு தகவலுக்கு மாற்றமாக இந்திய தேர்தல் ஆணைய தகவல்**

பின்னர் இதே போல் 2011 சென்சஸ் டேடாவையும் எடுத்துக் கொண்டார்கள். அதன் பின்னர் இரண்டு தகவல்களையும் ஒப்பிட்டு பார்த்தார்கள். அப்போது சென்சஸ் டேடாவில் ஒரே ஒரு நபர் மட்டும் வசிக்கும் வீடு என்பது 5 சதவீதம் என்பதை கண்டறிந்தார்கள். அதாவது 100 நபர்களை எடுத்துக் கொண்டால் அவர்களில் 5 பேர் எந்த வித ஒட்டும் உறவுமின்றி தனியாளாக இந்த சமுதாயத்தில் வாழ்ந்து வருபவர்கள். பின்னர் தேர்தல் ஆணையத்தில் இருந்து தரவிறக்கம் செய்த தகவலை ஆய்வு செய்ததில் அதில் 10 சதவீதத்திற்கு மேல் ஒரு வீட்டில் தனியாளாக இருப்பதாக பதிவுள்ளது என்பதை கண்டறிந்தார்கள். அதிலும் முஸ்லிம்கள் விஷயத்தில் இது 17 சதவீதமாக உள்ளதையும் அவர்கள் கண்டறிந்தார்கள்.

தேர்தல் ஆணையத்தின் தகவலில் ஒரு வீட்டில் ஒரேயொரு நபருக்கு மட்டும் வாக்கு இருந்த வீடுகளை சென்சஸ் தகவலில் ஆய்வு செய்த போது அங்கு ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் இருப்பது கண்டறியப்பட்டது. அப்படியானால் அந்த நபர்களின் பெயர்கள் எங்கு போனது. எனவே இவர்கள் தேர்தல் ஆணையத்தில் பழைய தகவல்களை ஆய்வு செய்த போது அதில் தற்போது நீக்கம் செய்யப்பட்டவர்களின் பெயர்கள் இருந்தன. 2014 தேர்தலில் அவர்கள் வாக்களித்திருந்தார்கள். தற்போது அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டது கண்டறியப்பட்டது.

**கள ஆய்வு**

மேலும் தன்னார்வு தொண்டு நிறுவனங்களின் உதவியோடு வீடு வீடாக சென்று செய்த கள ஆய்வில் வாக்காளர் பட்டியலில் நீக்கம் செய்யப்பட்ட நபர்கள் தங்களின் கைகளில் சென்ற முறை வாக்களித்த வாக்காளர் அடையாள அட்டையை வைத்திருந்தனர். எனவே, இது சில நீக்கம் செய்யும் அதிகாரமுள்ள தேர்தல் அதிகாரிகளால் பிஜேபிக்கு பிரயோஜனப்படும் வகையில் நிகழ்த்தப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்தனர்.

இது நடத்தப்பட்டுள்ள விதத்தை நோக்கும் போது வேண்டுமென்றே செய்துள்ளது தெரிய வருகிறது என ஆய்வுக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

**வாக்காளர்களை நீக்க நேரடியாகவும் இணையத்திலும் பதிவு செய்த பிஜேபியினர்**

வாக்காளர் பட்டியலில் இருந்து இவ்வாறு நீக்கம் செய்யப்பட்ட வாக்காளர்களை நீக்கம் செய்ய வேண்டும் என கோரி பிஜேபியை சேர்ந்த சிலர் படிவம் 7ஐ சமர்ப்பித்துள்ளதாக கள ஆய்வில் தெரிய வருகிறது. இதே போன்ற வாக்காளர்களை நீக்கம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் ஆன்லைன் இணையத்தின் வாயிலாகவும் தேர்தல் கமிஷனுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த கோரிக்கைகளை அப்படியே ஏற்று எந்த ஆய்வும் செய்யாமல் 12 கோடி மக்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

வைகறை வெளிச்சம் வாசகர் வட்டத்தில் உள்ள ஒருவரின் பெயரும் இப்படி இணையதளத்தில் வேறு சிலர் பதிவு செய்ததின் வழியாக வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. அவர் தற்போது தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தேர்தல் ஆணையத்திடம் இது எவ்வாறு நடத்தப்பட்டது என்ற விவரத்தை கோரியுள்ளார்.

**வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்படிவம் 7**

பொதுவாக வாக்காளர் பட்டியலில் இருந்து பெயரை நீக்கம் செய்ய வேண்டும் என்றால் படிவம் 7 பெறப்பட வேண்டும். ஒரு சட்டமன்ற தொகுதியை விட்டு மற்றொரு சட்டமன்ற தொகுதிக்கு குடிபெயரும் நபர்கள் இந்த படிவம் 7ஐ பூர்த்தி செய்து தந்து அதன் ஒப்புகை சீட்டை புதிதாக சென்ற இடத்தில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலத்தில் அளிக்க வேண்டும். அதன் பின்னரே அவரின் புதிதாக வாக்காளர் சேர்க்கும் படிவம் 6 ஏற்றுக்கொள்ளப்படும்.

**பெயர் நீக்கம் செய்யப்படுவதற்கான நடைமுறைகள்**

படிவம் 7 பெறப்படும் போது பி.எல்.ஓ. எனப்படும் வாக்குசாவடி அளவிலான அலுவலர் அதனை முதலில் நேரிடையாக களத்திற்கு சென்று

ஆய்வு செய்து உறுதியானால் அறிக்கை அளிப்பார். இதன் பின்னர் மேற்பார்வையாளரின் ஒப்பம் பெற்று உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர் **(Electoral Registration Officer)** ஆகியோரின் ஒப்பம் பெற்று சம்பந்தப்பட்ட வாக்காளர் பெயர் நீக்கப்படுவதற்கான அறிவிப்பை அவருடைய வீட்டு முகவரியில் ஒட்டி இதற்கு ஏதாவது எதிர்ப்பு தெரிவிப்பதெனில் ஒரு வாரம் அல்லது 15 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். எதிர்பேதும் பெறப்படவில்லையெனில் அதன் பின்னரே அவரின் பெயர் நீக்கப்பட வேண்டும். ஆனால் இந்த நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படாமலே 12 கோடி வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கிறார் காலித்.

வாக்காளர் பட்டியலில் ஒரு சிலரின் பெயர் இடம் பெறாமல் போவது நடப்பது தான் என்றாலும் இந்த முறை நடந்திருப்பது அசாத்தியமானது. மோடிக்கு எதிராக வாக்களிக்கக்கூடிய 12 கோடி வாக்காளர்கள் எதற்காக வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் என்பது உங்களுக்கே புரிந்திருக்கும். எதிர்கட்சிகளும் இந்த விஷயத்தில் வாய்திறக்காமல் மௌனம் காப்பது ஏன் என்பது தான் புரியவில்லை.

**20 சதவீத வாக்குகளை நீக்கி விட்டு மோடி பெற்ற வெற்றி மோசடியா? இல்லையா?**

இந்த முறை 2019 நாடாளுமன்ற தேர்தலில் தகுதி பெற்ற வாக்காளர்களின் எண்ணிக்கை 908712040. (கிட்டத்தட்ட 91 கோடி) வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 607361415 (கிட்டத்தட்ட 61 கோடி). வாக்காளர்கள் எண்ணிக்கையோடு ஒப்பிட்டால் நீக்கப்பட்ட 12 கோடி வாக்களர்கள் என்பது 13.2 சதவீதம். வாக்களித்தவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டால் 20 சதவீதம். எனவே, பிஜேபிக்கு எதிராக வாக்களிக்கக்கூடிய 20 சதவீத வாக்குகளை நீக்கிவிட்டு மோடியால் இந்த வெற்றி ஈட்டப் பட்டுள்ளது. நீக்கப்பட்ட 12 கோடி வாக்காளர்களின் வாக்குகளை சேர்க்க எந்தவித முயற்சியும் பெரும்பாலான எதிர்கட்சிகளால் மேற்கொள்ளப்பட வில்லை என்பது வெட்கக்கேடு.

**கோத்ராவில் 258 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி**

குஜராத்தில் தான் ஆய்வுக்குழுவினரால் முதல் கட்ட களஆய்வு செய்யப்பட்டது. கடந்த சட்டமன்ற தேர்தலில் அங்கு 16 சட்டமன்ற தொகுதிகளில் 3000க்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. குஜராத்தில் பிஜேபி வெற்றி பெற காரணமாக இருந்த இரயில் எரிப்பு கலவரம் நிகழ்த்தப்பட்ட கோத்ரா தொகுதியில் பிஜேபி வெறும் 258 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. இங்கு நடத்தப்பட்ட ஆய்வில் 1800 முஸ்லிம் வீடுகளில் ஒரே ஒருவரின் பெயர் மட்டுமே வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தது.

<http://caravandaily.com/10-lakh-muslims-17-lakh-dalits-names-of-40-lakh-voters-in-maharashtra-missing-justice-retd-bg-kolse-patil/?fbclid=IwAR1e2FXVgxyc1XgNufLmtXjBAXB-njwLDXS9YAR0G-dHpqs2ICSYB5icA9k>

<https://frontline.thehindu.com/cover-story/article26781550.ece>

**குடிமக்களின் தேசிய பதிவேடு (NRC)**

இதற்கிடையே இப்படி வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களை சத்தமில்லாமல் நாட்டின் பிரஜைகளே கிடையாது என அறிவிக்கும் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியே அஸ்ஸாமில் 40 இலட்சம் முஸ்லிம்களை நாட்டின் குடிமக்கள் அல்ல என குடிமக்களின் தேசிய பதிவேட்டில் (ழிஸிசி) இருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த மக்கள் இப்போது அதற்கான தீர்ப்பாயத்தை நாடி வருகின்றனர்.

இதே பாணியில் நாட்டில் உள்ள முஸ்லிம்களையும் தலித்களையும் நாட்டின் பிரஜைகள் அல்ல என அறிவிக்கும் திட்டத்தின் முதற்கட்டமாகவே வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆய்ந்தறியும் அனைவரும் உடனடியாக பெயர் நீக்கம் செய்யப்பட்ட முஸ்லிம்களை உடனடியாக வாக்காளர் பட்டியலில் சேர்க்க ஆவண செய்திட முன் வரவேண்டும்.

**-ந.நி**

வைகறை வெளிச்சம்
வாசகர்கள் தங்களது
சந்தாக்களை புதுப்பித்துக்
கொள்ளுமாறு அன்போடு
கேட்டுக் கொள்கிறோம்.



## தோப்பில்
# முஹம்மது மீரான்
## *சமுதாயப் பிணியகற்றிய சாகித்ய மருத்துவர்*

“தமிழில் சாகித்ய அகாடமி விருது பெற்ற முதல் முஸ்லிம்” எனும் பெருமை பெற்ற தோப்பில் முஹம்மது மீரான் அவர்கள் இந்தியாவின் முனையாகிய குமரி மாவட்டத்தின் தென்மேற்கு கரையருகே ஆர்ப்பரிக்கும் அரபிக் கடலின் அலைகளால் அடிவருடப்படும் வண்ணம் அமைந்திருக்கும் தேங்காய்ப் பட்டிணம் என்னும் அழகிய சிற்றூரில் 1944இல் பிறந்தார்.

இவ்வூரை நேரில் கண்டு களித்த கவிக்கோ அப்துல் ரஹ்மான் குறிப்பிட்டது போல் தமிழ் மண்ணிலுள்ள ஐவகை நிலங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நால் வகை நிலங்களும் ஒருங்கே அமையப் பெற்றிருப்பது இவ்வூரின் தனி சிறப்பாகும். பரந்து விரிந்த அரபிக் கடல் தெற்குத் திசையிலும், விண்ணளாவி நிற்கும் மலைகள் கிழக்குத் திசையிலும் எல்லைகளாய் அமைந்து இயற்கை எழில் கொஞ்சும் இவ்வூர் தான் தோப்பில் முஹம்மது மீரானின் கதைக் களமாகும்.

ஆங்கிலம் படிப்பது ஆகாது என்ற கருத்து ஆன்மீகத்தின் பெயரால் கூறப்பட்ட காலத்திலேயே ஆங்கிலம் படித்த குடும்பத்தில் பிறந்த தோப்பில் மீரான் அ ந் நாளிலேயே இளங்கலை பட்டம் பெற்றார். எழுத்துத் துறையில் அடியெடுத்து வைத்து பன்னூற்றுக் கணக்கான சிறு கதைகளை முஸ்லிம் முரசு, பிறை, மதிநா போன்ற மாத இதழ்களில் எழுதினார். இந்தச் சிறுகதைகள் “அன்புக்கு முதுமை இல்லை”, “ஆனந்த சயனம் காலனி”, “தங்கரசு”, “ஒரு குட்டித் தீவின் வரைபடம்”, “ஒரு மாமரமும் கொஞ்சம் பறவைகளும்”, “தோப்பில் முஹம்மது மீரான்” சிறுகதைள் ஆகிய பெயர்களில் 6 தொகுப்புகளாக வெளி வந்துள்ளன. ஆனந்த சயனம் காலனி எனும் இவரின் ஒரு சிறு கதை 11ஆம் வகுப்பு பாட நூலில் இடம் பெற்றது. மேலும் இந்த சிறுகதை இந்திய கிளாசிக் சிறு கதைகள் வரிசையில் தூர்தர்ஷனில் ஒளிபரப்பப்பட்டது. தன்னாட்சிக் கல்லூரிகளில் தமிழ் பகுதி - 1க்கான பாட நூலிகளில் இவரின் சிறு கதை தொகுப்புகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு கதை இடம் பெற்றுள்ளன. இவரின் சிறு கதைகளிலும் நாவல்களிலும் தேங்காய்ப் பட்டினத்தின் மலையாள மணங்கமழும் வட்டார வழக்குச் சொற்கள் நிரம்பித் ததும்பி நிற்கும்.



ஆலிம் கவிஞர்
**தேங்கையார்**

இவர் முஸ்லிம் முரசில் தொடராக எழுதிய “ஒரு கடலோர கிராமத்தின் கதை” தான் இவர் எழுதிய முதல் நாவலாகும். இந்த

நாவலை வெளியிட தொடக்கத்தில் எந்தப் பதிப்பகமும் முன் வராததால் தன் மனைவியின் பெயரில் “ஜலீலா பதிப்பகம்” என்று ஒரு பதிப்பகத்தை நிறுவி அதன் மூலம் தன் சொந்த செலவிலேயே இந்த நாவலை வெளியிட்டார். தேங்காய்ப் பட்டிணத்திலேயே இதன் வெளியீட்டு விழாவை நடத்தினார். ஆனால் ஊர் மக்களின் ஒத்துழைப்பு போதிய அளவில் இல்லை. இந்நிலையில் அவரை ஊக்குவித்து உற்சாகப் படுத்துவதில் எந்தன் பங்கு முக்கிய இடம் பெற்றது.

வெளிவந்த நாவல் நூல் பிரதிகள் விற்பனை ஆகாமல் வீட்டிலேயே சில ஆண்டுகள் புழுதி படிந்து தேங்கிக் கிடந்தன. இதனால் விரக்தி அடைந்த தோப்பிலார் இடத்தை அடைக்கும் இந்த நூல்களை எரித்து விடலாமா? என்று கூட எரிச்சலடைந்தார். இ ந் நிலையில் இவர் இளைய மகன் அவரை நோக்கி, வேண்டாம் வாப்பா. பின்னாளில் ஒரு நாள் இதற்கு வாய்ப்பு வரும் என்று கூறினார்.

இ ந் நிலையில் திருவனந்தபுரத்தில் வாழ்ந்த தமிழ் எழுத்தாளர் ஆர். மாதவன் கொடுத்த ஆலோசனையின் அடிப்படையில் சில முகவரிகளுக்கு நூல்களை அனுப்பி வைத்தார். அதற்குப் பிறகு சில நாளிதழ்களில் இந்நூலின் விமர்சனங்கள் வெளி வந்தன. அதை ஒட்டி அதிராம் பட்டிணம் காதிர் முகைதீன் கல்லூரி தமிழ் பேராசிரியர் கலீல் ரஹ்மான் அவர்களின் முயற்சியால் முதன் முதலாக கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ் முதுநிலை வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு இந்தக் கடலோர கிராமத்தின் கதை எனும் நூல் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து சென்னை பல்கலைக் கழகத்தில் முதலாமாண்டு இளநிலை வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் துணைப்பாட நூலாக இது ஆக்கப்பட்டது. தமிழ் நாடு கலை இலக்கிய பெருமன்றம் சிறந்த நாவலுக்குரிய பரிசை இந்நூலுக்கு வழங்கியது. யுனேஸ்கோ சார்பாக தென் இந்திய மொழிகள் நிறுவனத்தால் எம்.விஜயலெட்சுமி என்பவர் மூலம் இந்த நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, அதைத் தொடர்ந்து சூர நாடு ரவி என்பவர் இதை மலையாளத்திலும், சேஷ நாராயணன் கன்னடத்திலும், எந்திரஜிலு தெலுங்கிலும் இந்த நூலை மொழி பெயர்த்தனர்.

தோப்பிலாரின் இரண்டாவது நாவல் “துறைமுகம்” என்பதாகும். இது, நேஷனல் புக் டிரஸ்ட் ஆஃப் இந்தியா என்ற மத்திய அரசின் நிறுவனத்திற்காக எச்.பாலசுப்ரமணியன் என்பவரால் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டது. அதற்குப் பின் சூர நாடு ரவி மலையாளத்தில் இந்த நாவலை




மொழிபெயர்த்தார். மத்திய நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரம் அவர்களின் குடும்ப நிறுவனம் இந்த நாவலுக்கு இலக்கிய சிந்தனை விருது வழங்கியது.

இவரின் மூன்றாவது நாவல் “கூனந்தோப்பு” என்பதற்கு தமிழ் நாடு அரசு சிறந்த நாவலுக்கான பரிசு வழங்கி கவுரவித்தது. இதை எம். விஜயலெட்சுமி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். டாக்டர் கோபால பணிக்கர் இதை மலையாளத்தில் மொழி பெயர்த்தார். இந்த நாவலின் தனிச் சிறப்பு என்னவென்றால், இதை மலையாளத்தில் மொழிபெயர்த்தவர் கூட இந்த மொழிபெயர்ப்புக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றார்.

தோப்பிலாரின் நான்காவது நாவலாகிய “சாய்வு நாற்காலி” என்ற நூலுக்கு 1997ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. மலையாளம், இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிவந்துள்ள இந்த நாவல் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க பரிசையும், சென்னை அமுதமொழிகள் அறக்கட்டளையின் பரிசையும் பெற்றது. இந்த நாவலின் காட்சிகளை மத்திய அரசின் தொலைக்காட்சி நிறுவனமாகிய தூர்தர்ஷன் பல வாரங்களாக தொடர்ந்து ஒளிபரப்பி வந்தது. இவரின் ஐந்தாவது நாவல் “அஞ்சு வண்ணம் தெரு”

என்பதாகும். குடியேற்றம் என்பது இவரின் ஆறாவது நாவலாகும். தமிழ், மலையாளம் ஆகிய இரு மொழிகளுக்கும் இணைப்புப் பாலமாக அமைந்த தோப்பில், முஸ்லிம் முரசு ஆசிரியர் செய்யிதினா ஹசன் எழுதிய "மெஹ்ஜபீன்" என்ற சரித்திர நாவலை தமிழிலிருந்து மலையாளத்தில் மொழி பெயர்த்தார். இதைப்போல் "ஹூஸ்னுல் ஜமால்" என்ற புகழ்மிக்க மலையாள காவியத்தை தமிழில் நாவலாக மொழிபெயர்த்து வெளியிட்டார். மேலும் "தெய்வத்தின் கண்ணே", "வைக்கம் முஹம்மது பஷீர் வாழ்க்கை வரலாறு" ஆகிய நூல்களையும் மலையாளத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்தார்.


இவரின் ஆக்கங்களை ஆய்வு செய்து மூன்று பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். அவர்களின் முதலாவது, சென்னை புதுக் கல்லூரி பேராசிரியர் செய்யது அஜீஸ் மீரான் என்பவர். "தோப்பில் முஹம்மது மீரான் நாவல்கள் ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் ஆய்வேடு சமர்ப்பித்து சென்னை பல்கலைக்கழகத்தில் **1997**ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார்.

அதற்குப் பின் மதுரை அமெரிக்கன் கல்லூரி பேராசிரியர் எவாஞ்ஜலின் மனோகரன் என்பவர், "தோப்பில் முஹம்மது மீரான் படைப்புகள் ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் ஆய்வேடு சமர்ப்பித்து மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் **2001**ம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார்.

தஞ்சை அதிராம்பட்டினம் காதிர் முகைதீன் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் ஏ.கலில் ரஹ்மான் என்பவர், "தோப்பில் முஹம்மது மீரான் படைப்புக் கலை" எனும் தலைப்பில் ஆய்வேடு சமர்ப்பித்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் **2012** ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றார்.

பதினாறாம் நூற்றாண்டில் இந்திய கிழக்கு, மேற்கு கடற்கரைப் பகுதிகளில் கடலை ஆண்டு வந்த மரைக்காயர்களுக்கும் கடல்வழி ஆதிக்கத்தை ஒடுக்கி, கடல் வணிகத்தில் மேலாண்மையை நிறுவ முயன்ற ஆங்கிலேயர்களுக்கும் நடந்த வீரம் செறிந்த உரிமைப்போரை விவரிக்கும் தோப்பில், "குடியேற்றம்" என்ற நாவலை பாண்டிச்சேரி சாரதா கங்காதரன் கல்லூரியின் பேராசிரியர். பிரபா முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்து கொண்டிருக்கின்றார்.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகப் பாடத் திட்டக் குழுவின் உறுப்பினராகவும், சாகித்ய அகாடமி ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், மத்திய அரசு நிறுவனமான நேஷனல் புக் டிரஸ்டின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், சென்னை தொலைக்காட்சியின் மதிப்பீட்டுக் குழு உறுப்பினராகவும், தேசிய அளவில் இலக்கியப் பரிசுக்குரியவர்களைத் தேர்வு




செய்யும் பல்வேறு குழுக்களில் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். இந்த அளவுக்கு எழுதுகோலின் வல்லமையால் ஏற்றம் பெற்ற தோப்பில் முஹம்மது மீரான், எளிமை கோலத்தின் உச்சத்தில் இருந்தார். அவரை பார்க்கும் எவரும் இவ்வளவு புகழ் பெற்ற தோப்பில் முஹம்மது மீரான் இவரா? என்று வியப்படைவார்கள்.

ஒருமுறை நான் அவரிடம், "வைரமுத்து போல், வைகோ போல் நீங்கள் ஒரு ஜிப்பாவை அணிந்தால் என்ன?" என்று கேட்டேன். அதற்கு அவர், "நான் ஒரு நாடன் (நாட்டுப்புற) எழுத்தாளன். இப்படித்தான் இருக்க விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டார். அதாவது சந்தன நிரத்திலேயே அரைக்கை சட்டை, சாதாரண வேட்டி இதுதான் தோப்பிலின் தோற்றம்.

தோப்பில் முஹம்மது மீரான் சமுதாயத்தில் புரையோடிப் போன மூடப்பழக்க வழக்கங்களை மண்மூட செய்யும் சீர்திருத்தப் பணியை தன் எழுதுகோல் மூலம் ஆற்றினார். இவர் சமூக பிணி அகற்றும் ஒரு மகத்தான மருத்துவர் என்றால் அது மிகையல்ல. இவரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அரசியல் கட்சித் தலைவர்களான மு.க.ஸ்டாலின், வைகோ, டாக்டர்.ராமதாஸ், திருமாவளவன் ஆகியோர்களில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்ட இரங்கல் வரிகள் குறிப்பிடத்தக்கது.

அவர் தன் இரங்கல் செய்தியில், "நவீன தமிழ் இலக்கியத்துக்கு சிறப்பான பல படைப்புகளை வழங்கி சாகித்ய அகாடமி விருது பெற்ற தோப்பில் முஹம்மது மீரான் மறைவு இலக்கிய உலகத்திற்கு பேரிழப்பாகும். இந்த மண்ணில் தமிழ்ப் பண்பாட்டுடன் இரண்டறக் கலந்த முஸ்லிம்களின் வாழ்க்கையை தன் எழுத்துக்கள் மூலம் பதிவு செய்து மத நல்லிணக்கத்தின் படைப்பாளியாக அவர் திகழ்ந்தார்" என்று குறிப்பிட்டார்.

எல்லாம் வல்ல இறைவன் மறைந்த தோப்பில் முஹம்மது மீரானின் மறுமை வாழ்வை மகிழ்வாக வைப்பானாக. அவர் வாழ்வில் மேற்கொண்ட இஸ்லாமிய ஒழுக்க பண்பாட்டு அரசியலை ஏற்றுக் கொள்வானாக.




## இலங்கை குண்டுவெடிப்பு!

# வேட்டையாடப்படும் முஸ்லிம்கள்!!

இலங்கை குண்டுவெடிப்பு எதற்காக நடத்தப்பட்டதோ அது மிக சிறப்பாக இலங்கை முழுக்க சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆம், முஸ்லிம்களுக்கு இனி இலங்கையில் பாதுகாப்பே இல்லை என்ற சூழலை உருவாக்கியுள்ளது இந்த குண்டுவெடிப்பு. முஸ்லிம்கள் மீது கலாச்சார தாக்குதல் நிகழ்த்தப்படுவதோடு மட்டுமல்லாமல் அவர்களை ஒதுக்கும் அரசியல் நடந்து வருகிறது.

இலங்கையில் நடைபெற்ற குண்டுவெடிப்பின் சூழ்ச்சியை அறிந்து கொள்ள தமிழகத்திலுள்ள கோவை குண்டுவெடிப்புக்கு பின்னுள்ள சூழ்ச்சியை அறிந்து கொள்வது அவசியம். கோவை குண்டுவெடிப்புக்கு பிறகு கோவை வாழ் முஸ்லிம்கள் இன்று இலங்கையை போலான ஓர் நிலையையே சந்தித்தார்கள். அதன் பிறகு முஸ்லிம்களின் பல ஆண்டு கால முயற்சி மூலம் சகல நிலைக்கு வருவதற்கான முயற்சி தற்போது வரை நடந்து வருகிறது. இந்த குண்டுவெடிப்பில், முஸ்லிம்களை குற்றவாளியாக்கத் துடிக்கும் பாசிச சக்திகள் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் " கோவை கலவரத்தின் முதல் சாட்சியம்" என்ற நூலின் வழியாக அப்போதைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த அப்துல் நாசர் வெளிக்கொண்டுவந்தார்.

இந்த நூலை முஸ்லிம்கள் படிக்க வேண்டியது அவசியம். அப்போது தான் தமிழகத்தல் கூட முஸ்லிம்கள் மீது அரசு நிகழ்த்திய சூழ்ச்சி தெரிய வரும். கோவை குண்டுவெடிப்புக்கு முன்பே உளவுத்துறைக்கு குண்டுவெடிக்கும் தகவல் தெரியும். அதுமட்டுமல்ல குண்டுவெடிப்புக்கு உளவுத்துறைக்கு நேரடியான தொடர்பு இருக்கிறது. குறிப்பாக முஸ்லிம்களை இந்த குண்டுவெடிப்புக்காக திட்டமிட்டு பயன்படுத்தினார்கள். கோவை குண்டுவெடிப்புக்கான குண்டுகள் தெருக்களில் தயாரிக்கப்பட்டது. அதனை பார்வையிட்ட ஒரு உளவுத்துறை அதிகாரி, இதையெல்லாம் நீங்க செய்யனும் அது தான் அவர்களுக்கான பதிலடி என்று சொல்லிவிட்டு சென்றார். குண்டுவெடிப்பு திட்டமிட்டபடி நடத்தப்பட்டது. காவல்துறையினரும் திட்டமிட்டபடி குண்டுவெடிப்பை பயன்படுத்தி ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் பாசிச பயங்கரவாதிகளுடன் இணைந்து சூரையாடினர். முஸ்லிம்களை பொது சமூகத்திலிருந்து பிரிக்க இந்த குண்டுவெடிப்பு சூத்திரதாரிகளாக இருந்தவர்கள் உளவுத்துறையினரே.

கோவை ஓர் உதாரணம் தான். முஸ்லிம்களுக்கு எதிராக சிந்திக்கும் அதிகாரவர்க்கத்தினர் மூஸ்லிம் பெயர் கொண்ட ஒருவரை பயன்படுத்திக் கொண்டு ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்கெதிராக மிகப்பெரும் சூழ்ச்சியை நிகழ்த்தி விடுகின்றனர். அப்படியொரு சூழ்ச்சியே இலங்கையில் நிகழ்த்தப் பட்டிருக்கின்றது. அதற்கு ISIS எனும் மந்தையாடுகள் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

**சஹ்ரான் உளவுத்துறையின் கையாள்**

இலங்கையில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு சூத்திரதாரியாக சொல்லப்படுகின்றவன் சஹ்ரான் எனும் முஸ்லிம் பெயர் தாங்கியவன். இவன் தான் இவ்வளவு பெரிய சர்வதேச குண்டுவெடிப்பை நிகழ்த்தினான் என இலங்கை அரசு கூறுகிறது. ஆனால், இது எந்தளவுக்கு உண்மையாக இருக்க முடியும்?... சஹ்ரான் போன்ற நபர்கள் புதிதாக தோன்றக்கூடியவர்கள் அல்ல. இதைப்போல பல சஹ்ரான்களை உருவாக்கியவர்கள் நமது இந்திய அரசு ஜாம்பவான்கள் அதில் ஒருவன் தான் காஷ்மீரை சேர்ந்த ஜாகீர் மூசா என்பவன்.

காஷ்மீரில் 2017ம் ஆண்டு கிலாபத் ஆட்சியை அமுல்படுத்த வேண்டும், அதற்கு எதிராக பேசும் முஸ்லிம்களையும் கண்ட இடத்தில் கொல்லுங்கள் என்று வெறுப்பு பிரச்சாரத்தை இஸ்லாத்தின் பெயரில் செய்து வந்தவன் ஜாகீர் மூசா. கிட்டத்தட்ட இலங்கை சஹ்ரானை போலவே. ஆனால், இந்த பிரச்சாரம் காஷ்மீரிகளிடத்தில் பலிக்கவில்லை. காஷ்மீரில் உள்ள போராளி குழுக்கள் இந்த ஜாகீர் மூசா என்பவன் இந்திய உளவுத்துறையின் கையாள். அதனால் அவனை யாராவது கண்டால் பிடித்து வைத்துக்கொள்ளுங்கள் என மக்களிடையே பிரச்சாரம் செய்தது.

இந்த சதித்திட்டத்தை காஷ்மீரக மக்கள் இல்லாமல் ஆக்கினர். ஜாகீர் மூசா ஒரு இந்திய உளவுத்துறையின் கையாள் அவனை பொருட்படுத்தவேண்டாம் என்று எல்லோருக்கும் செய்தியை எடுத்து சென்றார்கள். இதே கதை தான் சஹ்ரானுக்கும். சஹ்ரான் வெளிப்படையாக குண்டு வைப்பது, வாள் கொண்டு கழுத்தறுப்பது என முஸ்லிம்களுக்குகிடையே பிரச்சாரம் செய்தான்.காஷ்மீரில் உளவுத்துறையின் சூழ்ச்சி செல்லுபடியாகவில்லை.

அதனை அம்மக்களே தோலுரித்து காட்டினார்கள். (Times Of India 18/09/2017)

இலங்கையிலும் கூட சஹ்ரானின் மீது பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் குற்றஞ்சாட்டிய போதும் கூட அரசு அதிகாரம் வேண்டுமென்றே வேடிக்கை பார்த்தது. இன்றைய நவீன உலகில் இவ்வளவு பெரும் குண்டுவெடிப்பினை அந்த நாட்டின் அதிகார அமைப்பின் உதவியில்லாமல் நடத்த முடியாது என்பதே யதார்த்தம்.

**இலங்கை முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்**

குண்டுவெடிப்பிற்கு பிறகு முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை தாக்குதல் கட்டவிழ்த்து விட்டப்பட்டுள்ளன. அதற்கு அரசு அதிகார அமைப்பும் ஏதுவாக நடந்து கொள்கிறது. நாடு முழுக்க முஸ்லிம்களின் வீடுகளிலும், மசூதிகளிலும் தேடுதல் வேட்டையை தொடங்கி விட்டனர் அதிகாரிகள்.

அதில் கிடைக்கப்படும் குரான் பிரதிகளும், சமையலுக்கு பயன்படும் கத்தி போன்ற பொருட்களை கூட புகைப்படம் எடுத்து பயங்கரவாத ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியிடுகின்றனர். இது அரசு பகுதியிலிருந்து நடத்தப்படும் வன்முறையாட்டம் என்றால், சிங்கள பயங்கரவாதிகளை தூண்டி விட்டு பல இடங்களில் முஸ்லிம்களின் உடைமைகள் மீதும் உயிர்கள் மீதும் கலவரம் நடத்தப்பட்டிருக்கிறது.

இலங்கையில் எந்தளவுக்கு முஸ்லிம்கள் மீதான வெறுப்பு பிரச்சாரம் விதைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு சம்பவம் உதாரணமாக இருக்கும், ஒரு தாய் தன் திருமணம் செய்து கொடுத்த மூன்று மகள்களுடனும் ஐந்து பேரக்குழந்தைகளுடனும் வாழ்ந்து வருகிறார். அவர்கள் பல வண்ணங்களில் பாவாடைகளை விற்பனை செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் இவரின் வீட்டின் கீழே குடியிருந்த குடும்பத்தினர், இவர்கள் வீட்டில் புத்த பிக்குகள் அணியும் மஞ்சள் துணிகள் இருக்கிறது. ஆபத்தானவர்கள் என்று காவல் துறைக்கு ரகசிய தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

வந்த காவல் துறையினருக்கு அது தவறான தகவல், வெறும் பாவாடை துணி தான் என தெரிந்திருந்தாலும் அதற்குள் அங்கு சேர்ந்த கூட்டத்தினை சமாளிக்க முடியவில்லை. அந்த

கிராமத்தினர் அந்த குடும்பத்தை வெறி கொண்டு தாக்க அவர்கள் அனைவரும் கழிவறையில் அடைந்து தங்கள் உயிரை காத்துக் கொண்டனர். இறுதியில் காவல்துறையினர் தீவிரவாதிகளை கைது சய்வது போல் கைது செய்து 21 நாட்கள் சிறையில் வைத்து விசாரிக்கவும் நீதிமன்றத்திடம் உத்தரவு பெற்றிருக்கிறார்கள்.

குண்டுவெடிப்பிற்கு பிறகு முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை தாக்குதல் கட்டவிழ்த்து விட்டப்பட்டுள்ளன. அதற்கு அரசு அதிகார அமைப்பும் ஏதுவாக நடந்து கொள்கிறது. நாடு முழுக்க முஸ்லிம்களின் வீடுகளிலும், மசூதிகளிலும் தேடுதல் வேட்டையை தொடங்கி விட்டனர் அதிகாரிகள்.

அதில் கிடைக்கப்படும் குரான் பிரதிகளும், சமையலுக்கு பயன்படும் கத்தி போன்ற பொருட்களை கூட புகைப்படம் எடுத்து பயங்கரவாத ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியிடுகின்றனர். இது அரசு பகுதியிலிருந்து நடத்தப்படும் வன்முறையாட்டம் என்றால், சிங்கள பயங்கரவாதிகளை தூண்டி விட்டு பல இடங்களில் முஸ்லிம்களின் உடைமைகள் மீதும் உயிர்கள் மீதும் கலவரம் நடத்தப்பட்டிருக்கிறது.

இலங்கையில் எந்தளவுக்கு முஸ்லிம்கள் மீதான வெறுப்பு பிரச்சாரம் விதைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு சம்பவம் உதாரணமாக இருக்கும், ஒரு தாய் தன் திருமணம் செய்து கொடுத்த மூன்று மகள்களுடனும் ஐந்து பேரக் குழந்தைகளுடனும் வாழ்ந்து வருகிறார். அவர்கள் பல வண்ணங்களில் பாவாடைகளை விற்பனை செய்து வருகிறார்கள்.

இந்நிலையில் இவரின் வீட்டின் கீழே குடியிருந்த குடும்பத்தினர், இவர்கள் வீட்டில் புத்த பிக்குகள் அணியும் மஞ்சள் துணிகள் இருக்கிறது. ஆபத்தானவர்கள் என்று காவல்துறைக்கு ரகசிய தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

வந்த காவல் துறையினருக்கு அது தவறான தகவல், வெறும் பாவாடை துணி தான் என தெரிந்திருந்தாலும் அதற்குள் அங்கு சேர்ந்த கூட்டத்தினை சமாளிக்க முடியவில்லை. அந்த கிராமத்தினர் அந்த குடும்பத்தை வெறி கொண்டு தாக்க அவர்கள் அனைவரும் கழிவறையில் அடைந்து தங்கள் உயிரை காத்துக் கொண்டனர். இறுதியில் காவல்துறையினர் தீவிரவாதிகளை கைது செய்வது போல் கைது செய்து 21 நாட்கள் சிறையில் வைத்து விசாரிக்கவும் நீதிமன்றத்திடம் உத்தரவு பெற்றிருக்கிறார்கள்.

(http://www.jaffnamuslim.com/2019/05/5-12.html?m=1)

இத்தகைய கொடுமைகளை நிகழ்த்தவே திட்டமிட்டு இந்த குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டு அதற்கு பலியாடுகளாக முஸ்லிம்கள் மாற்றப்பட்டிருக்கின்றனர்.

**- அபூசித்திக்.**


# வாசகர்களுக்கு ஈகைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

**நன்றி! நன்றி!! நன்றி!!!**

**தாருஸ் இஸ்லாம் நடத்திக் கொண்டிருக்கும் தாஃவா பணிகளுக்கு நிதி உதவிகள் கேட்டு அதன் களப்பணியாளர்கள் உங்களை வந்தடைந்தார்கள்.தாராளமாகவும் கண்ணியமாகவும் நிதி உதவிகளை வழங்கினீர்கள். அனைவருக்கும் நன்றிகள் பல. அனைவரும் அல்லாஹ் நற்கூலிகளை நல்கிடுவானக! என துஆ செய்கின்றோம். உங்கள் துஆக்களில் எங்களையும் நினைவு கூறுங்கள்.**

**இவன்**

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600001.**



# சித்ரவதைக்குள்ளாகும் காஷ்மீர மக்கள்

# 586 பக்க ஆய்வறிக்கை

தனிச்சிறை, தூக்கமின்மை, கற்பழிப்பு மற்றும் ஒருபால் புணர்ச்சி போன்ற பாலியல் ரீதியான துன்புறுத்தல்களும் காஷ்மீரிகளுக்கு எதிராக பயன்படுத்தப்படுகிறது என இரண்டு மனித உரிமை அமைப்புகள் இணைந்து 565 பக்க அறிக்கையை வெளியிட்டிருக்கின்றன.

ஜம்மு மற்றும் காஷ்மீர் சிவில் சமூகத்தின் கூட்டணி மற்றும் காணாமல் போன நபர்களின் பெற்றோர்கள் அமைப்பு சார்பாக இத்தகைய ஆய்வறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. காஷ்மீரிகளை துன்புறுத்துவதற்கு பல்வேறு விதமான சித்ரவதைகள் பின்பற்றப்படுகிறது. இதில், மின்சாரம் செலுத்துதல், அந்தரத்தில் தொங்க விட்டு அடிப்பது, மிளகாய்த் தூள் கலந்து தண்ணீரை குடிக்க வைத்து சித்ரவதை செய்வது, நிர்வாணப்படுத்தி கட்டைகளால் அடிப்பது, உடம்பில் இரும்பைக் கொண்டும் சிக்ரெட்களை கொண்டும் சூடு போடுவது போன்ற சித்ரவதைகளும் அடக்கம்.

சித்ரவதையின் போது முசாஃபர் அஹ்மத் மிர்சா மற்றும் மன்சூர் அஹ்மத் நய்கு என்ற இருவருக்கும் அவர்களின் ஆசன வாய் வழியாக இரும்பு ராடை சொருகியதில் அவர்களின் உள் உறுப்புகளில் பல முறிவுகள் ஏற்படும் கடும் அவதிக்குள்ளாகினர். இதில் மிர்சா இறந்துவிட்டார். நய்குவுக்கு ஐந்து அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு சிகிச்சையை தொடர்கிறார். இரும்பு ராடை சொருகும் போது துணியை நய்கூவின் மர்ம உறுப்பில் கட்டி விட்டு அதில் தீ வைத்திருக்கிறார்கள். இந்த சிதரவதை முகாம்களில் சித்ரவதைக்குள்ளாக்கப்படும் மக்களில் 70% பேர் ஏதும் அறியாத அப்பாவி பொது மக்கள் என்கிறது ஆய்வு.

**சித்ரவதை முகாம்களில் நடத்தப்படும் முறை**

கைதிகளாக அழைத்து வரப்படும் நபர்களின் நம்பிக்கை அதிகமாக கேவலத்துக்கு உட்படுத்தப்படும். பன்றி கறி சாப்பிட வற்புறுத்தப்படும், வற்புறுத்தி மது வாயில் ஊற்றப்படும். சில நேரங்களில் கீழாடை சர்க்கரையில் முக்கி எடுக்கப்பட்டு அதனை போடச்செய்து அதனுள் எலிக்கள் விடப்படும்.



கைதிகள் கேவலமான பொருட்களை குடிக்கும் படியும் சாப்பிடும் படியும் கட்டாயப் படுத்தப்படுகின்றனர். மனித மலம், சிறுநீர், மிளகாய்த்தூள், குப்பை, கல், பெட்ரோல் போன்றவைகளை சாப்பிட வைக்கப் படுவார்கள்.

இப்படி சித்ரவை செய்படுவதற்கான காரணம் ஏதும் சொல்லப்படாது.கைதிகளில் ஏதாவது ஒரு நபரை அழைத்து இத்தகைய சிதரவதைகளுக்கு உள்ளாக்குவார்கள்.

**ஆய்வறிக்கை**

இந்த ஆய்வுக்கு சித்ரவதை கூடத்தில் இருந்து வெளிவந்த மொத்தம் 432 நபர்களின் அனுபவங்கள் மட்டுமே எடுத்து கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் 24 பேர் பெண்கள். இந்த பெண்களில் 12 பேர் இந்திய ராணுவ அதிகாரிகளால் கற்பழிக்கப்பட்டிருக்கின்றனர். வெளிவந்த நபர்களில் பலர் தொடர்ச்சியாக பல சித்ரவதைகளை அனுபவித்து வருகின்றனர்.

**தொடரும் கொடுமைகள்**

இத்தனை கொடுமைகளும் காஷ்மீரில் நடக்கும் கொடுமைகளின் ஒரு பகுதியே இதை விடவும் மோசமான நிலையில் தான் தற்போது காஷ்மீர் இருந்து வருகிறது. தேசபக்தியின் பெயரில் பல ஆயிரம் பாரத மாதாக்கள் காஷ்மீரில் காவல் காக்கும் இராணுவ வீரர்களாலேயே கற்பழிக்கப் படுகிறார்கள். சிறு பிள்ளைகளின் வாழ்க்கை தரைமட்டமாக்கப் படுகிறது. நிலத்திற்கான சண்டையில் ஓர் இனப்படுகொலையை தொடர்ந்து நடத்தி வருகின்றன அரசுகள். (source- al Jazeera )

**- அபூசித்திக்.**




70/-

8148129887

# நோன்புக்கு சீனாவில் தடை



ரமலான் மாதத்தில் முஸ்லிம்கள் ஒரு மாதம் நோன்பிருந்து இறுதியில் ரம்ஜான் பண்டிகையை கொண்டாடுவார்கள். ஆனால் சீனாவில் பள்ளிகளில், அலுவங்களில் இருக்கும் யாரும் நோன்பு வைக்க கூடாது என உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழக்கூடிய ஜிங்ஜாங் பகுதியில் முஸ்லிம்கள் யாருமே நோன்பு நோற்பதற்கு தடை அதிகாரபூர்வமாக விதிக்கப்பட்டுள்ளது.

எந்த உணவு விடுதியும் மூடியிருக்கக் கூடாது. ஒவ்வொரு பள்ளிக்கும் அனுப்பப்பட்ட அரசாங்க உத்தரவில் மாணவர்களுக்கு, நோன்பு நோற்கக்கூடாது, பள்ளிவாசல்களுக்கு செல்லக்கூடாது, எந்த வணக்க வழிபாடுகளையும் செய்யக்கூடாது என்று பாடம் எடுக்க உத்தரவிட்டுள்ளது.

ரமலான் மாதம் என்பதால் எப்போதும் விட தற்போது அதிகமாக கண்காணிப்பு அதிகமாக இருக்கும். சோதனையிட அடிக்கடி நபர்கள் வருவார்கள். அதனால் சமூக அமைதியை பேணி எத்தகைய வழிபாடுகளிலும் ஈடுபடாமல் இருப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தொழுவதற்கு முன் அடையாள அட்டை கொடுக்க வேண்டும்.

ஜிங்காங் பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் தொழ வருபவர்கள், அடையாள அட்டை ஒவ்வொரு முறை வரும்போதும் காட்ட வேண்டும் என்று நிர்வாகத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

**கண்காணிக்கும் குழு**

நோன்பு நோற்காமல் இருக்கிறார்களா என கண்காணிக்க குழு ஒன்றும் ஒவ்வொரு பகுதியிலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனை கம்யூனிஸ்ட் இயக்க உறுப்பினர்கள் தான் பொறுப்பெடுத்து பார்த்து கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது..

**- அபூசித்திக்.**

# முஸ்லிம்களுக்கெதிராக மே மாதத்தில் இழைக்கப்பட்ட அநீதிகளின் தொகுப்புகள்.

**மே** 1;

ரஷ்ய விமான படை சிரியாவில் குண்டுகளை போட்டு பெரும் நாசத்தை உண்டாக்கியது.

இலங்கையில் ஜாகிர் நாயக் அவர்களுடைய 'peace' தொலைக்காட்சி நிறுவனம் தடை செய்யப்பட்டது.

யெமென் நாட்டில் ஒரு இஸ்லாமிய பெண்மணி உணவு இல்லாமல் குப்பைகிடங்கில் உணவை தேடும் காணொளி வெளியாகி மனதை பதைபதைக்க செய்தது.

சிரியாவில் உள்ள ரக்பான் அகதிகள் முகாம்களில் உள்ள தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு பால் கொடுக்கவும் உணவு கொடுக்கவும் முடியாத நிலையில் இருந்த காணொளி வெளியானது. சாப்பிடுவதற்கு அங்கே எதுவுமே இல்லை எனும் அழுகுரலுக்கு எவரிடமும் பதில் இல்லை.

சீனாவில் உள்ள உய்கூர் சித் ரவதை முகாமில் இருந்து தப்பி ஓடிய முஸ்லிம் ஒருவரை கொல்ல 70000 பேரை அணி திரட்டியது சீன அரசு. இறுதியில் அந்நபர் கண்டுபிடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

**மே** 2;

சிரியாவில் விமான படையினரால் குண்டுகள் மக்கள் வசிக்கும் இடங்களில் போடப்பட்டது.

**மே** 3;

சீனாவில் உள்ள மனித உரிமை அமைப்பு சீன அரசு முஸ்லிம்களை ஆராய்வதற்காக தனியொரு செயலியை சட்டவிரோத முறையில் பயன்படுத்துவதாக அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

முஹம்மது சரீப் என்ற இளைஞன் இந்தியாவிலுள்ள பீகாரில் அடித்தே கொல்லப்பட்டான்.

இஸ்லாமிய கவிஞர் ஷெய்க் முஹம்மது அல்-கஸ்கரி சீனாவின் சித்ரவதை முகாமில் வைத்து சீன அரசால் கொல்லப்பட்டார்.

**மே** 4:

சீனாவில் உள்ள உய்கூரில் முஸ்லிம்கள் நோன்பு நோற்பதற்கு மூன்றாவது ஆண்டாக தடை செய்யப்பட்டிருக்கிறது.

இஸ்ரேலிய விமானங்கள் காஸாவின் மீது குண்டுகளை பொழிந்தன. இதில் சாபா என்ற கர்ப்பிணியும் அவரது ஒரு வயது மகளும் உயிரிழந்தனர்.

சிரியாவின் இத்லிப் நகரில் ரஷ்ய விமானங்கள் குண்டுகள் போட்டன.

**மே** 5;

இஸ்ரேல் விமானங்கள் காஸாவில் தாக்குதல் நடத்தின. இதில் காஸாவில் இருந்த 6 கட்டிடங்கள் தரைமட்டமாகின. 10க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

**மே** 6;

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 4 மாத குழந்தையான மரியா அல் கஸ்ஸாலி கொல்லப்பட்டது.

சிரியாவில் இத்லிப் நகரத்தில் ரஷ்ய விமானம் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

**மே** 8:

62 வயதான தந்தை மற்றும் மகன் இருவரும் இந்தியாவின் மேற்கு வங்கத்தில் மாட்டுக்கறி வைத்ததாக கூறி எல்லை பாதுகாப்பு படையினரால் கொடூரமாக தாக்கப்பட்டார்கள்.

**மே** 12:

பொது இடத்தில் தொழுகை நடத்தியதால் அஸ்ஸாமில் நடைபெற்ற கலவரத்தில் முஸ்லிம் மனிதர் ஒருவர் கொல்லப்பட்டார். 10 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அமெரிக்க புலனாய்வு அமைப்பு சீனாவில் சித் ரவதை முகாமில் அடைக்கப்பட்டுள்ள 1மில்லியன் முஸ்லிம்கள் என்ற எண்ணிக்கை மூன்று மில்லியன்களாக அதிகரித்திருப்பதாக அறிக்கை வெளியிட்டது.

**மே** 13:

இலங்கையில் மேற்கு பகுதியில் பள்ளிவாசல்கள் மீது கல்லெறிந்து கலவரத்தில் சிங்கள பயங்ரவாதிகள் ஈடுபட்டனர். 8 மசூதிகள், முஸ்லிம்களின் வீடுகள், முஸ்லிம்களின் வியாபார தளங்கள் என்று பலவும் கலவரத்தில் தீக்கிரையாக்கப்பட்டன. இரண்டு முஸ்லிம்கள் கலவரத்தில் கொல்லப்பட்டார்.

**மே 15;**

முஸ்லிம்களின் மீது நடத்தப்படும் கலவரம் இலங்கையில் ராணுவ அதிகாரிகளின் துணையுடன் நடக்கும் காணொளி வெளியானது.

**மே 16;**

ஆஸ்டிரியாவில் தலையை மறைத்து ஹிஜாப் அணிவதற்கு தடை விதிக்கப்பட்டது. ஆனால் சிங் மக்களுக்கும் யூதர்கள் தலையில் ஸ்கார்ஃப் அணிவதற்கும் தடை இல்லை.

**மே 20;**

சிரியாவின் இத்லிப் நகரில் ரஷ்ய விமானம் மூலம் நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் 7பேர் கொல்லப்பட்டனர்.

**மே 21;**

காஷ்மீரில் இந்திய ராணுவத்தினர் செய்யும் சித்ரவதைகள் பற்றி 565 பக்க ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.

சீனாவில் உய்கூர் மாகாணத்தில் முஸ்லிம் மாணவர்கள் நோன்பு வைத்திருக்கிறார்களா என கண்காணிக்க மாணவர் குழு உருவாக்கப் பட்டிருக்கிறது. எவரேனும் நோன்பு வைத்திருப்பது தெரிந்தால் பள்ளிக் கூடங்களில் தலைமையாசிரியரிடம் சொல்ல வேண்டும்.

**மே22;**

16 வயதுடைய ஆசிஃப் அகமது பாரே வின் மீது இந்திய ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இரண்டு கண்களும் செயலிழந்தது.

இத்லிப் நகரில் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 10 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**மே 23;**

இந்தியாவில் உள்ள ஹரியாணாவில் முஸ்லிம்கள் பள்ளியில் தொழுது கொண்டிருக்கும் போது உள்ளே நுழைந்த இந்துத்துவ கலவர கும்பல் மசூதியை தாக்கி அங்கிருந்தவர்களை அடித்து மசூதியின் சுற்றுச்சுவரையும் இடித்து விட்டு சென்றனர்.

**மே 24;**

இந்தியாவில் உள்ள மேற்கு வங்கத்தில் ஒரு பள்ளியில் கையெறி குண்டு வீசப்பட்டது.

மத்திய பிரதேசத்தில் ஒரு முஸ்லிம் குடும்பம் மாட்டுக்கறி வைத்திருந்ததாக கூறி நடுரோட்டி தாக்கப்பட்டனர். அதில் பெண் ஒருவரை செருப்பால் அடித்து இந்து விக்கிரங்களின் பெயர் கூறி கும்பிடுமாறு வற்புறுத்தினர்.

**- நமது நிருபர்**


இறைவனின் அழகியத் திருப்பெயரால்

நியூ மலேஷியா

டிராவல் சர்வீஸ்

பதிவு எண் : 2015/33/018/10098/ANSP

அரசு அங்கீகாரம் பெற்றது




உரிமை: S.B.S. பஷீர்

• பாஸ்போர்ட் ஆன்லைன்
• விமான டிக்கெட்
• விசா சர்வீஸ்
• ECNR & PCC
• எம்பஸி அட்டெஸ்டட்
• GCC மெடிக்கல் சர்வீஸ்

ECR நீக்கி ECNR மாற்றிட

கிளை அலுவலகம்:

12, கலைமகள் வீதி, MRF டயர்ஸ் பின்புறம்)
7வது குறுக்குத் தெரு,சுப்பையா நகர்,
பாஸ்போர்ட் அலுவலகம் அருகில்,
புதுச்சேரி - 605001.
செல்: 9894303789 | 9445907389

68, பெரிய கடை தெரு, பரங்கிப்பேட்டை,
கடலூர் மாவட்டம் - 608502

E mail ID: newmalaysiapno@gmail.com |Web : www.newmalaysiatravelservice.com

தொலைப்பேசி:
04144 243267
04144 243440

செல்:
7708803789
7708503789



# முதல்வர் மாவட்டத்தில் ஆர்.எஸ்.எஸ் பயிற்சி வகுப்புகள்

மக்களவை, சட்டமன்றம், உள்ளாட்சித் தேர்தல்கள் என இந்தியா முழுவதும் பாஜகவினர் வெற்றிபெற்றாலும் தமிழகத்தில் பாஜக எதிர்பார்க்கும் அளவுக்கு வெற்றிபெற முடியவில்லை. தமிழகத்தில் ஓர் இடம்கூட கிடைக்கவில்லையே என்று வருத்தத்திலிருந்து வருகிறார்கள் பாஜகவினர். இந்த நிலையில் தமிழகத்தில் ஆர்எஸ்எஸ் பயிற்சி வகுப்புகள் பல இடங்களில் நடைபெற ஆரம்பித்துள்ளது.

முதல்வரின் மாவட்டமான சேலம் மின்னாம்பள்ளியிலுள்ள ஏவிஎஸ் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை முதல் வடதமிழகத்தைச் சேர்ந்த சுமார் 300 இளைஞர்களுக்கு ஆர்எஸ்எஸ் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. இதுபோலவே தென்தமிழகத்திலும் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

பயிற்சி வகுப்புகளில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ள விசாரணையில் இறங்கினோம்...

“தலித், வன்னியர், கவுண்டர் சமூக இளைஞர்களைக் குறிவைத்து தேர்வுசெய்து கருத்தியல் பயிற்சிகளை வழங்கி வருகிறது ஆர்எஸ்எஸ். குறிப்பாக விசிகவில் முன்பு தீவிரமாகச் செயல்பட்ட முக்கிய நிர்வாகிகள், வன்னியர் சங்கத்தில் தீவிரமாகச் செயல்பட்ட இளைஞர்கள் போன்றோரைத் தேர்வுசெய்து அவர்களைப் பயிற்சி வகுப்புக்கு அழைத்து வந்துள்ளனர்.

ஒரு நாளைக்கு மூன்று பேர் வகுப்பு எடுக்கிறார்கள். காலையில் சத்தான கஞ்சி, பால். மதியம் அருமையான சைவ உணவுகள். இரவில் சப்பாத்தி, உப்புமா போன்றவை பரிமாறப்படுகின்றன.

இளமையின் வேகத்தோடு அங்கு வந்திருக்கும் இளைஞர்களுக்கு ஆன்மிகம், யோகா, இந்து, இந்துத்துவம், தேசம் எனக் கூறி முதலில் மென்மையாகப் பயிற்சி அளித்து வந்தவர்கள் தற்போது அதன் வேகத்தை அதிகரித்துவருகிறார்கள்.

‘நமக்கு யாரும் தலைவர்கள் இல்லை. இங்கே வந்திருக்கும் நீங்கள் அனைவரும் தலைவர்கள்தான். நாம் ஒன்றுசேர்ந்து இந்தியாவைப் பாதுகாக்க வேண்டும். மீண்டும் இஸ்லாமியர், கிறிஸ்தவர்களுக்கு அடிமையாக வேண்டாம். இந்தியாவை உங்களிடம் ஒப்படைத்துவிடுகிறோம். நீங்கள் தான் பாதுகாக்க வேண்டும்’ என்று அவர்களுக்குப் பாடம் எடுக்கிறார்கள். சாதி ரீதியாகப் பிளவுபட்டிருக்க வேண்டாம். அனைவரும் இந்துக்களாக ஒன்று சேருவோம் என்ற முழக்கத்தையும் அவர்கள் மத்தியில் வைத்துவருகிறார்கள்.

முகாமிற்கு ஆர்எஸ்எஸ் வடதமிழகம் தலைவர் ரவிக்குமார் மற்றும் கொச்சின் வன்னியராஜா, குரு சுப்பிரமணியன் போன்றவர்கள் வந்துசெல்கிறார்கள். பயிற்சி நேரங்கள் முடிந்ததற்கு பிறகான இடைவேளை நேரங்களிலும், இடைவேளை மற்றும் இரவு நேரங்களிலும் ஆர்எஸ்எஸ் பிரதிநிதிகள் பயிற்சிக்கு வந்துள்ள இளைஞர்களிடம் நெருக்கமாகப் பேசி அவர்களின் எதிர்பார்ப்புகளை அறிந்து பொருளாதார தேவையைப் பூர்த்தி செய்யவும் வழிகாட்டுகிறார்கள்.

பயிற்சி நேரங்களில் செல்போனுக்கு அனுமதியில்லை. பயிற்சி முடிந்து அறைக்கு வந்த பிறகுதான் செல்போன் பயன்படுத்த வேண்டும். ஏழு நாட்கள் பயிற்சியை முடித்த பிறகு இவர்கள் அனைவரும் தத்தமது பகுதியில் பாஜகவை வளர்ப்பதற்காகக் களமிறக்கப்படவுள்ளனர்.

குறுகிய வட்டத்துக்குள் இருக்கும் இளைஞர்களுக்கு இந்தியா முழுவதும் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களை உற்சாகப்படுத்தி, ‘தேர்தல் நேரத்தில் உங்கள் உழைப்புக்கு ஏற்றப் பதவியும் பொறுப்பும் தேடிவரும். உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அரசு ரீதியான உதவிகளைச் செய்து கொடுங்கள். அதற்கு நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உதவி செய்வார்கள்’ என்று அவர்களுக்கு நம்பிக்கையையும் ஏற்படுத்திவருகிறார்கள்.

தமிழகத்தில் தாமரையை மலரவைப்பதற்கான தொலைநோக்கு திட்டம்தான் தற்போது நடைபெற்றுவரும் ஆர்எஸ்எஸ் பயிற்சி வகுப்புகள் என்கிறார்கள் பாஜக பிரமுகர்கள்.

**நன்றி: மின்னம்பலம்**



# எது முதலில்?



யூசுஃப் அல் கர்லாவீ

பேராசிரியர் முஹம்மது அல் முபாரக்

இவர் சிரியா நாட்டைச் சார்ந்த பிரபல பேராசிரியர். இஸ்லாமியச் சிந்தனையாளர். சீர்த்திருத்தவாதி.

“அல் ஃபிக்ருல் இஸ்லாமிய்யில் ஹதீஸி ஃபீமுவாஜஹத்தில் அஃப்காரில் கர்பிய்யா”(மேற்கத்திய கோட்பாடுகளை எதிர் கொள்வதில் நவீன இஸ்லாமியக் கோட்பாடு) என்ற தனது நூலில் ஆழமாகவும், புதுமையாகவுமே பேசியிருக்கின்றார்.

பலவேறு சந்தர்ப்பங்களில் அவர் எழுதியுள்ள பல ஆய்வுக் கட்டுரைகள், ஆற்றியுள்ள பல விரிவுரைகள் ஆகியவற்றின் தொகுப்பே அந்நூல்.

அவர் கூறுகிறார்

இவ்வுலக வாழ்வில் ஒரு முஸ்லிம் பல்வேறு நிலைகளை சந்திக்கின்றார். அவை ஒவ்வொன்றும் பெறுமதி மிக்கவை. ஒவ்வொரு நிலைகளுக்கும் மத்தியில் தொடர்புகள் இருக்கத்தான் செய்கின்றன.

சொத்து, சுகம், வேலை, அறிவு, ஞானம், புஜபலம், வழிபாடு, உறவு, இனப்பற்று, மதப்பற்று, இவை அனைத்துமே வாழ்வின் பெறுமதிகள் தான். மனிதனுடைய வாழ்வில் அமைப்பில் இவை ஒவ்வொன்றுக்கும் ஒரு இடத்தை இஸ்லாம் வைத்திருக்கிறது. அவை ஒவ்வொன்றுக்கும் வரையறுக்கப்பட்ட ஒரு தொடர்பு இருக்கிறது. ஒன்றைவிட மற்றொன்று பெறுமதி மிக்கதாக கருதிவிடக்கூடாது.

இவற்றில் ஏதேனும் ஒன்றுக்கு தகுதிக்கு மீறி முக்கியத்துவம் தந்து விட்டாலோ, அல்லது தரவேண்டிய மரியாதையை தராவிட்டாலோ அது இஸ்லாத்தை குழப்புவது என்றாகிவிடும்.



தமிழில்
பேராசிரியர். இல்யாஸ் ரியாஜி

இஸ்லாமிய வரலாற்றின் பிந்தைய காலக் கட்டங்களில் இது போல் நடந்திருக்கிறது. இது ஒரு மனிதனை அவனுக்குரிய அழகிய வடிவத்தில் வரையாமல் கேலிச் சித்திரம் வரைவது போன்றாகிவிடும். ஒருவனின் கேலிச்

சித்திரம் அவனை நினைவூட்டும். ஆனால் கேலியாகவே நினைவூட்டும்.

அதுபோல வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொன்றுக்கும் இஸ்லாம் தர சொன்ன மரியாதையை தராமல் அவரவர் இஷ்டப்படி மதிப்பிட்டால், அது இஸ்லாமிய வாழ்க்கையாக இருக்காது. கேலி சித்திரம் போல் இருக்கும்.

ஒரு மருந்தின் உள்ளடக்க பொருள்கள் ஒவ்வொன்றும் அதற்குரிய அளவோடு கலந்திருக்கவேண்டும். அவற்றில் ஏதேனும் ஒன்று சற்று தூக்கலாக ஆகிவிட்டாலும் குழப்பமாகி விடும். மருந்தின் தன்மையும் அதன் பண்பும் மாறிவிடும். சில சமயங்களில் அது விஷமாக கூட மாறிவிடும்.

இதுபோல தான் இஸ்லாமிய வாழ்க்கையை நாம் நூறு பங்கு வைத்தால் அதில் சில பங்குகளை இபாதத் என்ற வழிபாடு எடுத்துக் கொள்கின்றது.

சம்பாதிப்பது, செலவழிப்பது, அறப்போர்(ஜிகாது) செய்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட சுகங்களை அனுபவிப்பது என அனைத்துக்கும் ஒரு பங்கு உண்டு.

இந்த அளவை நாம் மாற்றினால், ஜிகாதுக்கு தர வேண்டிய இடத்தை குறைத்து இதர வழிபாடுகளுக்கு கூடுதல் மதிப்பளித்தால், பொருளீட்டுவது, செலவழிப்பது இரண்டில் ஒன்றுக்கு மட்டும் கூடுதல் மதிப்பளித்தால், பொழுதுபோக்கு போன்ற சுவைகளை அளவுக்கு மீறியோ அல்லது குறைவாகவோ அனுபவித்தால், அது இஸ்லாம் அமைத்து தந்த வாழ்வியல் நெறிக்கு முரணானதாகும். வாழ்க்கையை அதற்குரிய முறைப்படி சீராக வாழவில்லை என்று பொருளாகும்.

வரலாற்றின் சில காலகட்டங்களில் முஸ்லிம்கள் வணக்க வழிபாட்டின் பொருளையே குறிப்பிட்டார்கள். பள்ளிவாசல்களில் போய் தொடர்ச்சியாக இதிகாஃப் இருந்தார்கள். அன்றாடம் ஓத வேண்டியவைகளை இவற்றை மட்டுமே அப்பி பிடித்துக்கொண்டு இதுவே இபாதத் என்றார்கள்.

அவர்கள் கடைபிடிக்கும் இந்த வகை இபாதத் நபி(ஸல்) அவர்கள் காட்டிய இபாதத்தின் வடிவத்துடன் ஒத்துப்போகவில்லை. நபித்தோழர்களின் வழிமுறையும் இதுவல்ல.

அண்ணல் நபி(ஸல்) அவர்களும் அவர்களின் தோழர்களும் தம் வாழ்வை வணக்க வழிபாட்டின் அடிப்படையில் அமைத்துக் கொண்டவர்கள். அப்படியிருந்தும் தம் வாழ்வை ஜிகாத் எனும் அறப் போராட்டத்தால் நிரப்பி கொண்டவர்கள்.

குழப்பமான கொள்கையிலிருந்து சமுதாயத்தை விடுவிப்பதற்காக, தூய கொள்கைகளை ஊற்றுவதற்காக, அநியாயக்காரர்களின் பிடியில் இருந்து மக்களை விடுவிப்பதற்காக, ஒடுக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்காக, நீதியை நிலைநாட்டுவதற்காக இடையறாது அறப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

ஆனால் முஸ்லிம்களின் வாழ்வு இப்போது எப்படி இருக்கிறது? வழிபாட்டில் திளைப்பவர்கள் ஜிஹாதை ஏறிட்டு பார்த்ததில்லை. அறப்போரிலும், சமுதாய சீர்திருத்தத்தில் நாட்டம் உள்ளவர்களிடம் வழிபாடுகள் குறைவாகவும், பலகீனமாகவும் இருக்கின்றன.

இப்போது நான் கூறும் இந்த விவரங்களை நம்முடைய மூத்த முன்னோடி இமாம்கள் முன்னரே விளக்கமாக எச்சரித்திருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் செய்ய வேண்டிய கடமைகள் எல்லாம் ஒரே தரமானவை அல்ல. அவை பல தரங்களாக இருக்கின்றன. செய்யக்கூடாத பாவங்கள் எல்லாம் ஒரே தரமானவை அல்ல. அவற்றிலும் பல தரங்கள் உள்ளன என்பதை தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள்.

போர்க்களத்தில் ஈயத்தால் வார்க்கப்பட்ட சுவர் போல உறுதியாக ஒன்றுபட்டு போராட வேண்டிய ஒரு முஸ்லிம் போராளி எதிரிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் (புறமுதுகு காட்டுவது) நடப்பதும், மது அருந்துவதும், பன்றி இறைச்சி உண்பது இவை மூன்றும் ஒரே தரமான பாகங்கள் அல்லவே! பிந்தைய இரண்டும் ஹராம்தான். இருப்பினும் முந்தைய பாவம் கொடூரமானது அல்லவா!

இந்தக் கோட்பாட்டை வலியுறுத்தும் அருள்மறை வசனங்கள் பெருமானாரின் பொன் மொழிகளும் ஏராளம் உள்ளன.

(ஈமான் கொள்ளாத நிலையில்) ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டுவோரையும் கஃபத்துல்லாஹ்வை (புனிதப்பள்ளியை) நிர்வாகம் செய்வோரையும் அல்லாஹ்வின் மீதும் இறுதிநாள் மீதும் ஈமான் கொண்டு, அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிந்தோருக்குச் சமமாக ஆக்கிவிட்டீர்களா? அல்லாஹ்வின் சமூகத்தில் (இவ்விருவரும்) சமமாக மாட்டார்கள் - அநியாயக்காரர்களை அல்லாஹ் நேர்வழியில் செலுத்தமாட்டான்.(9:19)

நற்செயல்கள் அனைத்தும் ஒரே தரமானவை அல்ல அவற்றுள் பல ரகங்கள் உண்டு என்பதை இவ்வசனம் சொல்லும் செய்தி.

நபி(ஸல்) அவர்களிடம்; “அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதற்கு ஈடான நன்மையைப் வேறெந்த செயலால் அடைய



முடியும்?" என்று இரண்டு மூன்று தடவை கேட்கப்பட்டபோது, திரும்பத் திரும்ப உங்களால் அது முடியாது என்றுதான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பிறகு சொன்னார்கள்; "அல்லாஹ்வின் பாதையில் போரிட கிளம்பிய போராளிக்கு உதாரணம்: இறைமறை வசனங்களை ஓதி, தடையில்லாமல் தொழுது கொண்டும், நோன்பு வைத்துக் கொண்டும் இருப்பவரை போன்று போராளி திரும்பும் வரும் வரை"(நூல் புகாரி, முஸ்லிம்)

"மனிதர்களில் சிறந்தவர் யார் என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்ட போது, தன் செல்வத்தையும் உயிரையும் தந்து அல்லாஹ்வின் பாதையில் போராடுபவர் என்று பதிலளித்தார்கள். அடுத்து யார் சிறந்தவர்? என்று கேட்கப்பட்டபோது, மக்களுக்கு தொல்லை தராமல் அல்லாஹ்வுக்கு பயந்து கணவாய்களில் ஒன்றில் ஒதுங்கி விட்டவர் என்று பதிலளித்தார்கள்." (நூல் புகாரி, முஸ்லிம்)

மேலும் நபி(ஸல்) கூறினார்கள்; "தெரிந்துகொண்டே ஒரு திர்ஹம் (வெள்ளிக்காசு) அளவு வட்டியை தின்பது 36 தடவை விபச்சாரம் செய்வதை விட கொடியது" (நூல்: அஹ்மது)

வட்டி பொருளாதார அநீதிகளில் ஒருவகை. இது விபச்சாரத்தை விட கொடிய பாவம். இதுபோன்ற நபிமொழிகள் நமக்கு சொல்வதென்ன? எல்லா நன்மைகளும் ஒரே தரமானவை அல்ல. எல்லா தீமைகளும் ஒரே தரமானவை அல்ல என்பதுதான். மேலும் நம் வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஒரு பெருமதி உண்டு என்பதையும் அந்த நபிமொழிகள் உணர்த்துகின்றன.

பின்வரும் நபி மொழிகளை பாருங்கள்;

"நீதியான தலைவரின் ஒரு நாள் வாழ்க்கை மற்றவரின் 60 ஆண்டு வழிபாட்டை விட மிகச் சிறந்தது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்; அபூஹுரைரா(ரலி) நூல்: தைலமி)

"உங்களில் இறையச்சம் குறைந்த ஒருவரை விட நான் எப்படி சிறந்தவனோ, அதுபோல ஒரு வணக்கசாலியை விட, ஒரு அறிஞர் சிறந்தவர்." என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர் அபூ உமாமா(ரலி) நூல் திர்மிதி)

"ஆயிரம் வணக்கசாலிகளை விட சைத்தானுக்கு கடும் விரோதி ஒரு அறிஞர் தான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: இப்னுமாஜா, திர்மிதி)

ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் அவர் ஏற்றுக்கொண்ட துறைக்கு ஏற்ப மதிப்புமிக்கது என்பதை அந்த நபிமொழிகள் அழகாகச் சொல்கின்றன. இந்த நபிமொழிகள் வைத்து ஒவ்வொருவரும் தம் வாழ்வை உரசி பார்த்தால் அவர்களின் தவறுகள் புறப்படும். இன்றைய காலகட்டத்தில் இஸ்லாமிய நாடுகளை இரண்டு பேராபத்துகள் சூழ்ந்திருக்கின்றன.

ஒன்று:

இஸ்லாமிய கொள்கை கோட்பாட்டில் பிற கொள்கைகள் கலப்பது. அவை மிகைப்பது. அதாவது இஸ்லாத்தின் ஆன்மீக புதிய செல்களை அழிப்பது. இப்படி தொடர்ச்சியாக இஸ்லாமிய நாடுகளை ஆக்கிரமிப்பதும் அகீதா எனும் கொள்கையை சிதைப்பதும் நடந்து நிறைவுறுமானால் பிறகு மார்க்கத்தின் சின்னங்களை நிலைநாட்ட இயலாமல் போய்விடும். அல்லாஹ்வின் கட்டளைகளை செயல்படுத்தவோ அவனது சட்டங்களை அன்றாட வாழ்வில் கடைபிடிக்கவொ இயலாமல் போய்விடும். எனவே தான் சொல்கிறேன்

வேறு விஷயங்களில் மக்களின் கவனத்தை திருப்புவதும் இஸ்லாத்தை பாதுகாக்கும் பணி அதுவே என்று பேசுவதும், அது முக்கிய பிரச்சனையை கைவிடுவதாகிவிடும். இஸ்லாமிய நாடுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் தன் கட்டுப்பாட்டில் வைத்திட வல்லரசு நாடுகள் முயல்கின்றன. பல்வேறு வழிகள் மூலம் இஸ்லாமிய அகீதா கொள்கைகளை அழிக்கின்றன. முரட்டுப் பிடிவாதம் கொண்ட புதிய வழிமுறைகளும், சிந்தனைகளும் பல்வேறு வடிவங்களில் முஸ்லிம்களின் மத்தியில் பரவி வருகின்றன.

இந்த சூழ்நிலையில் தராவி 8 ரக்அத்தா? 21 ரக்அத்தா? ஒரு பள்ளிவாசலில் ஒரு தொழுகைக்கு ஒரு ஜமாத் மட்டும் தான் நடத்த வேண்டுமா? பல ஜமாத் நடத்தலாமா? மேலும் அகீதா எனும் நம்பிக்கை சார்ந்த கொள்கைகள் உடன் நேரடியான தொடர்பு இல்லாத விஷயங்களில் சுன்னத் என்ற பெரும் போர்த் தீயை மூட்டுவது இதெல்லாம் நியாயம்தானா? இந்த சூழ்நிலையில் முஸ்லிம்களை கூறுபோட்டு அணி அணியாக பிரிப்பது சரியா? நான் இப்படி சொல்வதை வைத்து அவற்றைப் பற்றிய அறிவுபூர்வமான விவாதங்களை செய்யக்கூடாது என்று நான் கை விட்டதாக நினைத்து விடக்கூடாது.

இது போன்ற கருத்து வேறுபாடுகள் அகீதாவை பாதிக்கும்போது விழிப்புணர்வை ஏற்படுத்துவது கடமை என்பதை நான் மறுக்கவில்லை ஏற்கிறேன். வணக்க வழிபாட்டு முறைகள் சரியான வழியில் அமைந்த மக்களிடையே விழிப்புணர்வை அழகிய வழிமுறையைக் கையாண்டு ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் வணக்க வழிபாடுகள் என்பவை நபி(ஸல்) அவர்கள் செய்தும் சொல்லியும் காட்டியபடி தான் இருக்க வேண்டும். அதை கூட்டவோ குறைக்கவோ கூடாது. ஆனால் அதை வைத்தே முஸ்லிம்களிடம் நிலவும் பூசலும் பிணக்கும் பகையும் ஏற்படுமானால் அது பெரும் ஆபத்தை ஏற்படுத்திவிடும். எனவே ஏற்படப்போகும் பேராபத்தை கவனத்தில் கொண்டு இது போன்ற விவாதங்களை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் முஸ்லிம்கள் மத்தியில் பிளவு ஏற்படுவதை தவிர்க்க வேண்டும். முஸ்லிம்கள் தமது வலிமையை காட்ட வேண்டிய நாடுகளிலும் சூழ்நிலைகளிலும் ஒற்றுமையுடன் திகழ வேண்டும்.

அதிமுக்கிய அடிப்படையான அகீதா விஷயத்தில் நமக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டால் மட்டும் ஆரோக்கியமான விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்கிறார் பேராசிரியர் முகமது முபாரக். (நூல்: அல்ஃபிக்ருல் இஸ்லாமிய்யுல் ஹதீஸ். பக்கங்கள் 65-69)





**சென்னை திருவெல்லிகேணியில் தாருல் இஸ்லாம் அறக்கட்டளை சார்பாக, "உலகளாவிய அளவில் முஸ்லிம்களுக்கு எதிராக பின்னப்படும் சதி வலைகள் குறித்தும் அதில் உலக முஸ்லிம்களின் நிலை என்ன? என்பதை குறித்தும் உரையாற்றப்பட்டது.(அல்ஹம்துலில்லாஹ்)**

# சிலுவைப் போர் 2.0

## CRUSADE 2.0 BY JOHN FEFFER




**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**


இன்றைய நாள்களில் மேலை நாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095இல் தொடங்கி 1274இல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது. சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991இல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

அல்ஹம்துலில்லாஹ். இந்தத் தொடர் தொடக்க நாள் தொட்டே வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்று வருகின்றது. இப்போது நடக்கும் உலக நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள இஃது இன்னும் அதிகமாகப் பயன்படுகின்றது என்ற தகவல்கள் வந்து கொண்டே இருக்கின்றது. பலர் இதனை புத்தக வடிவில் உடனேயே எதிர் பார்க்கின்றார்கள். இன்ஷா அல்லாஹ் அந்தத் திசையில் விரைந்து பணியாற்றி வருகின்றோம். தேவையான நிதி கையில் கிடைக்கப் பெற்றதும் இன்ஷா அல்லாஹ் நூல் உங்கள் கைகளில் கிடைக்கப் பெறும்.

இப்போது ஜான் பெஃபர் அவர்கள் இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்த்திட அவர்கள் மேற்கொண்டு வரும், மேற்கொண்ட முயற்சிகளைப் பட்டியலிடுவதைப் பார்ப்போம்;




*இன்றைக்கு நாம் நடத்தும் சிலுவைப் போரின் மறு பெயர், நாகரீகங்களின் மோதல் என்ற Clash of Civilization இன் எல்லா பண்புகளையும் பெற்றது.(பார்க்க அடிக்குறிப்பு)*

*இது முஹம்மத்(ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும், ஈஸா(அலை) - ஜீஸஸ் அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையே நடப்பதாகக் கருதப்படுகின்றது. இந்த முஸ்லிம்கள் ஜெரூஸலத்தைக் கையிலெடுத்து விடுவார்கள் மேலை நாட்டவர்களின் கலாச்சாரத்தை விழுங்கி விடுவார்கள் என்றொரு பீதி இடைவிடாமல் உருவாக்கப்பட்டு பரப்பப்படுகிறது.*

*இந்தப் பீதியை உருவாக்கப் பயன் படுத்தப்படும் இதர நிகழ்வுகள், யூதர்கள் ஜெரூஸலத்திற்கான பயணத்தை மேற்கொண்ட போது வழியில் கூட்டாக கொலை செய்யப் பட்டதாக ஒரு புனைவு. காண்ஸ்டாண்டி நோபுள் (இன்றைய இஸ்தான்புல்) முஸ்லிம்களால் வெற்றிக் கொள்ளப்பட்ட போது கொலை செய்யப்பட்ட கத்தோலிக்க கிருஸ்தவர்கள் (பார்க்க குறிப்பு 2) "பால்கன்" பகுதிகளில் கொலை செய்யப்பட்ட கிருஸ்தவர்கள். (பார்க்க அடிக்குறிப்பு 3)*

*பாலஸ்தீன் நிலபரப்பின் இடைக்கால வரலாற்றில் சிலுவைப் போர்கள் நடைபெற்றன. (கி.பி. 1095 - 1274) இந்தச் சிலுவைப் போர்களின் போது கிருஸ்தவர்கள் தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டார்கள். அதேப் போல், யூதர்களோடும் மோதினார்கள். அவர்கள் முஸ்லிம்களுக்கு உதவி செய்த கிருஸ்தவர்களையும், யூதர்களையும் கொலை செய்தார்கள். (பார்க்க அடிக்குறிப்பு 4)*

*"சார்லிமேன்" என்ற கிருஸ்தவ பேரரசன் பாஸ்கியூஸ் என்ற மொழி பேசும், பாஸ்கியூஸ் பகுதியில் வாழும் கிருஸ்தவர்களை அடிக்கடி தாக்கினான். அடிக்கடி அவர்களது நாடு நகரங்களையெல்லாம் கொள்ளை அடித்தான். அதே போல் அவன் முஸ்லிம்கள் ஆட்சிச் செய்து கொண்டிருந்த அந்தலூஸ் பகுதியான ஐபீரியாவையும் கைப்பற்றிடவும், கொள்ளை அடிக்கவும் முயற்சிகளை மேற்கொண்டான். போர்கள் நடைபெற்றன. இந்தப் போர்களுக்கு பேரரசன் சார்லிமேன் - இன் மதமான கிருஸ்தவம் காரணமாக அமைந்திடவில்லை.*

*அதேபோல், ஐபீரியாவில் வாழ்ந்த மக்களின் மதமான இஸ்லாமும் காரணமல்ல.(சார்லிமேன் இதரப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களோடும் பாக்தாத்தில் வீற்றிருந்த இஸ்லாமியக் குடியரசு தலைவர் கலீபாவுடன் நல்லுறவும், நெருங்கிய*

தொடர்பும் வைத்திருந்தார். இதனை சென்ற தொடரில் குறிப்பிட்டிருந்தோம் - (மொ.ர்.)

(ஐபீரியா, பாஸ்கியூஸ் கிருஸ்தவர்கள் இவர்களைப் பற்றி அறிந்திட அடிக்குறிப்பு 5-ஐ பார்க்கவும்)

இந்த வரலாறு இப்படி இருக்க நாங்கள் கிருஸ்தவர்கள், கிருஸ்தவர்கள் மீது நடத்திய அத்தனை தாக்குதல்களையும் முஸ்லிம்கள் நடத்தியதாகவே வரலாற்றைப் படைத்தோம். மாணவர்களுக்கும் மக்களுக்கும் ஒன்று போலவே கற்பித்தோம்.

அதே போல் யூதர்களை குரூரமாகக் கொலை செய்ததையும், முஸ்லிம்களின் மீதே போட்டோம். இதன் மூலம் கிருஸ்தவர் களுக்கும், யூதர்களுக்குமிடையே நெருக்கங் களை ஏற்படுத்தினோம். முஸ்லிம்களைப் பரம எதிரிகளாகக் கட்டினோம். வெறுப்பு வளர்ந்தது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்..

அன்பார்ந்த வாசகர்களே!

ஜான் பெஃபர் அவர்களுடைய நூல், மிகவும் பாரதூரமான வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டது. அந்த வரலாற்றைப் புரிந்து கொண்டால் மட்டுமே, இந்தத் தொடரைப் புரிந்து கொள்ள முடியும்.

அந்த வரலாற்றை நாங்கள் அடிக் குறிப்புகளாகத் தருகின்றோம். வாசகர்கள் அவற்றை ஆழ்ந்து படிக்க வேண்டும் என அன்புடன் வேண்டுகின்றோம். அந்த வகையில் மெத்த சிரமங்களுடனேயே இந்தத் தொடரை தயார் செய்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்! இதனால் கட்டுரைப் பகுதிகளை விட அடிக்குறிப்புகள் அதிகமாக இருக்கின்றன.

இந்தத் தொடரைப் படிக்கும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகின்றது என்பதை நித்தமும் வரும் தொலைபேசி அழைப்புகள் உறுதி செய்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்!

வாசகர்கள் வாசிப்பை எளிதாக்கிட வரலாற்று நிகழ்வுகளின் குறிப்புகள் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்கள்.

**குறிப்புகள்:**

Clash of civilizations and the Remaking of the world order - அமெரிக்காவின் போர் திட்டம், உலக அரங்கில் மேலை நாடுகளின் கலாச்சாரங்கள் நாகரீகங்கள் இவற்றை திணிப்பதற்கான போர் திட்டம். இந்தப் போர்த் திட்டத்தை வரைந்து வடிவமைத்துத் தந்தவர் சாமுவேல் பி. ஹண்டிங்டன் என்பவர். இந்த போர் திட்டத்தின் முன் வரைவு 1992ஆம் ஆண்டு அமெரிக்காவின் "Foreign Affairs" வெளிநாட்டு விவகாரங்கள் என்ற அரசு பத்திரிகையில் வெளியிடப்பட்டது. வெளியிட்டதின் நோக்கம் உலகெங்கிலும் உள்ள அறிவுஜீவிகள் இந்தத் திட்டம் குறித்த தங்கள் கருத்துக்களைச் சொல்லிட வேண்டும்..

இப்படி வரும் கருத்துக்களில் பாராட்டுக்கள் புறக்கணிக்கப்படும். விமர்சனங்கள் வரவேற்கப் படும். திட்டத்தைக் கூர்மைப்படுத்தும் சீரிய ஆலோசனைகளுக்குப் பரிசளிக்கப்படும். இந்த நூலைப் பற்றிய முழுமையான ஆய்வுரை ஒன்றினை வைகறை வாசகர்களிடம் சமர்ப்பித்துள்ளோம்.

இங்கே இந்தத் தொடரில் ஜான் பெஃபர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல் அமெரிக்காவில் பல்வேறு ஆய்வு நிறுவனங்கள் இதற்காகவே இயங்குகின்றன. இந்த ஆய்வு நிறுவனங்களுக்குப் பின் பெரிய பெரிய அறக்கட்டளைகள் இருக்கின்றன. இந்த அறக்கட்டளைகளின் பெரும் நிதி உதவியுடன் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த ஆய்வு நிறுவனங்கள், இந்தப் போர் திட்டத்தைக் கூர்மைப்படுத்தித் தந்தன. அத்தோடு துணைப் போர் திட்டங்களையும் வரைந்து தந்தன. இப்படி விமர்சனங்கள் அலோசனைகள் இவற்றிற்கு பின் இந்தத் திட்டம் முழுமைப்படுத்தப்பட்டு 1997இல் வெளியிடப்பட்டது.

இந்த திட்டம் வெளியான போது முஸ்லிம்களில் பலர் இஸ்லாமிய இயக்கத்தவர்கள் இது இன்னொரு சிலுவைப் போருக்கான திட்டம் தான் எனப் பிரகடனப்படுத்தினார்கள். அப்போது இந்தப் போர் திட்டத்தை வடிவமைத்தவர்கள் இது எங்கள் போர் திட்டம் - தீவிரவாதத்திற்கெதிரான போர் திட்டம் தான். அது முஸ்லிம்களுக்கோ, இஸ்லாத்திற்கோ எதிரானது அல்ல என்றார்கள். ஆனால் ஜான் பெஃபர் "Clash of civilizations - என்ற நாகரிகங்களின் மோதலும்" நவீன சிலுவை யுத்தமும் ஒன்றுதான் என்பதை ஒத்துக் கொள்கின்றார். ஆகவே இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்ட இஸ்லாமிய இயக்கத்தவர்கள் தொடக்க நாட்களில் சொன்னது உண்மை என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

இதில் நாம் மெத்த வேதனையோடு கவனிக்க வேண்டியது என்னவெனில் சிலுவைப் போர் -

Crusade எனப் பெயரிட்டிருந்தால் முஸ்லிம் உலகம் விழித்துக் கொண்டு ஓரணியில் நின்றிருக்கும், இதற்கு தீவிரவாதத்திற்கு எதிரான போர் - Global War of Terror எனப் பெயர் வைத்ததால் முஸ்லிம் நாடுகளே இந்தப் போரில் இந்த மேலை நாடுகளுக்கு துணை போய் விட்டன.

இந்த வகையில்தான் பாகிஸ்தானின் விமான தளங்களைப் பயன்படுத்தி ஆப்கானிஸ்தானின் மக்களையும், வனப்பான மலைக் குன்றுகளையும், மழலைகள் பயின்று கொண்டிருந்த மதரஸாக்களையும் அழிக்க முடிந்தது.

அதேப்போல் கத்தார் நாட்டின் விமானத் தளங்களைப் பயன்படுத்தி ஈராக் நாட்டின் மீதும் அதன் இஸ்லாமியக் கலாச்சார அடையாளங்கள் மீதும் தாக்குதலை நடத்திட முடிந்தது. தகர்த்திட முடிந்தது. இனி வரும் தலைமுறையினருக்கு அவைக் கிடைத்திடாமல் செய்திட முடிந்தது. இத்தனையையும் அவர்கள் சிலுவைப் போர்கள் என வைத்திடாமல் தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்றும், நாகரிகங்களின் மோதல் என்றும் பெயர் வைத்ததால் நடந்தவை.

இஸ்லாத்தின் எதிரிகள் எத்துணை நுணுக்கமாகப் போர்த்திட்டங்களை வகுக்கின்றார்கள் என்பதை அறிந்திட இஃதோர் அரிய எடுத்துக்காட்டாய் அமைகின்றது. இந்தப் பின்னணிகளைப் புரிந்து கொள்ளவும் அவற்றை வேறுக்க முஸ்லிம்கள் முன்வந்திட வேண்டும். அதிகமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். அமெரிக்க முஸ்லிம்கள் இதை தாராளமாக செய்து வருகின்றனர். அல்ஹம்துலில்லாஹ்!

**அடிக்குறிப்பு 2:**

பாஸ்கியூஸ் என்பது ஒரு மொழியின் பெயர். இந்த மொழியைப் பேசுபவர்கள் பெரும்பாலும் கிருஸ்தவர்களாகவே இருந்தார்கள். இவர்கள் பெரும்பாலும் பிரான்ஸ் நாட்டுக்கும், ஸ்பெயின் நாட்டுக்கும் இடையேயுள்ள அடர்ந்த அழகான மலைப் பகுதியில் வாழ்ந்தார்கள். இந்தப் பகுதியைத் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்திட பிற பகுதிகளை ஆட்சி செய்து கொண்டிருந்த, கிருஸ்தவ மன்னர்கள் காலமெல்லாம் முயற்சி செய்து கொண்டே இருந்தார்கள்.

**அடிக்குறிப்பு 3:**

பால்கன்ஸ் என்பதும் ஐரோப்பாவிலுள்ள ஒரு பகுதி குறிப்பாக வடகிழக்கு ஐரோப்பாவிலுள்ள ஒரு பகுதி (தீபகற்பம் - மூன்று பக்கம் கடல்களாலும், ஒரு பக்கம் நிலப்பரப்பு - மலை முகடுகள் இவற்றாலும் சூழப்பட்ட இந்த பகுதியை வைத்துத்தான் இதற்கு பால்கன் பகுதி எனப் பெயர் வைக்கப்பட்டது. இஸ்லாம் இங்கே நீண்ட நாட்களாக நிலை கொண்டிருந்ததால் இந்த பகுதிக்கு ஐரோப்பாவின் துருக்கி என்றொரு பெயரும் உண்டு. இது உதமான் கிலாபத்தின் (உதுமானிய பேரரசு) ஒரு பகுதியாகவும் இருந்தது.

"இஸ்லாத்திற்கெதிரான உணர்வுகள் மேலைநாட்டு கலாச்சாரத்திலும் சமூக அமைப்பிலும் மிகவும் ஆழமாக வேரூன்றி நிற்கின்றது. அது இஸ்லாத்தை கண்மூடித்தனமாக எதிர்க்க வேண்டும் என்று செயல்படும் சிறு குழுவோடு நின்றுவிடவில்லை.

இஸ்லாத்தின் மீதான இந்த வெறுப்பை அமெரிக்க அரசின் கொள்கைகள் அணைந்திடாமல் பாதுகாத்து வருகின்றன. இந்த வெறுப்பின் உக்கிரத்தை அமெரிக்கா தொடுத்து வரும் போர்களிலும் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளிலும் (இஸ்லாத்திற்கு எதிரான நடவடிக்கைகளிலும்) காணலாம்.

இப்போது பொதுத்தளத்தின் நாடி நரம்புகளிலெல்லாம் அது(இஸ்லாத்தின் மீதுள்ள வெறுப்பு) ஓடிக் கொண்டிருக்கின்றது. இந்த வெறுப்பு அதற்காக உருவாக்கப்படும் தவறான எண்ணங்கள் - சிந்தனைகள் இவையெல்லாம் ஆயிரம் வருடங்களுக்குப் பின்னாலிருந்து தொடங்குகின்றன.

2010 ஆம் ஆண்டு கோடை காலத்தில் அமெரிக்கா இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் கொட்டிய வெறுப்பு எந்த அடிப்படையுமில்லாதது. எந்த ஆதாரமும் இல்லாதது.

**- ஜான் பெஃபர் Crusade 2.0 The West's Resurgent war on Islam - Page - 11**

**- Intro - MGM**

அடிக்குறிப்பு 4:

முதல் சிலுவைப் போர் 1095இல் தொடங்கி 1274இல் முடிந்தது என்பது ஐரோப்பிய வரலாற்று ஆசிரியர்களின் குறிப்பு 1247இல் இது முடிவுற்றது என்பது முஸ்லிம் வரலாற்று குறிப்பு. சிலுவைப் போர்கள் தொடங்குவதற்கு முன்பு கிருஸ்தவர்கள் பல்வேறு குழுக்களாக பிரிந்தும், பிளவுண்டும் கிடந்தார்கள். இவர்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டும் இருந்தார்கள். சிலுவைப் போர்கள் தொடங்கிய நிலையிலும் இவர்கள் தங்களுக்கிடயே போரிட்டுக் கொள்வதை நிறுத்திடவில்லை. போரின் சூழ்நிலையை தங்களுக்கு வேண்டாத (கிருஸ்தவ) குழுக்களைப் பழி தீர்த்துக் கொள்ளப் பயன்படுத்தினார்கள். அத்தோடு எதிர்பட்ட யூதர்களையும் கொலை செய்தார்கள். கிருஸ்தவர்கள் தங்களுக்கிடையே உள்ள போரில் தங்களுக்குள் வெட்டுக் குத்துக்களைத்தான் நடத்தினார்கள். ஆனால் யூதர்களை கொத்துக் கொத்தாக நெருப்பிட்டு கொழுத்தினார்கள்.

இந்தக் கபளீகரங்களுக்கும், கொலைகளுக்கும் அவர்கள் சொன்ன காரணம், அவர்கள் எதிரிகளான முஸ்லிம்களுக்கு இரகசியமாக உதவி செய்கின்றார்கள் என்பதே!

அடிக்குறிப்பு:5

அல் அந்தலூஸ் என்ற அரபி மொழிச் சொல் ஸ்பெயின், இன்றைய ஐபீரியா, செப்டிமேனியா ஆகிய பகுதிகள் அடங்கியது. காலப் போக்கில் அது ஸ்பெயினை மட்டுமே குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது. இந்த ஸ்பெயினில் முஸ்லிம்கள் 711 முதல் 1493 வரை ஆட்சி செய்தார்கள். அவர்களின் ஆட்சிக்காலத்தின் கடைசிக்கட்டத்திலும், அவர்கள்(முஸ்லிம்கள்) தங்கள் ஆட்சியை ஸ்பெயினில் நிலைநாட்டுவதற்கு முன்பும் யூதர்கள் - கிருஸ்தவர்களால் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு - உயிரோடு நெருப்பிட்டு கொளுத்தினார்கள்.

ஆனால் இவற்றையெல்லாம் முஸ்லிம்கள் செய்ததாக பிரச்சாரம் செய்தார்கள். பிரச்சாரம் மட்டுமல்ல பாடங்களாக எழுதி பள்ளிக் கூடத்தில் பயிற்றுவித்தார்கள். மேலே நாம் குறிப்பிட்ட ஸ்பெயின் மற்றும் பால்கன் பகுதிகளை பொறுத்தவரை பெருமானார்(ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு இப்படி இடம் பெறுகின்றது.

**“ஸ்பெயினிலிருந்தும், பால்கன் பிரதேசங்களிலிருந்தும் இஸ்லாம் இரண்டு முறை விரட்டப்படும். பின்னர் மீண்டும் ரோம் கைப்பற்றப்பட்டு ஐரோப்பாவிற்குள் இஸ்லாம் நுழையும்” (முஸ்னத் அஹ்மத்)**



**இந்நிகழ்ச்சியில் Who Killed Karkare நூலின் ஐந்தாம் பதிப்பு வழங்கப்பட்டது. நூலை பார்த்ததும் மகிழ்ந்து மீண்டும் ஒரு முறை கை குலுக்கினார் முனைவர் தொல். திருமா. எம்.பி.**

**நிகழ்ச்சி ஏற்பாடு: விடுதலை சிறுத்தைகள் கட்சி - சிறுபான்மையினர் பிரிவு**



**29.05.2019 அன்று சென்னை எழும்பூர் பைஸ் மகாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில்.**



# மதிமுக இஃப்தார் நிகழ்ச்சி

31.05.2019 சென்னை எழும்பூர் சிராஜ் மஹாலில் மதிமுக சார்பில் இஃப்தார் நிகழ்ச்சி நடத்தப்பெற்றது. அதில் மந்தைவெளி தலைமை இமாமான கே.எம். இல்யாஸ் ரியாஜி அவர்கள் கலந்து கொண்டார்கள்.

வாழ்த்துரை வழங்கி, மதிமுக பொதுச்செயலாளர் மாமா வைகோ அவர்களுக்கு வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்களை வழங்கினார். விரைவில் மாநிலங்களவை உறுப்பினராக ஆகிட வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

மலர்ந்த முகத்துடன் நூல்களை பெற்றுக்கொண்டார் வைகோ.






வழங்கிய நூல்கள்:

- **Brahminist Bombed Muslims hanged.**
- **Who killed Karkare.**
- சுவாமி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம்.
- நாடார்கள் வரலாறு கறுப்பா காவியா?
- நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்துக்கு வந்த உண்மைகள்.
- 26/11 விசாரணை. நீதித்துறையும் மயங்கியது ஏன்?

# இந்திய சுதந்திர தியாகிகளின்



# நோன்பு

அலீ சகோதரர்கள் இந்திய சுதந்திரத்தில் முக்கிய பங்கு வகித்தார்கள். ஒரு சமயம் காந்திஜி வெள்ளையர்களை பார்த்து சொன்னார், "நான் உங்களை பார்த்து பயப்பட மாட்டேன். காரணம் என்னிடம் இரு சிங்கங்கள் இருக்கின்றன. அவை மௌலானா முகமது அலி, சௌகத் அலீ" இதிலிருந்து அலீ சகோதரர்களின் வீரமும் விவேகமும் விளங்கும்.

மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர்களான அலீ சகோதரர்கள் சுதந்திரப் போராட்ட காலத்தில் நாடு பூராவும் பயணம் செய்தார். ஏன் நம் குமரி மாவட்டத்திற்கு தாய் பீ அம்மாவுடன் நாகர்கோவில் வந்தார்கள். ஒழுகினசேரியில் இன்று தீயணைப்பு நிலையம் இருக்கும் சத்திரம் பகுதியில் நடைபெற்ற சுதந்திரப் போராட்ட விளக்கப் பொதுக்கூட்டத்தில் கலந்து அலீ சகோதரர்கள் உரை ஆற்றி உள்ளனர்.

சுதந்திர போராட்ட காலத்தில் தானும் சகோதரர் முகம்மது அலியும் நோன்பு மாதமாகிய ரமலானில் கைது செய்யப்பட்டதையும், சிறையில் நோன்பை பேணுதலுடன் நோற்றதையும் தன் வரலாற்றுக் குறிப்பில் மவுலானா சவுக்கத் அலீ பின் வருமாறு குறிப்பிடுகிறார்;

எங்கள் தாயார் பீ அம்மாவும், தம்பி முஹம்மது அலீ பிள்ளைகளும் நோன்பு காலம் ஆகையால் சிறிது பாலருந்தி தூங்கி விட்டார்கள். இரவு சுமார் 11 மணி அளவில் நாங்களும் தூங்கிவிட்டோம். நோன்பு நேரம் ஆகையால் சுமார் 2.30 மணி அளவில் நானும் முகம்மது அலீயும் எழுந்து ஸஹர் (அதிகாலை உணவு) உண்டு படுத்தோம்.

அதிகாலை சுமார் 4 மணியளவில் போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்து கதவை தட்டுகின்றனர். நான் கதவைத் திறந்ததும் நீங்களும் உங்கள் தம்பியும் பாதுகாப்பு சட்டத்தின்படி கைது செய்யப்படுகிறீர்கள் என்று துணை போலீஸ் கமிஷனர் திரு.புலூட்டனும், துணை போலீஸ்



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
குளச்சல்

இன்ஸ்பெக்டர் ஜெனரல் தெரு. றைட் இருவரும் சொன்னார்கள். உங்கள் தம்பி முஹம்மது அலீ எங்கே என போலீஸ் அதிகாரி திரு. றைட் கேட்டார். நான் தம்பி அறையில் தூங்குவதாக சொன்னேன்.

போலீஸ் அதிகாரி திரு.றைட் சப்தமிட்டு தூக்கத்தில் இருக்கும் முகமது அலீயை எழுப்பினார். தூக்கத்திலிருந்து எழுந்து வந்த முகமது அலீயிடம் உங்களையும் உங்கள் சகோதரரையும் கைது செய்ய வந்துள்ளதாக கூறிவிட்டு, உடல் பூராவும் பரிசோதித்து விட்டு சிறைக்கு கொண்டு போக ஆயத்தமானார்கள்.

தம்பி முஹம்மது ஹூசைனிடம் நானும் முகமது அலீயும், ஆலிங்கனம் செய்து விட்டு விடைபெறும் பொழுது தம்பி அழுது விடுகிறார். அழுவதைப் பார்த்த முஹம்மது அலீ தன் தம்பி முகம்மது உசைனின் கன்னத்தில் ஒரு அறை கொடுத்து விட்டு, "நாம் எந்த நேரத்திலும் ஆங்கிலேயனுக்கு முன்னால் நம் பலஹீனத்தை வெளி காண்பிக்கக் கூடாது" என அறிவுரை சொன்னார்.

தாய் பீ அம்மாவிடம் நானும் முகமது அலீயும் விடைபெறும் பொழுது, நானும் உங்களுடன் சிறைக்கு வருகிறேன் என தாய் பீ கூறினார்கள். அல்லாஹ் ரசூல் உடைய பெயரையும் சொல்லி தடுத்து விட்டோம். நாங்கள் இருவரும் சிறைக்கு செல்லும் பொழுது தாய் பீ அம்மா போலீஸ் வேன் வரை எங்களுடன் வந்து வழி அனுப்பி வைத்தார்கள். (ஆதிபாபானு) எங்கள் நோன்பு சிறையில் கழிந்தது. அலீ சகோதரர்கள் ஜெயிலில் இருந்து ஆங்கிலேயே அரசுக்கு எழுதிக் கொடுத்துவிட்டு வருகிறார்கள் என ஒரு வதந்தி மக்களிடையே பரப்பப்பட்ட போது, இவ்வதந்தியை கேட்ட தாய், "இது வதந்தி ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு ஒருகாலும் அடிபணிய மாட்டார்கள் என் பிள்ளைகள். அப்படி ஒருக்கால் வந்தால் நான் நாட்டிற்காக இரு பிள்ளைகளையும் என் இரு கைகளால் கொன்றுவிடுவேன்" என முழக்கமிட்ட தாயின் சுதந்திர வேட்கையை, தியாகத்தை என்னவென்பது?

மௌலானா முகம்மது அலீ ஜவஹர் லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பயின்றவர். பரோடா சமஸ்தானத்தில் கலால் பிரிவு கமிஷனராக இருந்து பதவியை நாட்டு விடுதலை வேட்கையால் தூக்கி எறிந்து விட்டு சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக பங்கு பெற்று சிறை சென்றவர். தன் பொருளாதாரப் பிரச்சினையால் வீட்டு வாசலை இழந்து இறுதி காலத்தில் டெல்லியில் ஒரு காடிகானாயென்னும் குதிரைலாயத்தில் துணியால் மறைத்து குடித்தனம் நடத்தினார் என்ற செய்தியை மர்ஹூம் காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிபிடம் அவர் நண்பர் பாருக்கீ சொன்னதாக ஜவஹர் நினைவு மலரில் காயிதே மில்லத் குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்படிப்பட்ட இந்திய சுதந்திர தியாகிகளை யாராவது நினைப்பதுண்டா? காக்கிநாடா காங்கிரஸ் மாநாட்டின் தலைவர் முஹம்மது அலீ ஜவ்ஹர் செயலாளராக ஜவஹர்லால் நேரு செயல்பட்டுள்ளார்கள்.

மவுலானா முகமது அலீ ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் கல்வி பயின்றவர் தான் அவர் தான் உண்மையில் கல்விக் கற்றதை இபபடிக் குறிப்பிடுகின்றார்.. நான் எனினும் சிறையில் திருக்குர்ஆனை கிளிப்பிள்ளை போல் அன்றி பொருளுணர்ந்து ஓதி உணர்ந்த நாளே நான் உண்மையாக கல்வி கற்ற நாளாகும். தம் சிறை வாழ்க்கை மூலம் தன்னை மார்க்க நெறியை உடையவனாக ஆக்கினார்கள் என்பது இதன் மூலம் தெரிகிறது. மேலும் ஜவஹர் எனும் புனைபெயரில் அரசியல் மார்க்க உணர்வுகளை கவிதை மூலம் மக்களிடையே காம்ரேடு, ஹம்தர்த் பத்திரிகை மூலம் கவிதை மூலம் மக்களிடையே தட்டி எழுப்பினார்கள்.

மௌலானா முகம்மதலீயைப் பற்றி ஆங்கிலேயே பேராசிரியர் எச்.ஜி.வெல்ஸ் குறிப்பிடும்பொழுது, "நெப்போலியனின் இதயத்தை உடையவர், அவரது பேனாவின் சக்தி மெக்காலேயின் எழுத்து வன்மைக்கு நிகரானது, அவரது நாவன்மை பர்கின் நாவான்மைக்கு ஈடானது என வர்ணித்துள்ளார். இப்படி மேனாட்டு அறிஞர்களின் பாராட்டைப் பெற்றவர் தான் தியாகி மௌலானா முகம்மதலீ ஜவஹர்.

அலீ சகோதரர்களின் தாய் நோன்பு மாதம் என்றும் பாராமல் தன் மகன்களோடு சிறை செல்லத் துணிந்த பாங்கு, வீரத்தாய்க்கோர் எடுத்துக்காட்டு. அலி சகோதரர்கள் நோன்பு மாதம் என்றும் பாராமல் சிறைவாசத்திற்கு இன்முகத்துடன் ஆங்கிலேயே போலீஸ் அதிகாரிகளுடன் சென்ற துணிவு உண்மை தியாகிக்கோர் எடுத்துக்காட்டு. நோன்பு நோற்கும் இவ்வேளையில் கடந்த கால வரலாற்று நிகழ்வுகளை நினைவுக்கு கொண்டு வருவது நல்லது. நோன்பை ஹலாலான உணவை உண்டு நோற்று ஐம்பொறிகளை இதயத்தை பாவமான காரியங்களில் ஈடுபடுத்தாமல் காப்பாற்றி நோன்பின் பலனை பெறுவோம். நல்லடியார்களின் இதயமானது இறைவன் இருப்பிடத்திற்கு சமமானது என்ற நபி(ஸல்) மணிமொழிக்கு இலக்கணமாக வாழும் மனித நேயம் பேணும் இறை அன்பை பெறுவோம்.

தலையங்கம்

# மோ(ச)டி ஜனநாயகம்

ஜனநாயகம் ஆபத்தில் உள்ளதாக இப்போது பலர் கூப்பாடு போட்டு வருகிறார்கள். ஜனநாயகத்திற்கு ஆபத்தா? அல்லது ஜனநாயகமே ஆபத்தா? என்ற கேள்வி எழத் தொடங்கி உள்ளது.

இந்த கேள்விக்கான காரணம் மிகத் தெளிவாக உள்ளது. இந்த ஜனநாயகத்தை உபயோகப்படுத்தித் தான் இன்று கொலையாளிகள், கொலைக்கூடாரத்தை சேர்ந்தவர்கள், தீவிரவாதிகள், குண்டு வைத்தவர்கள் என பலர் ஆட்சிக் கட்டிலை பிடித்துள்ளார்கள்.

வெறுப்பை உமிழ்பவர்கள், சிறுபான்மையினருக்கு எதிராக அநியாயம் அட்டூழியம் செய்பவர்கள் உலகின் பல பகுதிகளில் இந்த ஜனநாயகத்தை துணைக்கு அழைத்துத் தான் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளார்கள்.

இல்லையெனில் அமெரிக்காவில் டொனால்ட் டிரம்பும், இந்தியாவில் மோடியும் ஆட்சியை பிடிக்க இயலுமா? சிறைக்கு செல்ல வேண்டியவர்கள் எல்லாம் ஆட்சியிலே. சிறை சென்று பிணையில் உள்ளவர்களும் அரியணையில். இது தான் ஜனநாயகம்.

கூட்டமாக கொலை செய்த மோடி நாட்டின் பிரதமர். குண்டு வைத்து கொலை செய்த பிரக்யா சிங் தாகூர் நாடாளுமன்ற உறுப்பினர். ஆயிரம் தலைவெட்டி அமித்ஷா உள்துறை அமைச்சர். வாழ்க ஜனநாயகம்.

ஜனநாயகத்திற்கு இன்னொரு பெயர் கும்பல் மனோநிலை (mobocracy). ஆம். இதற்கு வேறு உதாரணமே கிடையாது. ஒரு கும்பலில் பெரும்பான்மையானோர் எடுக்கும் முடிவே அந்த கும்பலை வழி நடத்துகிறது. அது சரியோ? தப்போ?

ஒருவேளை அந்த கும்பலில் உள்ள பெரும்பான்மையானோர் சரியானவர்களாக இருந்தால் அந்த கூட்டம் சரியாக நடக்கும். இல்லையெனில் அந்த கூட்டம் தவறான பாதையில் நடக்கும். இது தான் ஜனநாயகமும்.

இதையும் தாண்டி சில நேரங்களில் ஒரு கூட்டத்தில் உள்ள குறைவான எண்ணிக்கையிலான நபர்கள் பெரும்பான்மையினரை தாங்கள் செய்யும் தப்புகளுக்கு பக்கவாத்தியம் வாசிக்க செய்து விடுவார்கள். சில நேரத்தில் தப்பானவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது குறைவான நல்லவர்களும் அவர்களின் மனோநிலைக்கு சென்று விடுவார்கள்.

இதற்கு ஓர் உதாரணம். சினிமா தியேட்டரில் உள்ள ஒரு கூட்டத்தை கவனியுங்கள். அங்கு விளக்குகளின் வெளிச்சத்தில் ஒரு சிலர் மட்டுமே கூச்சலும் கூப்பாடும் போட்டுக் கொண்டிருப்பார்கள். ஒரு சில முக்கியமான காட்சிகளுக்கு கைத்தட்டலும் விசிலும் பறக்கும். இதையும் ஒரு சிலர் மட்டுமே செய்து கொண்டிருப்பார்கள்.

இப்போது மின்சாரம் தடைப்பட்டு விட்டது என வைத்துக்கொள்வோம். முழு இருட்டு. படம் திரையில் நிறுத்தப்பட்டு விட்டது. உடனே எல்லோரும் கத்துகிறார்கள். இப்போது வெளிச்சத்தில் நல்லவர்களாக இருந்தவர்களும் சேர்ந்து கத்த தொடங்கி விடுவார்கள். அந்த கூட்டத்தின் உற்சாகத்தில் அவர்களும் தங்களை இணைத்துக் கொள்வார்கள். இது தான் கும்பல் மனோநிலை. இதுவே தான் இன்றைய ஜனநாயகம்.

இருட்டில் உற்சாகத்தில் தங்களை வெளிப்படுத்தியவர்கள் இயல்பில் அப்படிப்பட்டவர்களே. ஆனால் அவர்கள் வளர்ந்த சூழ்நிலை, சமூக கட்டுப்பாடு இவையெல்லாம் அவர்களை கட்டுப்படுத்தி வைத்திருந்தது. ஆனால் தகுந்த வாய்ப்பு கிடைத்த போது அவர்களுக்கு சாதகமாக மொத்த கூட்டமும் இருந்த போது அவர்களும் தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். இதுதான் கும்பல் உளவியல் (mob psychology).

இப்போது இந்தியாவில் பல முற்போக்காளர்கள், பத்திரிகையாளர்கள் என பலரும் தங்களை தங்களின் உண்மை நிலையை வெளிப்படுத்துவது இந்த கூட்ட மனோநிலையின் காரணத்தால் தான்.

இந்த கூட்ட மனோநிலை தான் இன்று பல அநியாயங்களை அரசு எந்திரங்கள் செய்ய காரணமாக உள்ளன. பல அநியாயமான தீர்ப்புகள் வெளிவரக்காரணமாக உள்ளன.

இது தான் ஜனநாயகம் எனும் போது இந்த ஜனநாயகத்தில் நமக்கு நீதியும் நியாயமும் இன்னமும் கிடைக்கும் என்று எப்படி நினைக்க இயலும்.

சுருங்கக் கூறுவதெனில் பெரும்பான்மையினர் விருப்பமே ஜனநாயகம். அது நியாயமானதாக இருந்தாலும் சரி! அநியாயமாக இருந்தாலும் சரி!!



பெரும்பான்மையினர் விரும்பினால் சிறுபான்மையினர் நிம்மதியாக மகிழ்ச்சியாக வாழலாம். இல்லையெனில் நீங்கள் அந்த நாட்டின் பூர்வீகக்குடியினர் என்ற போதிலும் நீங்கள் சிறுபான்மையினராக இருந்தால் பெரும்பான்மையினர் நினைத்தால் உங்களை சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கலாம். நீங்கள் இந்த நாட்டில் பிறந்தவர்களே கிடையாது என நாட்டை விட்டு துரத்தலாம். அதையே சட்டமாக்கலாம். அதனை நீதிமன்றங்களும் அங்கீகரிக்கும்.

இதுதான் இப்போது அசாமில் நடந்துள்ளது. முஹம்மது சனாவுல்லா என்பவர் அசாமில் பிறந்து வளர்ந்தவர். இந்திய இராணுவத்தில் 30 ஆண்டுகளாக சேவை செய்து இறுதியாக சுபேதாராக (கேப்டனுக்கு இணையான பதவி) இருந்து ஓய்வு பெற்றவர். இவர் இப்போது அசாமில் உள்ள தீர்ப்பாயத்தால் வெளிநாட்டவர் என தீர்ப்பு வழங்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளார். அவரை கோல்பாரா (Goalpara) ஜெயிலில் உள்ள காவல் மையத்தில் (detention center) சிறை வைத்துள்ளனர். அவருடைய ஆவணங்களில் உள்ள சிறு குறைபாடுகளை காரணம் காட்டி அவர் இந்த நாட்டின் குடிமகன் அல்ல என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2014இல் குடியரசுத் தலைவரின் சான்றிதழ், 2017இல் சுபேதாராக பதவி உயர்வு, கடந்த வருடம் அசாம் காவல்துறையின் எல்லைப்பிரிவு என நம் தேசத்திற்கு இவர் ஆற்றிய இவருடைய சேவை எதுவும் இவரை பாதுகாத்திடவில்லை. ஆவணங்களில் உள்ள சிறு குறைபாடுகள் இவரின் சேவைகளை அழித்துவிட போதுமானவை.

30 ஆண்டுகள் நாட்டிற்கு சேவை செய்ததற்கு நல்லதொரு தீர்ப்பை இந்த நாடு அவருக்கு

வழங்கியுள்ளது. காரணம் அவர் ஒரு சிறுபான்மையினத்தை சேர்ந்தவர்.

52 வயதான அவர் உயர்நீதிமன்றத்தை நாட உள்ளதாக கூறியுள்ளார். இது ஒரு புறம்.

இவரைப் போல் அசாமில் கிட்டத்தட்ட 40.07 இலட்சம் மக்கள் இப்படி இந்தியர்கள் அல்ல என சட்டம் இயற்றி அகதிகளாக்கப்பட்டு காவல் மையங்களில் வைக்கப்பட்டுள்ளனர். காரணம் அவர்கள் சிறுபான்மையினர். அவ்வளவே. பெரும்பான்மையினர் சிறுபான்மையினருக்கு எதிராக செய்யும் அநியாயங்களை தடுக்க ஜனநாயகத்தில் எந்த வழியும் இல்லை என்பதற்கு இது மிகச் சிறந்ததோர் உதாரணம்.

https://www.deccanherald.com

ஆனால் ஜனநாயகத்திற்கு மாற்றமான ஜனநாயகத்தை விட சிறந்த இன்னொரு கட்டமைப்பு உள்ளது. அதில் தீர்வும் உள்ளது. அதில் பெரும்பான்மையினர் சிறுபான்மை யினருக்கு எந்த அநீதியும் செய்துவிட இயலாது. அல்குர்ஆன் 5வது அத்தியாயம் 8வது வசனத்தில் இறைவன் பின்வருமாறு கட்டளையிடுகிறான்.

> ‘முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) – பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை (யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.‘

இஸ்லாமிய வரலாற்றில் ஒரு நிகழ்வு. கலீஃபா உமர் (ரலி) அவர்களுடைய ஆட்சியின் போது கிறித்தவர்களால் ஜெருசலேம் உமர்(ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. உமர் (ரலி) அவர்கள் ஜெருசலத்தின் ஆட்சியாளர் ஆனார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு முன்னதாகவே கிறித்தவர்கள் பலவீனமாக இருந்து யூதர்கள் பலமுற்றிருந்த நேரத்தில் மன்னர் கான்ஸ்டான்டைன் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொண்டார். இதன் பின்னர் கிறித்தவர்கள் பலமடைந்தனர். அவர்கள் தங்களின் இரட்சகர் ஏசு கிறிஸ்து யூதர்களால் கொல்லப்பட்டதற்கு பழி வாங்க தொடங்கினர். தேடித் தேடி அவர்களை கொலை செய்ய தொடங்கினர். இதன் ஒரு பகுதியாக யூதர்கள் ஜெருசலத்திலிருந்து முற்றிலுமாக விரட்டி அடிக்கப்பட்டிருந்தனர் இப்போது ஜெருசலேம் உமர் (ரலி) அவர்களின் கட்டுப்பாட்டில் வந்து விட்டது. இப்போது கலீஃபா உமர் (ரலி) அவர்களிடம் யூதர்கள் ஒரு கோரிக்கையை முன் வைத்தனர். தங்களை மீண்டும் ஜெருசலத்தில் குடியமர்த்த வேண்டும் என்பதே அந்த கோரிக்கை.

200 யூத குடும்பத்தினர் ஜெருசலத்தில் வாழ விருப்பம் தெரிவித்து இந்த கோரிக்கையை உமர் (ரலி) அவர்களிடம் முன்வைத்தனர். ஆனால் உமர் (ரலி) அவர்களுக்கும் ஜெருசலத்தில் உள்ள கிறித்தவர்களுக்கும் இடையே ஏற்கனவே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டிருந்து. வரலாற்று சிறப்பு மிக்க அந்த உடன்படிக்கை இன்றளவும் “உமர் உடன்படிக்கை” என்றே அழைக்கப்படுகிறது. அந்த உடன்படிக்கையின்படி யூதர்கள் அந்த பகுதியில் குடியேற முடியாது. எனவே யூதர்கள் ஜெருசலத்தில் குடியேற அனுமதி மறுத்து கிறித்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இப்போது அந்த யூதர்களுக்காக கிறித்தவர்களின் தலைவரிடம் உமர்(ரலி) அவர்கள் பேசினார்கள். அந்த யூதர்களின் நடவடிக்கைகளுக்கு தான் பொறுப்பேற்றுக் கொள்வதாக கூறினார். பல்வேறு கட்டங்களாக நடந்த பேச்சுவார்தையில் இதற்காக பல்வேறு சலுகைகளை உமர் (ரலி) அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்து யூத குடும்பங்களின் குடியேற்றத்திற்காக பேசினார். ஒரு கட்டத்தில் உமர் (ரலி) அவர்களின் பரிந்துரையை ஏற்று ஐம்பது யூத குடும்பங்களை குடியேற்ற கிறித்தவர்கள் ஒப்பு கொண்டனர்.

ஆனால் அதன் பின்னரும் அந்த கிறித்தவர்களிடம் தொடர்ந்து பேசி கடைசியாக எழுபது குடும்பங்களை ஜெருசலத்தில் குடியேற்ற கிறித்தவர்களிடம் அனுமதி பெற்றார் உமர் (ரலி) அவர்கள்.

உலகம் கவனிக்க வேண்டிய இரண்டு அம்சங்கள் இந்த சம்பவத்தில் உள்ளன.

ஒன்று அவர் கிறித்தவர்களிடம் செய்து கொண்ட உடன்படிக்கையை எந்த நிலையிலும் முறிக்கவில்லை. மீறவில்லை. அந்த கிறித்தவர்களிடம் யூதர்களுக்காக பேசி அவர்களின் சம்மதத்தை பெற்ற பின்னரே அங்கு யூதர்களை குடியேற்றினார். அங்கு அவரை கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் அந்த கிறித்தவர்கள் கிடையவே கிடையாது. அவரே

அவர்களின் ஒட்டு மொத்த ஆட்சியாளர். மிக பலவீனமான நிலையில் இருந்தவர்கள் கிறித்தவர்கள். மணிக்கு 80 கிலோமீட்டர் வேகத்தில் இஸ்லாம் பரவிக்கொண்டிருந்த காலமது. அவரை கட்டுப்படுத்தவோ தடுத்து நிறுத்தவோ யாருக்கும் தைரியமோ திராணியோ கிடையாது. ஒன்றே ஒன்று மட்டும் தான் அவரை கட்டுப்படுத்த முடியும். அது இறைவேதம்.

இரண்டாவது கிறித்தவர்களை விட சொற்பமான எண்ணிக்கையில் இருந்த அந்த யூதர்களுக்கு அவர் செய்த நீதி. அந்த இடத்தில் யூதர்களை குடியமர்த்த கிறித்தவர்களிடம் உமர் (ரலி) அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தை என்பது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பட வேண்டியது. சிறுபான்மையினரிலும் சிறுபான்மையினமான யூதர்களின் உணர்வுகளை புரிந்து அவர்களுக்கு நீதி செலுத்தினார் கலீஃபா உமர் (ரலி) அவர்கள்.

இந்தியாவில் உள்ள சிறுபான்மையினருக்கு இந்திய அரசியல் சாசனம் பல பாதுகாப்புகளை தந்துள்ளது. ஆனால் தற்போது அந்த அரசியல் சாசனம் தந்த பாதுகாப்புகள் கேள்விக்குறியாக்கப் பட்டுள்ளன. அரசு எந்திரங்களும் நீதி பரிபாலனங்களும் ஒன்று இதற்கு உடந்தையாக உள்ளன அல்லது அதனை எதிர்க்காமல் மௌனமாக உள்ளன. இது இரண்டுமே அரசியல் சாசனத்திற்கு ஆபத்தானது, சிறுபான்மை யினருக்கும் ஆபத்தானது.

எனவே நமக்கு இப்போது தேவைப்படுவது பெரும்பான்மை இனவாதமா அல்லது எல்லா நிலையிலும் விருப்பு, வெறுப்பு இல்லாமல் நீதியை நிலை நாட்டி இறைவழிகாட்டுதலில் வழி அமைந்த ஆட்சியா? எனதை மக்கள் மன்றத்தில் விரைவாகவும், வீரியத்துடனும் பிரச்சாரம் செய்திட வேண்டிய காலமிது.

இஸ்லாத்தின் அருமை, பெருமைகளை நன்றாக உணர்ந்தவர்கள் நம் நாட்டில் ஏராளமானவர்கள் சகோதர சமூகத்தைச் சார்ந்தவர்கள் இருக்கின்றார்கள். இது நமக்கு சாதகமான சூழல். அவர்கள் இந்த கும்பலாட்சியை ஏற்கவில்லை.



26.05.2019 அன்று நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தொல். திருமா. அவர்களுடன் சஹர் நிகழ்ச்சியில்.
அப்போது, முன்னாள் மராட்டிய மாநில ஐ.ஜி. அவர்கள் எழுதி அண்மையில் வெளிவந்த Brahmanists Bombed Muslims Hanged என்ற ஆங்கில நூல் 26/11 நீதித் துறையும் மயங்கியது ஏன்?, நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் ஆகிய நூல்கள் வழங்கிய போது எடுத்துப்படம்.

நூலைப் பற்றி வைகறை வெளிச்சம் ஆசிரியர் வழங்கிய அறிமுகத்தை ஆர்வமுடன் கேட்டார் முனைவர் தொல். திருமா எம்.பி. **Who Killed Karkare Latest edition** வேண்டும் என்று கேட்டார்.

நிகழ்ச்சி ஏற்பாடு விடுதலை சிறுத்தைகள் கட்சி.



# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)



அபூ அப்ரஹ்

## இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப்போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். தம் சொந்த மக்களையும் கூட அவர்கள் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன்முதலில் அவர்களை நோக்கி தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நியாபகப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னாபின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

**தினசரி செய்த தர்மம்**

*இமாதுத்துதீன் ஸங்கி அவர்கள் வெள்ளிக்கிழமைகளில் வெளிப்படையாக ஏழைகளுக்கு 100 தினார்களை பகிர்ந்தளிப்பது வழக்கம். அதேபோல் மற்ற நாட்களில் யாரும் அறியாத வண்ணம் ஏழைகளுக்கு உதவுவதும் அவருடைய வழமை.*

*ஒரு நாள் அவர் குதிரையில் சென்ற போது அதிலிருந்து கீழே இடறி விழப்பார்த்தார். கிட்டத்தட்ட விழுந்திருப்பார். ஆனால் விழவில்லை.*

*அவர் உடனே தன்னுடைய துணை ஆளுனர்களில் ஒருவரை அழைத்து ஏதோ கூறினார். ஆனால் அவர் என்ன கூறினார் என்பது அந்த துணை ஆளுனருக்கு புரியவில்லை. மீண்டும் அவரிடம் என்ன கூறினார் என்று கேட்பதற்கும் அவருக்கு தைரியமில்லை. இன்றோடு நாம் அவ்வளவு தான் என்று எண்ணிக் கொண்டு நேரே தன்னுடைய வீட்டிற்கு ஓடினார் அந்த துணை ஆளுனர். தன் மனைவியிடம் பிரியாவிடை கூறி தான் இந்த இடத்தை விட்டே ஓடப்போவதாக தன் மனைவியிடம் கூறினார்.*

*அவர் மனைவி அவரை சாந்தப்படுத்தி என்ன நிகழ்ந்தது? என்ன தவறு செய்தீர்கள்? இந்த ஊரைவிட்டே ஓட என்ன காரணம்? என்று பொறுமையுடன் கேட்டார்.*

*அந்த துணை ஆளுனர் நடந்தவற்றை கூறினார்.*

*அவர் மனைவி அவரை சமாதானப்படுத்தி இமாதுத்தீன் அவர்களின் உறவினரும் அரச குடும்பத்தை சேர்ந்தவருமான நசீருத்தீன்*



என்பவரை சந்தித்து இது குறித்து உதவ கோரும் படி கூறினார்.

ஆனாலும் அந்த துணை ஆளுனருக்கு பயம் போகவில்லை. புலம்பிக்கொண்டே இருந்தார். கடைசியில் ஒருவழியாக அவரை அவருடைய மனைவி தேற்றி தைரியம் கூறி நசீருத்தீனிடம் அனுப்பி வைத்தார்.

நசீருத்தீனிடம் வந்து நடந்தவற்றை அந்த துணை ஆளுனர் கூற நசீருத்தீன் சிரித்து கொண்டே இந்த பணப்பையை எடுத்துக் கொண்டு இமாதுத்தீனிடம் செல்லுங்கள், இதுதான் அவர் கேட்டது என்று கூறினார்.

அவருக்கு இன்னமும் பயம் தீரவில்லை. "யா அல்லாஹ், நீயே எனக்கு பாதுகாவலன்" என வாய்விட்டு கூறினார்.

அப்போது நசீருத்தீன் அவர்கள், "பயப்படாதீர்கள், அவர் இந்த தினார்களை தான் கேட்டார் என்பது எனக்கு நிச்சயமாக தெரியும். நீங்கள் அவரை சென்று பாருங்கள்" என்று மீண்டும் கூறினார்.

அவரும் வேறுவழியின்றி இமாதுத்தீன் ஸங்கி அவர்களை தயக்கத்துடன் சென்று பார்த்தார். இமாதுத்தீன் அவர்கள் "நீ ஏதாவது கொண்டு வந்திருக்கிறாயா?" என்று கேட்டார்.

"ஆம். இவ்வளவு தினார்களை கொண்டு வந்துள்ளேன்" என்று அவர் பதிலளிக்க அதனை உடனடியாக ஏழைகளுக்கு வழங்க உத்தரவிட்டார் இமாதுத்தீன் அவர்கள்.

இவையெல்லாம் முடிந்ததும் அந்த துணை ஆளுனர் நசீருத்தீன் அவர்களை சந்தித்து இமாதுத்தீன் அவர்கள் இந்த பணத்தை தான் கேட்டார் என்று உங்களுக்கு எப்படி தெரியும் என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த நசீருத்தீன், "இமாதுத்தீன் தினமும் இந்த அளவிற்கு பணத்தை தர்மம் செய்யும் வழக்கம் கொண்டிருந்தார். அன்றைய தினமும் அதே அளவிற்கு பணத்தை தர்மம் செய்யும் படி கொடுத்து வைத்திருந்தார். ஆனால் அன்றைய தினம் தர்மம் பெற யாரும் வரவில்லை. அவர் குதிரையிலிருந்து அன்றைய தினம் கீழே விழ இருந்தார் என்ற தகவல் எனக்கு வந்தது. எனவே, அவர் இதன் காரணமாக உடனடியாக அந்த பணத்தை தர்மம் செய்ய கூறுவார் என நினைத்திருந்தேன். அதன்படியே அவர் உங்களை என்னை சந்திக்க கூறியுள்ளார். இதுவே நடந்தது" என்று கூறினார்.

### பயத்தில் உயிரை விட்ட காவலாளி

இமாதுத்தீன் ஸங்கி அனைவரும் கட்டுக்கோப்பாக நடக்க வேண்டும் என்று நினைப்பவர்.

தப்பிழைப்பவர்கள் அவரைக் கண்டு நடுங்கி வந்தனர். அந்த நடுக்கத்திலேயே தன் உயிரை இழந்தவர்களும் உண்டு.

ஒருமுறை இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் கோட்டையை சுற்றி பவனி வந்து பாதுகாப்பு விஷயங்கள் குறித்து ஆய்வு செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு ஒரு பாதுகாவலாளி பாதுகாப்பை கோட்டை விட்டு தூங்கிக் கொண்டிருந்தார். ஸங்கி அதனை கவனித்து விட்டார். சில பாதுகாவலர்கள் தூங்கிக் கொண்டிருந்தவரை எழுப்பினர். தூக்கத்தில் இருந்து எழுந்த அவர் ஸங்கியை கண்டவுடன் வெலவெலத்து விட்டார். அப்படியே அந்த இடத்திலேயே மயங்கி விழுந்து விட்டார். மற்ற பாதுகாவலர்கள் அவரை தூக்கி எழுப்பி நிறுத்த முயன்றனர். ஆனால் அவர் எழுந்திருக்கவில்லை. அவர் இறந்துவிட்டது பின்னர் தான் தெரிந்தது.

### நம்பிக்கைக்கு பாத்திரமானவர்

இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் உறுதியானவர்கள். அவர் ஒருபோதும் யாரையும் ஏமாற்றியதில்லை நம்பிக்கை துரோகம் செய்ததில்லை. இதன் காரணமாக அவருடைய நண்பர்கள் அவர் மீது மிகுந்த அக்கறைக் கொண்டிருந்தனர். அவருடைய பாதுகாப்பின் மீது மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர். அவருடைய பாதுகாப்பிற்காக நிறைய செலவு செய்தனர். காரணம் ஸங்கியின் பாதுகாப்பில் தான் அவர்களுடைய பாதுகாப்பு இருந்தது என்ற காரணத்தினால்.

அவருடைய ஆட்சியின் கீழ் யாரும் தான் தனித்து விடப்பட்டதாக நினைக்கவில்லை. இதற்கு காரணம் ஒருவர் போர் வீரர் என்றால் அந்தப் போர் வீரர் உடன் கலந்து ஸங்கி அவர்களை கண்ணியப்படுத்துவார். அவர்களுடன் சேர்ந்து அவர்களை வழிநடத்துவார். அதுவே திவான் என்றால் அந்த திவான்களுடன் கலந்து அவர்களை தன்னுடன் வைத்துக் கொள்வார். இதுவே அறிவுசார் மக்களின் அவை என்றால் ஸங்கி அவர்களில் ஒருவராக மாறிவிடுவார். அவர்களுக்கு பலவிதமான நன்கொடைகளை வழங்குவார். தனக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு அவர் அதிகமான ஊதியத்தை வழங்கி வந்ததால் அவர்கள் யாருடைய தேவையுமற்றவர்களாக இருந்தனர். அவர்கள் பலவிதமான நற்காரியங்களை செய்து வந்தனர்.

### இமாதுத்துன் அதாபேக் அவர்களின் மரணத்தை தொடர்ந்து நடந்த சம்பவங்கள்

இமாதுத்தீன் அதாபேக் அவர்களின் மரணத்திற்கு பிறகு அவருடைய மகன் ஸைஃபுத்தீன் காஸி அவர்களை அழைத்துக் கொண்டு தன் தோழர்களுடன் செல்ஜூக் சுல்தான் மசூத் அவர்களின் மகன் ஆல்ப் அர்சலான் (முஹம்மது பின் தாவூத் சஃரி) என்பவர் மொசூலை நோக்கி படையெடுத்தார். முதலில் மொசூலின் ஆட்சியாளர் அலி கோஜாக் என்பவர் சரணடையவில்லை. பின்னர் ஒரு கட்டத்தில் அவர்களுக்குள் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி அவர் மொசூலை ஸைஃபுத்தீன் காசி அவர்களுக்கு விட்டுக் கொடுத்தார். ஸைஃபுத்தீன் காசி அதன் ஆட்சியாளர் ஆனார்.

இதன் பின்னர் ஸைஃபுத் தவ்லா என்ற துணை ஆளுனரும் ஸலாஹூத்தீன் முஹம்மது இப்னு அய்யூப் அல் யக்பஸானி என்வரும் இமாதுத்துன் அதாபேக் அவர்களின் மற்றொரு மகன் நூருத்தீன் முஹம்மது அவர்களை அலெப்போவிற்கு அழைத்து சென்றனர். அங்கே அவருக்கான இராணுவத்தை உருவாக்க ஆரம்பித்தனர். அந்த நகரத்தை சீர்செய்யும் பணியிலும் ஈடுபட ஆரம்பித்தனர். இதன் காரணமாக நூருத்தீன் கொஞ்சம் கொஞ்சமாக பலம் பெற்று அந்த பகுதியை தன் கட்டுக்குள் கொண்டு வந்தார். அங்கு நடந்து வந்த பல்வேறு பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

### மலைச்சிங்கம் அசதுத்தீன் ஷேர்கு

அசதுத்தீன் ஷேர்கு என்பவர் அர்மேனியாவை சேர்ந்தவர். இவர் குர்திஷ் இனத்தை சேர்ந்த இராணுவ தளபதி. ஜெருசலத்தை வென்ற ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் மாமா. அவருடைய இராணுவமும் அவருடைய இராஜதந்திரமும் தான் எகிப்தில் அய்யூபி வம்சம் ஆட்சிக்கு வர முக்கிய காரணம். இவர்தான் முதன் முதலில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வர தகுதியானவர் என கணித்தவர். அதனை

செயல்படுத்தியவர். இவருடைய பெயருக்கு மலை சிங்கம் என்று அர்த்தம் இன்னொரு அர்த்தம் நம்பிக்கை சிங்கம் என்பது. இவருடைய தந்தையின் பெயர் ஷாதிப்னு மர்வான்.

**நூருத்தீன் அவர்களின் வளர்ச்சி**

ஒரு நாள் அசதியில் அசதுதீன் ஷேர்கு அவர்கள் நூருத்தீன் ஸங்கி அவர்களின் முகாமை நோக்கி விரைந்து வந்தார்கள். அவர் " வைசிராய் ஜமாலுதீன் என்பவர் மொசூலின் இராணுவத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார். உன்னுடைய சகோதரனுக்கு ஆதரவாக அவர் செயல்படுகிறார். உன் சகோதரனை மொசூலின் ஆட்சியாளராகவும் மாற்றிவிட்டார். கிட்டத்தட்ட எல்லா வீரர்களும் அவர்களுடன் இணைந்து விட்டனர்.

நீ அலெப்போவிற்கு செல். அதனை உன் தலைநகரமாக மாற்றிக்கொள். லெவான்தின் வீரர்களை உன்னோடு இணைத்துக்கொள். நீ ஒரு நாள் இந்த ஒட்டுமொத்த இரஜ்ஜியத்தையும் ஆளுவாய் என நான் உறுதியாக நம்புகிறேன். யார் லெவான்தை வெற்றி கொள்ள விரும்புகிறார்களோ அவர்கள் முதலில் அலெப்போவைத் தான் கைப்பற்ற வேண்டும். யார் அலெப்போவை வெற்றி கொள்கிறார்களோ அவர்கள் ஒட்டு மொத்த கிழக்கையும் கைப்பற்றுவார்கள்" என அறிவுரை கூறினார்.

பின்னர் அவர் லெவான்தின் மக்களுக்கும் இராணுவ வீரர்களுக்கும் தன் வருகை குறித்து தகவல் தெரிவிக்கும்படி தன் படையினருக்கு உத்தரவிட்டார். அதன்படியே அவர்களும் ஒட்டுமொத்தமாக ஓரிடத்தில் கூடினர். அதன் பின்னர் அவர்கள் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு நம்பிக்கையானவர்களாக மாறினார்கள்.

அதன் பின்னர் அந்த படையுடன் நூருத்தீன் ஸங்கி அலெப்போவிற்கு சென்று அதனை வெற்றி கொண்டார். அலெப்போவின் கோட்டையை அடைந்தவுடன் அசதுதீன் அவர்கள் அந்த கோட்டையின் ஆட்சியாளரை அழைத்து பேசினார். கோட்டை எளிதாக நூருத்தீன் ஸங்கி அவர்களின் வசம் வந்தது. இதற்கு மிக முக்கிய காரணம் அசதுதீன் ஷேர்கு அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்கள் இதற்காக அசதுதீனை மிகவும் பாராட்டினார். அசதுதீனும் இதற்காக பெருத்த மகிழ்ச்சியடைந்தார்.

**சகோதர சண்டை**

நூருத்தீன் ஸங்கி அவர்களின் சகோதரர் சைஃபுத்தீன் அவர்கள் தன்னுடைய இராஜ்ஜியத்தின் பிரச்னைகளை ஒருவழியாக தீர்த்துகொண்டு லெவான்தில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்வதற்காக லெவான்திற்கு திரும்பினார்.

தன்னுடைய சகோதரனுடன் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் அவருடன் என்னென்ன நிபந்தனைகள் பேசப்பட வேண்டும், என்னென்ன நிபந்தனைகளுடன் ஆட்சி செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதை பேச இருந்தார்.

ஆனாலும் அவருக்கு நூருத்தீனிடம் பேச பயம். இதன் காரணமாக பேச்சுவார்த்தை தாமதப்பட்டுக் கொண்டிருந்தது. நூருத்தீன் அவர்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற அவர் எதை வேண்டுமானாலும் விட்டுக்கொடுக்க தயாராக இருந்தார்.

இராணுவத்தை தவிர்த்து விட்டு தனியாக சந்திக்க இருவரும் சம்மதித்தனர். ஆனால் ஒவ்வொருவரும் 500 குதிரைப்படை வீரர்களுடன் வருவது என முடிவு செய்யப் பட்டது.

சந்திப்பு நிகழ்வதாக தீர்மானிக்கப்பட்ட தினத்தன்று நூருத்தீன் ஐநூறு குதிரை வீரர்களுடன் தன் முகாமை விட்டு புறப்பட்டார். ஆனால் ஸைஃபுத்தீன் வெறும் ஐந்து குதிரை வீரர்களுடன் சென்றார். அவருக்கு நூருத்தீனிடம் பகைமை ஏதும் இல்லை. மேலும் அவர் நூருத்தீனைப்பற்றி நன்கு அறிந்தவர். இதன் காரணமாகவே அவர் எந்த பாதுகாப்புமின்றி ஸைஃபுத்தீன் நூருத்தீனிடம் சென்றார்.

நூருத்தீன் தன் சகோதரரை கண்டவுடன் தன் குதிரையை விட்டு கீழே இறங்கினார். அவர் உள்ளம் தடுமாறியது. கண்கள் கலங்கின. பாசத்தால் கட்டுண்டவராக தன் சகோரனை நோக்கி சென்று பொத்தென்று கீழே விழுந்து தன் சகோதரனின் கால்களைக் கட்டிக் கொண்டார் நூருத்தீன். பின்னர் தன் சகோதரனை இறுக்க அணைத்து முத்தமிட்டார். தன் குதிரை வீரர்களையும் பின்வாங்கும்படி கட்டளையிட்டார்.

பின்னர் இருவரும் அழுது கொண்டே தங்கள்பழையை நினைவுகளை நினைவு கூற ஆரம்பித்து விட்டனர்.

இப்போது ஸைஃபுத்தீன் அழுதுக்கொண்டே தன் சகோதரனைப் பார்த்து, "நீ ஏன் என்னிடம் வரவில்லை.? நான் உன்னை கொலை செய்து விடுவேன் என்று நீ பயந்தாயா? அல்லாஹ்வின் மீது சத்தியமாக எனக்கு அப்படிப்பட்ட சிந்தனை துளிக்கூட கிடையாது. சொத்துக்களில் என்ன இருக்கிறது? நான் அப்படி நேர்மையற்றவனாக என்னுடைய சகோதரனிடம், என் உயிரினும் மேலானவனிடம் நடந்து கொண்டால் பின் யாருடன் தான் நான் கூடி வாழ்வது? யாரிடம் நான் உதவி என்று போய் நிற்பது?" என்று மென்மையாகக் கேட்டார்.

இந்த உரையாடல் அவர்களுக்குள் உருவாகி இருந்த இருக்கத்தை உடைத்தது. இப்போது நூருத்தீன் தன் சகோரனுக்காக எதையும் செய்ய தயாராகி விட்டர். இதன் பின்னர் நூருத்தீன் மிகவும் பாதுகாப்பாக உணர்ந்தார்.

அவர் அலெப்போவிற்கு திரும்பி அவருடைய இராணுவத்தை அழைத்து கொண்டு வந்தார். ஆனால் இந்த முறை தன் சகோரனுடன் சண்டை போட அல்ல. அவருக்கு பாதுகாப்பளிக்க.

ஆனால் ஸைஃபுத்தீன் அதனை மறுத்து விட்டார்.

"நீ இங்கிருக்க தேவையில்லை. அதற்காக நான் உன்னை வரவழைக்கவில்லை. என்னுடைய நோக்கமெல்லாம் நானும் நீயும் ஒற்றுமையுடன் இருக்கிறோம் என்பதை முஸ்லிம்களின் எதிரிகளாகிய ஃபிரான்க் மன்னர்களுக்கு உணர்த்தத்தான். நாம் இருவரும் ஒற்றுமையாக உள்ளதன் காரணமாக அவர்களுக்கு நம்மை தாக்கும் தைரியம் வராது" என்று கூறி அனுப்பி விட்டார்.

**எடெஸ்ஸாவை கைப்பற்ற ஜோஸ்லின் திட்டம்**

இமாதுத்தீன் அவர்கள் இறந்து விட்ட செய்தியை கேள்விப்பட்ட ஜோஸ்லினுக்கு மெல்ல தைரியம் துளிர் விட்டது. இதனை ஒரு தகுந்த வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள அந்த மன்னன் திட்டமிட்டான்.

அவன் எடெஸ்ஸாவில் வாழ்ந்து வந்த மக்களில் சிலரை குறிப்பாக அர்மேனியர்களை எடெஸ்ஸாவிற்கு தன் உளவாளிகளாக அனுப்பி வைத்தான். ஒரு குறிப்பிட்ட நாளில் எடெஸ்ஸாவை அவர்களின் உதவியோடு தாக்கினான்.

ஆனால் கோட்டைக்குள் இருந்த முஸ்லிம்கள் ஏற்கனவே இமாதுத்தீன் அவர்களால் வார்த்தெடுக்கப்பட்டவர்கள். அதனால் அவர்கள் எடெஸ்ஸாவை விட்டுக்கொடுப்பதாக இல்லை. அவர்கள் எடெஸ்ஸாவிற்காக கடுமையாக போரிட்டனர். ஜோஸ்லினும் கடுமையாக தாக்கினான்.

**எடெஸ்ஸாவை பாதுகாக்க நூருத்தீனும் ஸைஃபுத்தீனும்**

இந்த செய்திகள் நூருத்தீன் ஸங்கிக்கு தெரிய வரவே அவர் உடனடியாக தன் படைகளுடன் எடெஸ்ஸாவை நோக்கி சென்றார். நூருத்தீன் அவர்கள் தன் படைகளுடன் வரும் செய்தி தெரிய வர இப்போது ஜோஸ்லின் அங்கிருந்து தப்பி ஓட்டம் பிடித்தான். நூருத்தீன் ஸங்கி அவர்கள் எடெஸ்ஸா கோட்டையை வெற்றி கொண்டார். போரில் ஜோஸ்லினுக்கு உடந்தையாக எடெஸ்ஸாவில் இருந்த நபர்களை கைது செய்தார்.

இதேப்போல் மொசூலில் இருந்த ஸைஃபுத்தீன் அவர்களும் எடெஸ்ஸா முற்றுகைப்பற்றி கேள்விப்பட்டு தன் படைகளுடன் மொசூலில் இருந்து எடெஸ்ஸா நோக்கி படையெடுத்தார்.

அவர் எடெஸ்ஸாவை அடைவதற்குள்ளாக நூருத்தீன் ஸங்கி எடெஸ்ஸாவை வெற்றி கொண்டு விட்டிருந்தார். இது அவருக்கு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அவருடைய வேலையை அவருடைய சகோதரர் எளிதாக்கிவிட்டிருந்தார். இதன் காரணமாக மகிழ்ச்சியுடன் எடெஸ்ஸாவை தன் சகோதரன் நூருத்தீனுக்கு ஸைஃபுத்தீன் விட்டு கொடுத்தார். பாரம்பரியம் மிக்க எடெஸ்ஸா நூருத்தீன் வசம் வந்தது.

இந்த சமயத்தில் தான் சுமார் பத்து இலட்சம் ஃபிரான்குகளின் படைகள் டமாஸ்கஸை கைப்பற்ற திட்டம் தீட்டின. ஃபிரான்குகள் இதில் வெற்றி பெற்றார்களா?

**-இறைவன் நாடினால் அடுத்த இதழில்**



# ரமலான் மரபு நடை

# மதநல்லிணக்கத்தின் நாயகர்கள்

இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் செயற்குழுவின் போது 18.05.2019 அன்று வரலாற்று ஆய்வாளர், யாதும் கோம்பை அன்வர் அவர்கள் 21.05.2019 அன்று நடக்கும் இந்த அரிய நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைத்தார். ரமழான் மரபு நடை நிகழ்ச்சியில் சகோதர சமூகத்தைச் சார்ந்த பலர் கலந்து கொள்ள இருந்தது நம்மை வெகுவாகக் கவர்ந்தது.

வாலாஜா பெரிய மஸ்ஜித் என்றும் ஆற்காட்டு மஸ்ஜித் என்றும் அறியப்படும் இந்த மஸ்ஜித்-இல் நோன்பு கஞ்சியை காலா, காலமாக பொறுப்பேற்று அதனை பரிமாறி மகிழ்வது “சூஃபி காதிம்” என்ற சிந்தி சமூகத்தைச் சார்ந்தவர்களின் அறக்கட்டளை என்ற செய்தியும் நம்மை ஆச்சயர்த்தில் ஆழ்த்திடவே, நிகழ்ச்சிக்கு சென்று கலந்து கொண்டோம்.

நோன்பு திறக்கும் மகிழ்வை அறக்கட்டளையின் விருந்தோம்பலில் கழித்தோம். அல்ஹம்துலில்லாஹ்!

நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த கோம்பை அன்வர் அவர்கள் சாதித்துக் கொண்டே இருக்கின்றார்.

“யாதும்” என்ற குறும்பட ஆவணம் அவரை உலக அளவில் உயர்த்திற்று. பல விருதுகளைப் பெற்றுத் தந்தது.

அதற்குப் பிறகு அவரை யாதும் அன்வன் என்றே அழக்கின்றார்கள். அவர் ஆய்வுகள் சிறக்க அல்லாஹ் அருள் புரிவானாக!

கட்டுரையை வைகறை வெளிச்சத்தில் இடம் பெற அனுமதி வழங்கிய மின்னம்பலம் இணைய இதழுக்கும் அதனை வாங்கித் தந்த அன்வர் அவர்களுக்கும் நன்றி!

மே மாதம் ஐந்து மணிக்கு ரமலான் மரபு நடை என்று கேட்டதுமே உச்சந்தலையில் இருந்து வியர்வைத் துளி மூக்கு வழியாக தரையைத் தொட்டுவிட்டது. கடும் கோடை. அனல் காற்று. நகரம் நரகமாகக் காட்சியளிக்கிறது. இதில் மரபு நடையா என்று கொஞ்சம் பின்னோக்கி கால்கள் நகர்ந்தாலும், இந்த வெயிலில் சொட்டு நீர் கூட தொண்டைக்குழிக்குள் இறங்காமல் நோன்பு வைக்கும் இஸ்லாமிய அன்பர்கள் பற்றி இன்னும் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாமே என்ற ஆர்வத்தில் கிளம்பியாகிவிட்டது.

வழக்கத்தை விட சற்றே முன்பு கிளம்பிவிட்டதால், 4.30 மணிக்கெல்லாம் வாலாஜா பெரிய மசூதியின் முன் ஆஜர். திருவல்லிக்கேணியின் அடையாலங்களில் ஒன்று பார்த்தசாரதி கோயில் என்றால், இன்னொன்று இந்த பிரம்மாண்ட மசூதி. மசூதியின் பழைய பிரிட்டிஷ் கால புகைப்படங்களைப் பார்த்த காரணத்தால், அதன் நுழைவாயிலில் உள்ள கூம்புகளை ஆர்வத்துடன் படம் எடுத்துக் கொண்டிருந்தேன். மசூதியின்

நுழைவாயிலில் சமோசாவும் மெதுவடையும் சுடச்சுட தயாராகிக் கொண்டிருந்தது. முக்காடிட்ட இரு இஸ்லாமியப் பெண்கள் வடை தட்டியும், சுட்டும் கொண்டிருக்க, அதை வாங்கிக் கொண்டிருந்த வகிட்டில் குங்குமமும், முகம் எல்லாம் மஞ்சளும் ஜொலித்துக் கொண்டிருந்த பெண்கள் இருவர் முகத்திலும் அத்தனை பரவசம்.

படபடவென ஒரு நூறு புறாக்கள் சிறகுகளை அசைத்து விர்விர்ரெனப் பறக்க, வெயிலின் தாக்கத்தையும் தாண்டி நண்பர்கள் கூடத் தொடங்கினர். "இது என் மூன்றாவது ரமலான் மரபு நடை", என்று சொல்லி தன் உரையைத் தொடங்கினார் வரலாற்று ஆய்வாளரும், இயக்குநரும், இந்த நடையை வழிநடத்துபவருமான திரு. கோம்பை அன்வர். தமிழகத்தில் இஸ்லாம் குறித்த அவரது முன்னுரை தெளிவாகவே இருந்தது. சென்னையில் பல்வேறு வகையினரான இஸ்லாமியர் இருக்கிறார்கள். பெரும்பாலும் இஸ்லாமியர் என்றால் அரபு மொழியோ, உருதுவோ பேசுபவர்கள் என்றே பொதுவாக நம்பப்படுகிறது. ஆனால், பெரும்பான்மை இஸ்லாமியர் இங்கு தமிழ் பேசுபவர்கள். "நான் தமிழ் பேசும் இஸ்லாமியன், அதில் பெருமை கொள்ளும் இஸ்லாமியனும் கூட", என்று புன்னகைக்கிறார் அன்வர்.

"தமிழ், உருது, தெலுங்கு மொழி பேசும் இஸ்லாமியர், மலையாளம் பேசும் மாப்பிளா முஸ்லிம்கள், பெங்காலி மொழி பேசும் இஸ்லாமியர் என்று சென்னையில் உள்ள இஸ்லாமியர் பல மொழிகளைப் பேசுபவர்கள். இவர்கள் தவிர குஜராத்தி போரா முஸ்லிம்களும் உண்டு. அச்சமூகப் பெண்கள் அணியும் வண்ணமயமான "ரிடா" என்ற மேலாடையை நாம் அனைவருமே பார்த்திருப்போம். இஸ்லாம் இந்தியாவில் முதன்முதலில் காலடி பதித்தது அதன் தென் கோடியில் உள்ள தமிழகத்தில் தான். கடல் வழி வாணிபம் வழியாகவே இங்கு நுழைந்தது இஸ்லாம். சங்க கால இலக்கியங்களில் பயன்படுத்தப் பட்டுள்ள "யவனர்" என்ற சொல் கிரேக்கர் மற்றும் உரோமானியரை மட்டுமல்ல, பெரும்பாலும் மேற்கு ஆசியாவைச் சார்ந்தவர்களையேச் சுட்டும். மேற்கு ஆசியாவிலிருந்து இந்தியா வழியாக சீனா வரை கப்பல்களைச் செலுத்தி வாணிபம் செய்து வந்தவர்கள் இந்த அரேபியர். "ஸ்பைஸ் ரூட்" என்று சொல்லப்படும் இந்தக் கடல்வழிப் பாதையின் மூலமாக இஸ்லாம் அரேபிய தீபகற்பத்தில் பரவிக் கொண்டிருந்த காலத்திலேயே இங்கு வந்தது. பத்தாம் நூற்றாண்டில் இன்றைய தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்ட பண்டைய தமிழகத்தை



"மாபார்" என்றே அழைத்தனர் மேற்காசிய அரேபியர்."

"பழவேற்காட்டில் இருந்து கோழிக்கோடு வரை உள்ள இந்த மாபார் பகுதி மேற்காசியாவில் இருந்து சீனா செல்பவர்களுக்கு ஒரு "டிரான்சிட் பாய்ன்ட்" போல இருந்திருக்கிறது. தமிழ்ச் சமூகமும் பெரும்பாலும் சங்ககாலம் முதல் கடல் சார்ந்த சமூகமாக, கலம் செலுத்தும் வணிகக் கூட்டமாகத்தான் இருந்திருக்கிறது. இன்று நாம் வேளாண் சமூகம் என்று நம்மை நாமே சொல்லிக் கொள்கிறோம், ஆனால் சங்க இலக்கியங்கள் தலைவியரைப் பிரிந்து கடல் வழி செல்லும் தலைவனைப் பற்றியும், பிரிவு பற்றியும் பாடல்களை அடுக்கிச் செல்கிறது. இஸ்லாம் 7ஆம் நூற்றாண்டிலேயே பண்டையத் தமிழகத்துக்குள் நுழைந்துவிடுகிறது. அரபு தீபகற்பத்தில் பரவிக்கொண்டிருந்த காலத்திலேயே இங்கேயும் வேர்விட்டு பரவத் தொடங்கியது இஸ்லாம். தங்கம் கொணர்ந்து, கருப்புத் தங்கமான மிளகை இங்கிருந்து கொண்டு சென்றனர் கடலோடிகள்."

"யவனர் தந்த வினைமாண் நன்கலம்,

பொன்னொடு வந்து, கறியொடு பெயரும்

வளங்கெழு முசிறி ஆர்ப்பு"- என்று யவனர் களைக் குறித்துச் சொல்கிறது அகநானூறு! பூம்புகார் நகரம், கொடுங்கல்லூர் (முசிறி) என்று கலங்கள் நிறைந்த ஊர்கள் பற்றி நாம் படிக்கிறோம்.


"சிலப்பதிகாரம் தொடங்குவதே கடல் காதையில் தான்! அத்துணை முக்கியத்துவம் நாம் கடலுக்குத் தந்திருக்கிறோம். முக்கியத்

தலைநகரங்கள் அனைத்தும் கடற்கரை நகரங்களாக இருந்திருக்கின்றன. ஆக, பெரும்பாலும் கடல் சார்ந்த சமூகம் தான் நாம். செல்வம் கொணர்ந்ததால், இந்த யவனர்களான இஸ்லாமியருக்கு சமூகத்தில் தனி இடம் இருந்தது. தங்குமிடம் முதல் வணங்கும் மசூதிகள் வரை அனைத்தும் அவர்களுக்கு இங்கு எளிதாகக் கிடைத்தது. இஸ்லாமியர் இன்று சந்திக்கும் மிகப்பெரிய சவால்- ஸ்டீரியோடைப்பிங் என்ற பொதுமைப்படுத்தல். மசூதி என்றாலே குவி மாடங்கள், மினரெட்டுகள் என்ற பொது எண்ணம் உண்டு. ஆனால், உண்மை அதுவல்ல", என்று சொல்லி நிறுத்துகிறார் அன்வர்.

"இந்த மசூதியைப் பாருங்கள், குவிமாடம் (டோம்) இருக்கிறதா? இல்லை அல்லவா?", என்று கேட்கிறார் அன்வர். பழவேற்காடு முதல் தமிழகத்தின் தென் கோடி வரை நாம் பார்க்கும் ஆயிரக்கணக்கான மசூதிகளில் பலவற்றில் குவிமாடங்களோ, மினாராக்களோ இல்லை. தென்னிந்தியக் கோயில்களைப் போல பள்ளிவாசல்களுக்கு ஆகம விதிகள் கிடையாது. ஆகவே இஸ்லாம் பரவிய இடத்தில் எல்லாம்- சீனாவாகட்டும், அல்லது ஆப்பிரிக்காவாகட்டும் அந்தந்தப் பகுதியின் கட்டுமானப் பாணியில் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. தமிழகத்தில் திராவிடக் கட்டிடக் கலைப் பாணியில் தான் பள்ளிவாசல்கள் ஆயிரம் ஆண்டுகளாகக் கட்டப்பட்டுள்ளன", என்கிறார் அன்வர்.

கடலோடிகளான மரைக்காயர்கள், குதிரை வணிகம் செய்துவந்த ராவுத்தர்கள் (ராஹுத் என்ற சொல்லுக்கு குதிரை என்று பொருள்) மற்றும் மதச் சடங்குகளைச் செய்துவந்த லெப்பைகள் (லெவை என்ற ஹீப்ரு மொழி சொல்) என்று மூன்று பிரிவினராக இங்கு வசித்து வந்தனர் தமிழ் முஸ்லிம்கள். உருது பேசும் இஸ்லாமியர் மாலிக் காஃபூர் காலத்தில் தான் முதன்முதலாக இங்கு வந்தனர். 17ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷார் அன்றைய சென்னையில் கடை விரித்தபோது, விஜயநகர மன்னரது ஆளுகைக்குட்பட்ட பூந்தமல்லியின் ஆளுனராக இருந்தவர் ஒரு இஸ்லாமியர்!

13ஆம் நூற்றாண்டில் "அஞ்சுவண்ணம்" என்ற இஸ்லாமிய வணிகக் குழு மயிலாப்பூரில் இருந்ததற்கான தரவுகள் உள்ளன. அதே நூற்றாண்டில் மார்க்கோ போலோ தூய தோமாவின் கல்லறையைத் தேடி மயிலை வரும்போது, இஸ்லாமியரும் தோமாவின் கல்லறைக்கு வருவதாகக் குறிப்பிடுகிறார். அதே தோமாவைத் தேடித்தான் போர்த்துகீசியரும் சென்னை வருகிறார்கள். துவர்தே பார்போஸா என்ற போர்த்துகீசியப் பயணி தன் டைரிக் குறிப்பில் தோமாவின் கல்லறை அடங்கிய கோயிலை இஸ்லாமிய ஃபக்கீர் ஒருவர் விளக்கேற்றி, அந்த இடத்தைப் பாதுகாத்து வருவதாக எழுதியிருக்கிறார். கோல்கொண்டா சுல்தான் அரசில் நிறைய இந்துத் தளபதிகளும், ஆளுனர்களும் இருந்திருக்கிறார்கள். எல்லா மதத்தவரும் சுமுகமாகவே தமிழ்ச் சமூகத்தில் வாழ்ந்திருக்கிறார்கள்.



தெக்காணம் மற்றும் அதை ஒட்டிய கோல்கொண்டா சுல்தான்கள், அவர்களுக்குப் பின் வந்த ஆற்காடு நவாபுகள் என்று இஸ்லாமியர்கள் தொடர்ந்து இந்தப் பகுதியில் ஆட்சி செலுத்தியிருக்கிறார்கள்; வசித்திருக்கிறார்கள். ஆற்காட்டின் வாலாஜா நவாப் சென்னையைத் தன் தலைமையிடமாக 1766ஆம் ஆண்டு அறிவித்தார். தலைமையிடம் என்பதால் அவர் வசிக்கும் அரண்மனையை சேப்பாக்கத்திலும், அவருடைய அவையில் இருந்த முக்கியஸ்தர்கள் திருவல்லிக்கேணியில் "மேன்ஷன்களும்" கட்டினர். இந்தப் பகுதி இஸ்லாமியர் வாழ்ந்த பகுதியாக அந்தக்காலம் தொட்டு இருந்திருக்கிறது. பெரும்பாலும் இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் என்று முக்கியப் பிரதிநிதிகளே இந்தத் தெருக்களில் வசித்தார்கள்.

நவாப் இங்கே வந்தபிறகு, தொழுகை நடத்தவும், தன் ஆட்சியைப் பிரதிபலிக்கும் வகையிலும் இந்த மசூதியைக் கட்டினார். இந்த மசூதி கட்டப்பட்ட ஆண்டு எப்படி கல்லில் வடிக்கப்பட்டது என்பது வெகு சுவாரசியமானது! குரோனோகிராம் மூலம் பள்ளிவாசல் கட்டப்பட்ட ஆண்டு நமக்கு காணக் கிடைக்கிறது. மசூதிகள் கட்டப்படும் ஆண்டு, இறந்தோர் நினைவில் எழுதப்படும் இரங்கற்பா போன்றவற்றில் ஆண்டு சொற்களினூடே எழுத்துகளாக புதிர் போல கட்டமைக்கப்படுகிறது! பெரிய மசூதியில் தற்போது பொறிக்கப்பட்டுள்ள குரோனோகிராமைத் தேர்ந்தெடுக்க போட்டி ஒன்று நடத்தப்பட்டது. போட்டியில் வென்று

பெரிய மசூதியின் கிரோனோகிராமை வடிவமைத்தவர், வாலாஜா நவாப்பின் இரண்டாவது மகனான நவாப் ஆமிர் அல் உம்ராவின் முன்சி (மொழிபெயர்ப்பாளர்) ராஜா மக்கன்லால் பகதூர் கிரத். இவர் ஒரு இந்து!

இஸ்லாமியர் மெக்காவில் காபா இருக்கும் திசை நோக்கியே தொழுகிறார்கள். அந்தத் திசையை சுட்டிக்காட்ட பள்ளிவாசலின் முகப்பு அறைச் சுவற்றில் அரைவட்டமான மிக்ரப் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த மிக்ரபின் மேல் "திக்ருல்லாஹி அக்பர்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன் பொருள் "இறைவன் பெரியவன் என்ற நினைவூட்டல்". இந்த வாசகத்தின் எண்களைக் கூட்டினால் வரும் கூட்டுத் தொகை *1209* ஹிஜ்ரி, பொ.யு. *1794*ஆம் ஆண்டு! ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு எண்ணை வரித்துக் கொண்டு இப்படி எழுதுவதை அரபு மொழியில் "அப்ஜத்" என்று அழைக்கிறார்கள்.

பெரிய மசூதியின் ஒரு புறம் நெடிய சன்னல்கள் நிறைந்த அழகிய பழம் கட்டிடம் ஒன்று உள்ளது. ஒட்டோமான்- துருக்கி நாட்டின் வெளியுறவுத்துறை அலுவலகமாக ஒரு காலத்தில் பரபரப்பாக இயங்கிய கட்டிடம் அது! இன்று அதன் பெயர் 'ப்ராட்லேண்ட்ஸ் லாட்ஜ்'. அதன் உயரமான உத்தரத்தில் 'பங்கா' விசிறிகளை இயக்கப் பயன்படுத்தப்பட்ட கப்பிகளை இப்போதும் நாம் காணலாம். 'அத்தர்' என்ற சென்ட்டை பெரும்பாலான இஸ்லாமியர் பயம்படுத்துகிறார்கள் என்பதை விளக்கி, வந்திருந்தவர்களுக்கு அத்தர் தைலம் சிறிது மணிக்கட்டுகளில் பூசினார்கள் நண்பர்கள் நுகர்ந்து பார்த்தால் அட அட! என்ன ஒரு மணம்!

ரமலான் நோன்பு காலத்தில் முக்கிய பஜாரை வலம் வரும் அனுபவம் அலாதியானது என்று அன்வர் சொல்ல, குழுவினர் அனைவரும் பஜாரைக் காணும் ஆவலுடன் கிளம்பினார்கள். மசூதியின் பிரதான வாயிலின் வலதுபுறமுள்ள கடையில் குழுவினர் சுவைக்க "பால்கோவா நான்" ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சற்றே மொத்தமாக சுடப்பட்ட நானுக்குள் பால்கோவாவை ஸ்டஃப்பிங் போல செய்து வைத்திருந்தார்கள். அலாதி சுவை அந்த நானுக்கு! சுடச்சுட பறந்து போனது! மசூதி வாயிலின் இடதுபுறம் உள்ள கடைகளில் வண்ணமயமான குல்லாக்கள் இருந்தன. சம்க்கி வைத்து தைத்தவை, பட்டுத் துணியில் நெய்தவை, முத்துகள் தொங்குபவை என்று அத்துணை அழகு ஒவ்வொன்றும்!

மீண்டும் அக்காக்கள் கடையில் மெதுவடையும், பருப்பு வடையும் குழுவினர் வாங்கி ருசிக்க, நாங்களோ அதை ஒட்டிய 'ஹலீம் எக்ஸ்பிரஸ்' கடைக்குள் நுழைந்து மட்டன் ஹலீம் ஆளுக்கு ஒன்று ஆர்டர் செய்துவிட்டு அங்கேயே சுவைக்கத் தொடங்கினோம். 'ஹரீசா' என்ற அரபு நாட்டு உணவு வகையின் இந்தியத் தழுவலே ஹலீம் என்று நம்பப்படுகிறது. *1930*களில் ஹைதராபாத் நிஜாமின் அரண்மனைக்குள் நுழைந்த ஹலீம், இன்று அந்த நகரத்தின் 'சிக்னேச்சர் டிஷ்'! பாரம்பரிய முறைப்படி ஹலீம் *12* மணிநேரம் விறகு அடுப்பில் மெல்லிய தீயில் சமைக்கப்படுகிறது. உடைத்த கோதுமை, பருப்பு, நெய், பால், இஞ்சி பூண்டு விழுது, மஞ்சள் பொடி, மிளகாய்ப்பொடி, ஆட்டுக்கறி, கரம் மசாலா, சீரகம், சோம்பு, பட்டை, கிராம்பு, ஏலக்காய், கபாப் சீனி, பிஸ்தா, குங்குமப்பூ, முந்திரி சேர்த்து தயாரிக்கப்படும் ஹலீம், வேகவைத்த முட்டை, வறுத்த வெங்காயம் சேர்த்து அலங்கரிக்கப்பட்டுப் பரிமாறப்படுகிறது! ஹலீமை உண்ட மயக்கத்தில் தளர்நடை நடந்து





மீண்டும் மசூதி மைதானத்தை அடைந்தோம்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரபுத் துறைத் தலைவராக இருக்கும் டாக்டர் ஜாகிர் ஹுசைன் அடுத்து நோன்பு குறித்த தகவல்களைப் பகிர்ந்துகொண்டார். திருக்குறளை அரபு மொழியில் மொழிபெயர்த்த பெருமை இவரைச் சாரும்! "நோன்பைக் குறிக்கும் 'ரோசா' என்ற சொல் பாரசீக மொழியில் இருந்து வந்தது. உணவு, தண்ணீர், கேளிக்கைகள் போன்றவற்றைத் தவிர்ப்பதே இந்த ரோசா என்ற நோன்பு. கதிரவன் உதிக்கும் நேரம் முதல் கதிரவன் மறையும் வரை இந்த 'தவிர்த்தல்' அமுலில் இருக்கும். இரண்டாவது ஹிஜ்ரா முதல் (இஸ்லாமிய ஆண்டு) இந்த நோன்பு வைக்கும் வழக்கம் இருக்கிறது."

"இஸ்லாமிய காலண்டர் இரண்டாம் கலிஃபா உமர் காலத்தில் வரையறுக்கப்பட்டது. இப்போது நடந்து கொண்டிருப்பது 1443ஆம் ஹிஜ்ரா ஆண்டு. மெக்கா நகரில் இருந்து மதினாவுக்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும் அவரது மக்களும் பயணித்ததையே முதல் ஆண்டாகக் கருதுகிறார்கள் இஸ்லாமியர். இந்த நோன்பு காலத்தில் திருக்குர்ஆனை அதிகம் ஓதுகிறார்கள். இந்த நோன்பு காலத்தில் செய்யும் ஒவ்வொரு நல்ல காரியமும் எழுபதாகப் பலன் தரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இறைவனிடம் முற்றிலும் சரணடையும் காலமும் இது தான். நோன்பு கால இஷா என்ற மாலைத் தொழுகைக்குப் பின்னர் இரவு செய்யப்படும் தராவீஹ் என்ற சிறப்பு தொழுகைக்குப் பெரும் பலன் உண்டு. நாளுக்கு ஐந்து முறை தொழுகை, சக்காத் என்ற ஈகைப் பொருள் வழங்குதல் என்று நோன்பு தொழுவதற்கும், ஈகைக்கும் உரிய காலமாக இருக்கிறது", என்று கூறினார்.

நோன்பு குறித்த சந்தேகங்களை வந்திருந்த நண்பர்கள் கேட்க, அவற்றைத் தெளிவுபடுத்தினர் ஜாகிரும், அன்வரும். அதற்குள் மாலை நோன்பு துறக்கும் அறிவிப்பு வர, அனைவரும் நோன்பு துறக்க விரைந்தனர். இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் என்று வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களும் ஆண்கள் தனியாக, பெண்கள் தனியாக உணவு உண்ண அமரவைக்கப்பட்டனர். வேன் ஒன்றிலிருந்து கிட்டத்தட்ட முப்பது-நாற்பது சிவப்பு பிளாஸ்டிக் வாளிகளில் உணவு வந்து இறங்குகிறது. தலையில் குல்லா வைத்த பெரியோர் முதல், டர்பன் கட்டிய இளைஞர்கள் வரை தன்னார்வலர்கள் குழு ஒன்று மடமடவென ஒன்று சேர்ந்து விருந்துக்கு தயாராகிறது. சூஃபிதார் டிரஸ்ட். கிட்டத்தட்ட 37 ஆண்டுகளாக ரமலான் மாதத்தின் ஒவ்வொரு மாலையும் எண்ணிலடங்கா மக்கள் உண்டு பசியாற உணவை இன்முகத்துடன் சமைத்துக் கொண்டு வந்து பரிமாறுகிறார்கள் இந்தக் குழுவினர்! ஆச்சரியம் என்னவென்றால், இவர்கள் பல்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்ட "சிந்திகள்"!

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தைச் சேர்ந்த இந்த மக்கள் பெரும்பாலும் "சூஃபி" மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள். இறைவன் ஒருவனே என்ற நம்பிக்கையைக் கைக்கொண்டிருப்பவர்கள். இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின் போது மும்பையை அடுத்த உல்லாஸ் நகரில் குடியமர்த்தப்பட்டார்கள் இந்த மக்கள். வணிகத்தில் பெரும் ஜாம்பவான்கள் என்று பெயரெடுத்த; பெரும் பணக்காரர்களாக பாகிஸ்தானில் வலம் வந்த சிந்திகள், அகதிகளாக மும்பையின் தெருக்களில் தொலைந்துவிட்ட வாழ்க்கையைத் தேடி மீட்டெடுத்தார்கள். ஐம்பது பைசா லாபம் கிடைத்தால் கூடப் பரவாயில்லை என்று பொருள்களை விற்றும், வாங்கியும் வாணிபம்

செய்தார்கள். சென்னையின் பெரு வியாபாரியான கே.செல்லாராம் ஒரு சிந்தி தான்! சிந்திகளில் பெரும்பாலானவர்கள் வணங்குவது ஷாஹென்ஷா பாபா நேப்ராஜ் சாகிப் என்ற சூஃபி ஞானியைத் தான். 1950களில் வால்டாக்ஸ் சாலையில், பாபா நேப்ராஜ் சாகிபுக்கு ஒரு சிறிய கோயிலைக் கட்டினார் தாதா ரத்தன் சந்த் சாகிப் என்ற சிந்தி வணிகர்.

சூஃபிதார் டிரஸ்ட்டின் தொடக்கம் அது தான். 30 முதல் 40 பேர் வந்து அமர்ந்து கூட்டங்கள் நடத்தியவர்கள், அங்கு அவர்களை நாடி வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்க, மைலாப்பூர் பகுதிக்கு மாறினர். 2013ஆம் ஆண்டு மரணிக்கும் வரை இந்த சிந்திகளை வழிநடத்தினார் ரத்தன் சந்த். அவருக்குப் பின் அவரது பணியைத் தொடர்கிறது சூஃபிதார் டிரஸ்ட். யாரிடமும் பொருளுதவி வேண்டும் என்று கேட்டுப் பெறுவதில்லை. எங்கெங்கிருந்தோ இவர்களது பணியைப் பற்றிக் கேள்விப்பட்டு தாமாக முன்வந்து அன்பர்கள் தருவதை வாங்கிக் கொள்கிறார்கள். இந்துக் கடவுள்களின் சிலைகள், ஏசு கிறிஸ்துவின் சிற்பம் என்று அனைத்து மத அடையாளங்களும் இருக்கும் இந்த டிரஸ்டின் கோயிலில், தினமும் மதியம் 1 மணிக்கு பாக்தாதின் சூஃபி குரு பாபா தஸ்தகிர் பாதுஷாவுக்கு சிறப்பு துஆ நடைபெறுகிறது.

நவராத்திரி, தீபாவளி, சிந்திப் புத்தாண்டு, விநாயக சதுர்த்தி, கிறிஸ்துமஸ், புத்தாண்டு என்று அனைத்து மத விழாக்களையும் மகிழ்வுடன் கொண்டாடுகிறார்கள் சூஃபிதார் மக்கள். ஒவ்வொரு ரமலான் நோன்பு தினமும், இவர்களது தன்னார்வலர்கள் தாங்களும் நோன்பு இருந்து, மாலை வாலாஜா மசூதியில் மக்களுக்கு விருந்து உபசரித்த பின்பு தான் தாங்கள் உண்ணுகிறார்கள். "இதை நாங்கள் செய்வது புண்ணியமாகக் கருதுகிறோம், உணவைப் பறிமாறி முடிக்கும் வரை நாங்கள் யாரிடமும் உரையாடுவது கிடையாது. உணவை எங்கள் கிச்சனில் தயாரித்துக் கொண்டு வந்து பரிமாறுகிறோம். நோன்பு துறப்பவர்களுக்கு உணவு வழங்குவது கடவுளுக்கே நாங்கள் செய்யும் சேவை போல", என்று சொல்கிறார் தன்னார்வலர்களில் ஒருவரான அர்ஜுன்.

முதல்முறை இந்த டிரஸ்ட் உணவு வழங்க வந்தபோது அதை நேரடியாக மேற்பார்வையிட்டவர் ஆற்காடு நவாப்! முழுக்க சைவ உணவை நோன்பு இருப்பவர்களுக்காகவே சிறப்பாகத் தயாரித்து டிரஸ்ட் வழங்குவதை உறுதி செய்த பின்பு தான் ஆண்டுதோறும் இதை அனுமதித்திருக்கிறார்கள். காலை 7.30 மணிக்கே சமையல் சூஃபிதார் கோயிலில் தொடங்கிவிடுகிறது. நோன்புக் கஞ்சி, பிசிபேளாபாத், வெஜிட்டபிள் பிரியாணி, அல்லது எதாவது ஒரு கிளறிய சோறு, ரோஸ்மில்க், ஸ்வீட் ஒன்று, வாழைப்பழம் என்று தினமும் 1000 பேர் இங்கு நோன்பு துறந்து பசியாறுகிறார்கள். "சூஃபிதார் காதிம்" என்ற பேட்ஜை நெஞ்சில் சுமந்து, தலையில் குல்லாவும், முகத்தில் புன்னகையும் சுமந்தபடி சுமார் 60-70 சிந்தி தன்னார்வலர்கள் உணவைப் பரிமாறினார்கள்.

அன்றைய ஸ்பெஷல்- கஞ்சி, வெஜிட்டபிள் புலவ், ஊருகாய், ரோஸ்மில்க், வாழைப்பழம் ஒன்று மற்றும் கடல்பாசி கொண்டு செய்யப்பட்ட "சைனா கிராஸ் புடிங்". கடல் பாசியை வேக வைத்து, அதனுடன் பால் சேர்த்து கொதித்ததும், கண்டென்ஸ்டு மில்க், சர்க்கரை, ஃபுட் கலர் சேர்த்துக் கிளறி, ஆறவைத்து கிண்ணங்களில் ஊற்றி 2-3 மணி நேரம் ஃப்ரிஜ்ஜில் வைத்து எடுத்தால் சுவையான இஃப்தார் புடிங் தயார்! பெரும்பாலும் குழந்தைகளே இந்த புடிங்குக்கு ரசிகர்கள்! நோன்பு துறக்கும் நேரம் நூற்றுக்கணக்கானவர்களுடன் அமைதியாக அமர்ந்து, சுவையான உணவை ருசித்து உண்டு முடித்தோம்.

எங்கிருந்தோ பறந்து வந்த புறாக்கள் சிந்தியிருந்த பருக்கைகளைப் பறந்து திரிந்து கொத்திக் கொண்டிருந்தன. மாலை மங்கிவிட்டது. மசூதி ஒளிவிளக்குகளுடன் பளபளத்தது. உணவுக்குப் பின் தொழுகைக்குச் சென்றுவிட்டார்கள் மக்கள். வெளியேற மனமின்றி அங்கேயே பேசிக்கொண்டு நின்றோம். புறாக்கள் கூடடைந்து விட்டன. நகரின் முதுபெரும் மசூதி காலத்தின் வடுக்களைத் தாங்கியபடி கம்பீரமாகவே சிரித்துக் கொண்டிருந்தது. ஆட்டோவில் ஏறியபின்னும் திரும்பிப் பார்க்கிறேன். கோஷா அணிந்த பெண்கள் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தார்கள். நெற்றி நிறைய விபூதி அணிந்த பெரியவர் ஒருவரும், குல்லா அணிந்த பெரியவர் ஒருவரும் மசூதி வாயிலில் வடையைப் பிய்த்துத் தின்றபடி, தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். எங்கோ பாகிஸ்தானிலிருந்து வந்த சிந்தி இன மக்களின் அன்பால் பசியாறுகிறது சென்னையின் பெரும் பள்ளி! நகரம் இன்னும் நரகம் ஆகவில்லை என்றே தோன்றிற்று. நானும் கூடடைய விரைகிறேன்,

**புகைப்படங்கள்: ஜோதி வேல் மற்றும் பிரசாத் பழனி.**

**நன்றி: மின்னம்பலம்.**

**நிகழ்ச்சி ஏற்பாடு: வரலாற்று வல்லுநர்; கோம்பை. அன்வர்.**

**வைகறை வெளிச்சம் இதழில் கட்டுரையை இடம் பெற அனுமதித்ததும் இவரே. நன்றிகள் பல!**

**நன்றி: நிவேதிதா லூயிஸ்(மின்னம்பலம்)**

# 11

# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?



# ஷிவானி (எ) கதீஜா

இஸ்லாமிய வரலாற்றில் சுமையா(ரழி) அவர்களின் வரலாறு தவிர்க்க முடியாத மிக முக்கியமான வரலாறு. ஆரம்பக் காலக்கட்டங்களில் பெருமானார்(ஸல்) அவர்கள் அரேபியாவின் மக்காவில் இஸ்லாத்தை எடுத்துரைத்த போது இஸ்லாத்தைத் தழுவியவர்.

இஸ்லாத்தை தன் வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டு அல்லாஹ் ஒருவனே என்று முழங்கியதால் சொல்லன்னா துயரங்களுக்கு ஆட்பட்டவர். "இந்த இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு விடு. உன்னை விட்டு விடுகின்றோம் என்று கொக்கரித்த மக்கத்து காஃபீர்களுக்கு எதிராக நிலைகுலையாமல் உறுதியாக நின்றார். இந்த சன்மார்க்கத்திற்காக முதன் முதலில் உயிர் தியாகம்(ஷஹீத்) செய்தவர் என்ற பெறுமையையும் பெற்றார்.

உண்மையை அறிந்து, உணர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பெண்கள் இந்த இஸ்லாமிய மார்க்கத்தில் எந்த சோதனைகள் வந்தாலும் அதை இன்முகத்தோடு எதிர்கொண்டு உறுதியாக நிற்கிறார்களே தவிர! பின் வாங்கியதாக வரலாறு இல்லை.

ஆட்சியாளர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக பேசப்படும், ஹழ்ரத் உமர்(ரழி) அவர்கள் ஆரம்ப காலங்களில் அவரது தங்கை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை அறிந்து கோபத்தோடு தாக்கிய போது தைரியத்துடன் இஸ்லாத்தை விட்டுக் கொடுக்காமல் நின்ற ஃபாத்திமா பின் கத்தாப்(ரழி) அவர்களின் செயல் தான் வாளோடு வந்த உமர்(ரழி) அவர்களின் உள்ளத்தை புரட்டிப் போட்டது.

பெரும், பெரும் செல்வங்களையெல்லாம் முன் வைத்து தன்னை திருமணம் செய்துக் கொள்ள கேட்ட தல்ஹா(ரழி) அவர்களிடம் உத்தமப் பெண்மணி உம்மு சுலைம்(ரழி) அவர்கள், "அற்பமான உன்னுடைய செல்வங்களை விட எனக்கு என்னுடைய இறைவனையும், அவனது தூதரையும் ஏற்றுக் கொள்வது போதுமானது" என்று உறுதியோடு உரையாடியதால் தான், தல்ஹா(ரழி) அவர்களுக்கு இந்த இஸ்லாமிய மார்க்கம் கிடைத்தது.(அல்ஹம்துலில்லாஹ்)

இப்படி நமது வரலாற்றில் பல முன்மாதிரிப் பெண்கள் உண்டு. வரலாற்றில் மட்டுமல்ல. சமகால உலகிலும் இதுபோன்று அல்லாஹ்விற்காக எதையும் தியாகம் செய்யக்கூடிய, எதையும் தாங்கிக் கொள்ளக் கூடிய பெண்கள் வந்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதற்கு ஒரு சமகால உதாரணமே ஷிவானி(எ) கதீஜா. வாருங்கள் அவரது அனுபவங்களில் பயணிப்போம்......

**ஷிவானி (எ) கதீஜா**

என்னுடைய பெயர் கதீஜா. பழைய பெயர் ஷிவானி. எனக்கு ஒரு தம்பி இருக்கிறான். என் தந்தை வளைகுடா நாட்டில் பணிபுரிகிறார். நான், தம்பி, அம்மா, அப்பா என சந்தோஷமான குடும்பம் எனது குடும்பம். என் பெற்றோர் என்னை மிகவும் சுதந்திரமாக வளர்த்தார்கள்.

நான் பத்தாம் வகுப்பு படிக்கும் போது என்னுடைய தோழியின் அண்ணன் ஒருவர் எனக்கு அறிமுகமானார். அவர் எனக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறினார். முதலில் அவர் கூறுவதைக் கேட்கும் போது கதை போல ஆர்வமாக இருந்தது.

ஆனால் அதையெல்லாம் கேட்டு ஒவ்வொன்றாக சிந்திக்க ஆரம்பித்த போது எனக்கு ஒவ்வொன்றாக புரிய ஆரம்பித்தது. நான் இறைவன் விஷயத்தில் எவ்வளவு பெரிய வழிகேட்டில் இருக்கின்றேன் என தெரிய ஆரம்பித்தது. உடனேயே கலீமா கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன்.

ஆனால் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை யாரிடமும் வெளிப்படுத்த வில்லை. அந்த நாட்கள் மிகவும் சிரமமான நாட்கள். கலீமா கூறி ஓரிறைக் கொள்கையை ஏற்றுக் கொண்ட நான் என் பெற்றோர்களுடன் கோவிலுக்கு செல்லும் போது, வீட்டில் சாமி கும்பிடும் போதெல்லாம் கடும் சோதனையாக இருக்கும். அவர்கள் கூறுவதை மறுக்கவும் முடியாது. வீட்டில் உண்மையையும் சொல்ல முடியாது. மிகவும் வேதனையான நாட்கள் அவை.

**கல்லூரி வாழ்க்கை - முஸ்லிம்களின் அன்பான அறவணைப்பு**

இந்த நிலையில் எனது பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரிக்கு செல்கிறேன். கல்லூரியில் எனக்கு நிறைய முஸ்லிம் தோழிகள் கிடைத்தார்கள். அவர்களிடத்தில் என் நிலைமையைக் கூறினேன். அவர்கள் எனக்கு உதவியாக இருந்தார்கள். மேலும் அவர்கள் எனக்கு இஸ்லாத்தை பற்றி அதிகதிமாக சொல்லிக் கொடுத்தார்கள். எனக்கு நோன்பு வைக்க சொல்லிக் கொடுத்தார்கள். எனக்கென ஒரு பர்தாவை வாங்கி கொடுத்து நான் இஸ்லாத்தில் நிலைத்திருக்க ஊக்குவித்தார்கள்.

இந்த நிலையில் ஒரு நாள் நான் வீட்டில் புர்காவை மறந்து வைத்து விட்டு கல்லூரிக்கு சென்று விட்டேன். அப்போது என்னுடைய அலமாரியில் புர்கா, குர்ஆன் இருப்பதை யெல்லாம் என்னுடைய அம்மா கண்டுபிடித்து விட்டார்கள். அதே நேரத்தில் என்னுடைய கல்லூரி முதல்வரும் நான் நோன்பு வைப்பதை யெல்லாம் கவனித்து என்னுடைய பெற்றோருக்கு தகவல் சொல்லி விட்டார்.

இதையெல்லாம் எதிர்கொள்ள எனக்கு பயமாக இருந்தது. அதே நேரத்தில் இஸ்லாத்தையும் விட எனக்கு விருப்பமில்லை. அதனால் என்னுடைய தோழியின் உறவினரின் உதவியோடு ஒரு மத்ரஸாவில் சேர்ந்து விடலாம் என முடிவெடுத்து வீட்டை விட்டு வெளியேறி விட்டேன். ஆனால் எனது பெற்றோர்கள் காவல்துறையில் புகார் செய்து அவர்களின் உதவியோடு என்னை பாதி வழியிலேயே மடக்கி பிடித்து மீண்டும் வீட்டிற்கு அழைத்து வந்து விட்டார்கள்.

**சோதனைகள்**

அதன் பின் என்னை இஸ்லாத்தை விட்டு மீட்டு கொண்டு வர எவ்வளவோ முயற்சி செய்தார்கள். இஸ்லாம் பயங்கரவாத மார்க்கம். முஸ்லிம்கள் தீவிரவாதிகள் என்றெல்லாம் என்னிடம் கூறினார்கள். ஆனால் நான் அவர்களுக்கு இஸ்லாத்தை பற்றி தாவா செய்தான். அவர்களுக்கு அழகிய முறையில் எடுத்து கூறினேன்.

அதன் பின் பெற்றோர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துவிட்டார்கள். நீதிமன்றத்திற்கு என்னை அழைத்து சென்றார்கள். அங்கே நீதிபதி கேட்டார்,

"நீ உன் பெற்றோர்களுடன் செல்கிறாயா? இல்லை மத்ரஸாவிற்கு செல்கிறாயா?" என்று.

"நான் மத்ரஸாவிற்கு தான் செல்ல விரும்புகிறேன்" என்று திட்டவட்டமாக கூறிவிட்டேன்.

என்னுடைய அம்மா என்னிடம் மீண்டும் மீண்டும் வந்து பேசினார். இஸ்லாத்தை விட்டு வந்து விடு என்று வற்புறுத்தினார். ஆனால் நான் மறுத்து விட்டேன். மத்ரஸாவிற்கு தான் செல்வேன் என்று முடிவாக கூறிவிட்டேன்.

அதன் பின்னர் என் அம்மா என்னிடம் வந்து, "நீ எப்படி தனியாக செல்வாய்? வீட்டிற்கு வா. நானும் தம்பியும் சேர்ந்து உன்னை அழைத்துக் கொண்டு போய் விடுகிறோம்" என்று கூறினார்கள். நானும் அவர்களை நம்பி அவர்களுடன் சென்றேன்.

ஆனால் நான் வீட்டிற்கு வந்தவுடன் என்னை மத்ரஸாவிற்கு அழைத்து செல்வதற்கு பதிலாக தினமும் ஒரு கோவிலுக்கு பூசாரியிடம் கூட்டி சென்றார்கள். போக போக என்னை வீட்டுச்

சிறையில் வைத்து விட்டார்கள். அந்த காலங்களில் குர்ஆன் கூட என் கையில் இல்லை. தினமும் நாளிதழ்களில் குர்ஆன் வசனங்கள் சில இடம் பெறும். அதைப் படித்து அல்லாஹ்விடம் கையேந்துவேன்.

ஆனால் அதையும் என் பெற்றோர் தெரிந்து கொண்டு நாளிதழ்களை கூட நிறுத்தினார்கள். போகப் போக எனக்கு நிறைய தொல்லைகளை கொடுக்க ஆரம்பித்தார்கள். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தொல்லைகள் கொடுக்க ஆரம்பித்தார்கள். இவைகளையெல்லாம் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

அப்போதுதான் யோசித்தேன். இப்படியே இருப்பதால் எந்த பிரயோஜனமும் இல்லை. என்னுடைய எதிர் காலம் இஸ்லாத்தில் நிலைக்க வேண்டும் என்றால் அதற்கு நான் தான் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நினைத்து என் அம்மாவிடம் நானும் தந்திரமாக இஸ்லாத்தை விட்டு விடுவதாக நடிக்க ஆரம்பித்தேன்.

ஆனால் என் தாயார் நம்பவில்லை. என்னை குறி சொல்பவர்களிடம் அழைத்துச் சென்று குறிக் கேட்டார்கள். அவர், "உங்கள் மகள் மனம் மாறிவிட்டது. இனி அவள் இஸ்லாத்தை யெல்லாம் கடைபிடிக்க மாட்டாள். தைரியமாக இருங்கள்" என்று குறி சொல்லினார்.

அதன் பின் என்னை இரண்டு வருடங்கள் கழித்து மீண்டும் கல்லூரிக்கு அனுப்ப முடிவெடுத்தார்கள்.

அதன் பின் நான் மிகவும் ரகசியமாக இஸ்லாத்தை பின்பற்ற தொடங்கினேன். ஆனாலும் மீண்டும் என் பெற்றோர் கண்டுபிடித்து விட்டார்கள். இந்த முறை என் உறவினர்கள் எல்லாம் வந்து விட்டார்கள். என்னை இஸ்லாத்திலிருந்து மீட்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

ஆனால் நான், "எனக்கு இஸ்லாம் தான் முக்கியம் நான் அதில் தான் இருப்பேன்." என்று உறுதியாக கூறிவிட்டேன். அதுமட்டு மில்லாமல் என்னை மாற்றுவதற்காக வரும் உறவினர்களுக்கு இஸ்லாத்தின் உண்மைத் தன்மையையும் எடுத்துக் கூற ஆரம்பித்தேன்.

ஆனால் அவர்கள் நான் சொல்வதை புரிந்து கொள்ள தயாராக இல்லை. என்னை எப்படியாவது இஸ்லாத்திலிருந்து மீட்டு விட வேண்டும் என்று தான் அவர்கள் குறியாக இருந்தார்கள்.

மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்று என்னை இஸ்லாத்திலிருந்து விடுவிக்கச் சொல்லி மந்திரிப்பார்கள். நடு இரவில் மந்திரவாதிகளை வீட்டிற்கு அழைத்து வந்து மந்திரிப்பார்கள். அந்த மந்திரவாதிகள் என் உச்சி முடியை பிடித்து இழுத்து பிடுங்கி எனக்கு மந்திரிப்பார்கள். என் தலையில் தேங்காயெல்லாம் உடைத்தார்கள். முட்டையை மந்திரித்து பச்சையாக குடிக்க வைப்பார்கள்.

ஆனால் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு பொறுமையாக இருந்தேன். என்னை மந்திரிக்க வருபவர்களிடத்தில் "அவூது பில்லாஹி மினர் ஷைத்தானிர் ரஜீம்" என்று கூறிக் கொண்டே இருப்பேன்.

ஒருக் கட்டத்தில் அவர்களே வெறுத்துப் போய், "இவள் உறுதியாக இருக்கிறாள். இவளை வீட்டில் வைத்திருந்தாள் உங்களையும் சேர்த்து மதம் மாற்றிவிடுவாள். இவள் இறந்து விட்டதாக நினைத்துக் கொண்டு வீட்டை விட்டு அனுப்பி விடுங்கள்" என்று என் அம்மாவிடம் கூறிவிட்டார்கள்.

அவர்கள் அப்படிச் சொன்னதும் என் பெற்றோர்கள், என்னுடைய தோழியின் பெற்றோர்களை அழைத்து, "இனி இவளுக்கும் எங்களுக்கும் சம்மந்தமில்லை என்று கூறி பத்திரத்தில் எழுதி கொடுத்து என்னை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

**அல்லாஹ்விற்காக எதையும்.........**

எனக்கு அந்த நேரத்தில் மிகவும் வேதனையாக இருந்தது. என் தம்பி என்னை விட பத்து வயது சிறியவன். நான் வீட்டில் இருக்கும் போது அவனை அன்பாக பார்த்துக் கொள்வேன். நான் அவனை விட்டு போகும் போது, "சின்ன வயசுலருந்து நான் உன்னுடன் தான் இருக்கிறேன். என்னை விட்டு போக உனக்கு எப்படி மனம் வருகிறது" என்று கேட்டான்.

அவனுடைய அந்தக் கேள்வி எனக்குள் மிகவும் வருத்தத்தை ஏற்படுத்தியது. ஆனாலும் எனக்கு அல்லாஹ் தான் முக்கியம் என்று வந்து விட்டேன். காயல்பட்டிணம் மத்ரஸாவில் மார்க்கக் கல்வியை பயின்று வருகிறேன். (அல்ஹம்துலில்லாஹ்)

எனக்காகவும் என் பெற்றோர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்களுக்கெல்லாம் ஹிதாயத் கிடைக்க வேண்டும் என்று அல்லாஹ்விடம் எனக்காக பிரார்த்தியுங்கள். அஸ்ஸலாம்.

Source: https://youtu.be/NzcGHurkm8c

**- அஷ்ரஃப் இஸ்லாம்**



# மத்திய சென்னை எம்.பி. தயாநிதி மாறன் அவர்களோடு சந்திப்பு


சென்னை மத்திய சென்னை எம்.பி. திரு. தயாநிதி மாறன் அவர்கள் 31.05.2019 அன்று ஜும்ஆ தொழுகைக்குப் பின்னர் மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித் க்கு வந்து இமாம் இல்யாஸ் ரியாஜி அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார்.

நீண்டநேர உரையாடலில், ஜமாஅத்துல் உலமா சபைக்கும் முஸ்லிம் சமுதாயத்துக்கும் பலமுறை நன்றி கூறினார்.



ஜமாஅத்துல் உலமாவின் உழைப்பு தமிழகத்துக்கு வெளியேயும் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதை ஜமாஅத்துல் உலமாவின் துணைப் பொதுச்செயலாளர் இமாம் இல்யாஸ் ரியாஜியிடம் வலியுறுத்தினார்.

(உடன்: புரொபஷனல் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் மீரான் அவர்கள், மந்தைவெளி ஈத்கா மஸ்ஜித் செயலாளர் எல்.கே.எஸ். இம்தியாஸ் அவர்கள், துணைச்செயலாளர் கே.எஸ். இம்தியாஸ் அவர்கள், ராசி டிராவல்ஸ் சிக்கந்தர் அவர்கள் இன்னும் சிலர்.)



தொடர் 15

# இஸ்லாம்

## அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி

அதிபர் தேர்தலில் போட்டியிட மாட்டோம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் போட்டி போட மாட்டோம் என்றது ஆரம்பத்தில் **FJP.** அவர்கள் தாங்களாகவே வரையறுத்து கொண்ட இந்த விதியை அவர்களே மீறினர். ஒவ்வொரு உறுப்பினர் பதவிக்கு பின்பும் ஓடினர். அதிபர் தேர்தலில் களத்தில் இறங்கினர். **FJP-**க்கு போட்டியாக எதிரணியில் நின்றவர்கள் இந்த நிலைபாட்டை கடுமையாக விமர்சித்தனர். **FJP-**க்கு எதிராக மக்களை ஒருங்கிணைக்க இந்த நிலையை அவர்கள் பயன்படுத்தினர்.

வளர்ந்து வரும் மற்ற இஸ்லாமிய இயக்கங்களான அல் நூர் கட்சி மற்றும் **Construction and Development** கட்சியினால் எங்கே ஓரங்கட்டப்பட்டு விடுவோமே என்ற பயமே **FJP-**இடம் ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணம். அதனாலேயே அவர்கள் அதிபர் தேர்தலில் பங்கெடுத்தனர். இன்னொரு காரணம், **MBH-**லிருந்து வெளியேறிய அபுல் பதஹ் சுயேட்சையாக அதிபர் தேர்தலில் போட்டியிட முடிவெடுத்தது **MBH-**ஐ கலக்கத்திலும் பதட்டத்திலும் தள்ளியது.

21 நவம்பர் 2012 அன்று ஓர் ஆணையை பிறப்பித்தார் முர்சி. இதன்படி, புதிய அரசியல் சாசன சட்டம் இயற்றப்படும் வரை அரசியல் நிர்ணய மன்றம் கொண்டு வரும் சட்ட வரைவில் நீதிமன்றம் கூட தலையிட முடியாது. தான் எடுக்கும் முடிவுகளை அல்லது பிறப்பிக்கும் ஆணைகளை எதிர்த்து யாரும் வழக்கு தொடுத்திட முடியாது. இந்த ஆணை மக்களிடையே கொந்தளிப்புகளை ஏற்படுத்தியது. அரசியல் நிர்ணய மன்றத்தை கலைக்கும் அல்லது மேல் அவையை கலைக்கும் உரிமையிழந்தது எகிப்து உச்ச நீதிமன்றம் **(Supreme Constitutional Court)** இந்த ஆணையால்.

இதே ஆணையை பயன்படுத்தி அரசு தலைமை வழக்குரைஞரையும் பதவியில் இருந்து அப்புறப்படுத்தினர். இது முற்றிலும் நாட்டின் அரசியலமைப்புக்கு எதிரான நடவடிக்கை. எகிப்து உச்ச நீதிமன்றத்தின் வளாகத்தை கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு மேலாக சுற்றி வளைத்திருந்தனர் **MBH-**இன் உறுப்பினர்கள். இப்படியொரு செயல் கடந்த காலத்தில் இதுவரை நடந்ததில்லை. நீதிமன்றத்தின் புகழுக்கு களங்கம் விளைவிப்பதைப்போல் அமைந்தது இச்செயல்.

600 புதிய நீதிபதிகளை நியமிக்கும் திட்டத்தையும் வைத்திருந்தது **MBH**. அனைவரும் விஙிபி-இன் உறுப்பினர்கள். இதுதவிர, **MBH**-க்கு ஆதரவாக செயல்படுபவர்களை கொண்டு மொத்தம் உள்ள 35,000 காவல்துறை பணியிடங்களில் 3600 பேரை நியமிக்கும் திட்டத்தையும் வைத்திருந்தனர். நீதித்துறை வட்டாரத்தில் இது பெரும் சினத்தை ஏற்படுத்தியது. புதியதொரு ஏகாதிபத்தியம் நாட்டில் உருவாகிவிடுமோ என்று அஞ்சினர் அறிவுஜீவிகள். நீதித்துறையின் சுதந்திரத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாக இது பார்க்கப்பட்டது. இதற்கு முந்தைய சர்வாதிகார ஆட்சியிலும் இந்த அளவு தலையீடு இருக்கவில்லை.

முர்சி ஆட்சியில் இருந்த ஒரு வருடத்தில் எல்லா விதமான நெருக்கடிகளையும் சந்தித்தார். அது அனைத்துமே கேடாகவே முடிந்தது. தேசிய அவை கலைக்கப்படிருப்பதால், புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட முர்சி எகிப்து உச்சநீதிமன்ற வளாகத்திற்கு வந்து பதவி பிரமாணம் எடுக்க வேண்டும் என்றது எகிப்து உச்சநீதிமன்றம். ஒரு அதிபரை எப்படி உச்சநீதிமன்றம் வந்து பதவி பிரமாணம் எடுக்க சொல்லலாம், இது புதிய சிக்கலை ஏற்படுத்தியது. சட்டப்படி, தேசிய அவை செயலில் இல்லாதபோது இதுபோன்ற பதவி பிரமாணம் நடைபெறாது. பதவி பிராமண விழாவிற்கு உச்ச நீதிமன்றமே நாடாளுமன்றத்திற்கு வரவேண்டும் என்றது அதிபர் அலுவலகம். ஆனால் எகிப்து உச்ச நீதிமன்றம் தனது முடிவில் கறாராக இருந்தது. வேறு வழியில்லாமல் நீதிமன்ற வளாகத்திற்கு சென்று பதவி பிரமாணம் எடுத்தார் அதிபர். முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபருக்கு விழுந்த முதல் அடி இது.

நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டதாக 14 ஜூன் றீஇல் கூறிய எகிப்து உச்சநீதிமன்றத்தின் ஆணையை அதிபராக நான் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே நாடாளுமன்றத்தில் தான் பதவி பிரமாணம் எடுப்பேன் என்று தனது தொண்டர்களிடம் முர்சி கூறியிருந்தார். ஆனால் அவரின் வாக்கு பொய்யாகி போனது. எகிப்தின் மற்ற அரசு நிறுவனங்களுடனும் இது போன்ற பிரச்னைகள் ஏற்பட்டதால் நெருக்கடிகள் இன்னும் தீவிரமானது.

தங்கள் அரசின் மீது கொண்டிருந்த நம்பிக்கையை மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறார்கள் என்பதை புரிந்து கொள்ள தவறியது முர்சி அரசு. ஊடகம், நீதித்துறை மற்றும் இராணுவம் என இதர அரசு நிறுவனங்களோடு இணைந்து செயல்படாமல் தனித்து செயல்பட முனைந்தது அரசு.

நாடு இக்கட்டான பொருளாதார நிதி நெருக்கடியை சந்தித்தது. மக்களின் தேவைகளுக்கு பணத்தை செலவிட இயலவில்லை. இதனால் மக்கள் துயரத்திற்கு ஆளாகினர். இதைக்குறித்து இராணுவம் தொடர்ந்து எச்சரித்தும் நிதி நெருக்கடியை சமாளிப்பதில் போதிய அக்கறையை அரசு செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டே முர்சி அரசின் மீது வைக்கப்பட்டது. இதே ஆபத்தான நிலைமை தொடர்ந்து நீடித்தாலோ அல்லது இதனால் உள்நாட்டில் கலகம் ஏற்படும் நிலை வந்தாலோ இராணுவம் சும்மா வேடிக்கை பார்த்து கொண்டிருக்காது என அறிவித்தார் பாதுகாப்பு அமைச்சர்.

இராணுவத்தினரும் விஙிபி-ஐ அணியினரும் தொடர்ந்து மாறி மாறி வார்த்தைப் போரில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். தொலை காட்சிகளிலும் ஊடகங்களிலும் இராணுவத்தை தொடர்ந்து அவமதித்து பேசி வந்தனர் விஙிபி-இன் தலைவர்களும் பொறுப்புதாரிகளும். பிப்ரவரி 2012-இல் நாடாளுமன்றவாதிகளுக்கும் ஆயுத படைகளின் சுப்ரீம் கவுன்சிலுக்கும் இடையே முதல் சந்திப்பு நடந்தது. இராணுவத்திற்கு எதிராக ஊடகம் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்று கூறி தங்களது வேதனையை வெளிப்படையாகவே அந்த சந்திப்பில் தெரிவித்தது **SCAF (Supreme council of Armed Forces)**. மேலும் எங்களுக்கு அதிகாரத்தின் மீது விருப்பம் இல்லை என்றும் தெரிவித்தது.

தங்களின் அரசியல் லாபத்திற்கு இராணுவத்தை பயன்படுத்தலாம் என்று எண்ணியது **MBH**. அது மட்டுமல்ல, நாட்டின் மதிப்புமிக்க நிறுவனமான இராணுவத்தை கேலியும் கிண்டலும் செய்தது. தேசிய பத்திரிகை ஒன்றில் **MBH**-இன் முக்கிய உறுப்பினர் ஒருவர் ஒரு கவிதையை எழுதினார். அதன் நடைகள் இப்படி அமைந்தன. “அமைதியான காலத்தில் அவர்கள் துணிச்சல் மிக்கவர்கள். நெருக்கடி காலத்தில் அவர்கள் பயந்தாங் கோழிகள். எலியால் வழி நடத்தப்படும் இராணுவத்திற்கு என்ன மதிப்பு” இராணுவத்தை நேரடியாக தாக்கின இந்த வரிகள். கடந்த காலத்தில் இராணுவம் பல வரலாற்று நெருக்கடிகளை சந்தித்துள்ளது. ஆனால் அவற்றையெல்லாம் எள்ளி நகையாடுவது போல் அமைந்தது அக்கவிதை. இஸ்ரேலுக்கு எதிராக நாட்டை பாதுகாப்பதில் தனது பங்களிப்பை சளையாமல் கொடுத்தது இராணுவமே. இக்கவிதைக்கு உடனடி பதில் கொடுத்தது இராணுவம். அப்பதில் **MBH**-ஐ வரலாற்றை குற்றப்படுத்தியது. அப்போது நாட்டின் பாதுகாப்பு அமைச்சராக புதிதாக பதவியேற்ற சிசி எதிர் தரப்பினரை இப்படி எச்சரித்தார்...

இன்ஷா அல்லாஹ் தொடரும்

**அபூஹாசின்**



# முதல் கிப்லா அல் அக்ஸாவை மீட்போம்

## அல்குத்ஸ் தினம்

**“பெருமானார்(ஸல்) அவர்கள் கூறினார்கள்; மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறெங்கும் நன்மையை நாடி பயணம் செய்வது என்பதில்லை. ஒன்று மஸ்ஜிதுல் ஹரம், மஸ்ஜிதுன் நபவி என்ற என்னுடைய பள்ளிவாசல், பைத்துல் முகத்தஸின் மஸ்ஜிதுல் அக்ஸா.”**

*(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)*

வருடந்தோரும் ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை அல்குத்ஸ் சர்வதேச தினம். இந்த நாளில் மஸ்ஜிதுல் அக்ஸா என்ற நமது முதல் கிப்லாவை, யூதர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கும் முகமாக உலக மக்களின் கவனத்தை அல் அக்ஸாவின் பக்கம் திருப்பி வருகின்றோம். அந்தந்த வருடங்களில் அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் என்னென்ன நடந்தன என்பதையும் மக்கள் மன்றத்தில் வைத்து வருகின்றோம்.

**புதிய ஆபத்து**

நியூசிலாந்தில் அப்பாவி முஸ்லிம்களைக் கொன்று குவித்த அட்ரின் தோராந்து, “சாலமன் ஆலயத்தின் வரைபடம் தன்னிடம் இருப்பதாகவும், அந்த சாலமன் ஆலயம் **Dom of the Rock** அல் அக்ஸா மஸ்ஜித் - இன் தோரணையாக அமைந்திருக்கும் உமர்(ரழி) அவர்களின் பள்ளிவாசலின் கீழ் இருப்பதாக” கூறி புதியதொரு ஆபத்தை கிளறி விட்டு இருக்கின்றார்கள்.

**மே 15, 2019**

வருடா வருடம் மே 15ஆம் நாளை யூத நாடாகிய இஸ்ரேலின் பிறந்தநாள் என அறிவித்து அடாவடித்தனங்களை செய்து வருகின்றார்கள். இந்த அடாவடித்தனங்களில் ஒன்றாக காஸா பகுதியில் வாழும் அப்பாவி பாலஸ்தீன



இஸ்ரேலின் குண்டுகள் காஸாவில் விழுந்த போது

முஸ்லிம்கள் மீது வான்வழி மற்றும் தரைவழி தாக்குதலை நடத்தி வருகின்றார்கள். இந்த வருடமும் இதே போல் தாக்குதலை நடத்தினார்கள். குழந்தைகள் உட்பட பல



மஸ்ஜித் அல் அக்ஸாவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் பாலஸ்தின பெண்கள்

பாலஸ்தீன முஸ்லிம்கள் இறந்தார்கள். உடனேயே பாலஸ்தீன முஸ்லிம்களை பாதுகாத்து வரும் ஹமாஸ் என்ற அமைப்பு இஸ்ரேல் நாட்டின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தினார்கள். பல யூத இலக்குகள் தாக்குதலுக்கு ஆளாகின. தோல்வியை ஒத்துக் கொண்டு சமாதானம் செய்து கொண்டனர். முஸ்லிம்கள் இந்த நாளை மே 15 பேரழிவின் நாள் எனக் கொண்டாடி வருகின்றார்கள்.

**தடை**

அல் அக்ஸா மஸ்ஜித் - இல் முஸ்லிம் ஆண்கள் நுழைந்திட பயங்கர தடை விதித்துள்ளார்கள் யூதர்கள். மஸ்ஜித் - இல் பெண்கள் புகும் வாசலில் யூத ஆண்களை விட்டு சோதனை என்றெல்லாம் கெடுபிடிகளை கட்டவிழ்த்து விட்டார்கள். இப்போது பாலஸ்தீன பெண்கள், "நாங்களே பாதுகாப்பை பார்த்துக் கொள்கின்றோம்" என பாதுகாப்பை கையில் எடுத்து கொண்டார்கள்.

**டிரம்ப் - இன் புதிய திட்டம்**

பாலஸ்தீன் பிரச்சினையைத் தீர்க்க நான் இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய திட்டம் ஒன்றை அறிவிக்கப் போகிறேன் என அறிவித்துள்ளார். அதில் பாலஸ்தீன முஸ்லிம்கள் வெளி உலகத்துடன் வியாபாரம் செய்து கொள்ள சில நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்கள்.

ஆனால் மொத்த பாலஸ்தீனும் இஸ்ரேலுக்கே சொந்தம். ஜெருசலம் அதன் தலைநகர் என சொல்லி வருகின்றார்கள்.

**பாலஸ்தீன் முஸ்லிம்களின் வேண்டுகோள்**

"உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் அல் குத்ஸ் ஜெருஸலம் வர வேண்டும். அவர்கள் அல் அக்ஸா மஸ்ஜிதில் தொழ வேண்டும். இதன் மூலம் அல் அக்ஸா மற்றும் ஜெருஸலம் - இவை உலக முஸ்லிம் களுக்குச் சொந்தமானது, எனக்காட்டிட வேண்டும்" என்று பல வருடங்களாகக் கோரி வருகின்றார்கள்.

பெருமானார்(ஸல்) அவர்கள் கூறினார்கள்; "பைத்துல் முகத்திஸ் அல் அக்ஸாவில் சென்று தொழுங்கள். இயலவில்லை என்றால் அங்கே எரியும் விளக்குகளுக்குப் பயன்பட கொஞ்சம் எண்ணெயை அனுப்புங்கள்." (அஹ்மத்)

"ஹஜ் அல்லது உம்ராவிற்கு செல்லும் ஒருவர் மஸ்ஜிதுல் அக்ஸாவில் இஹ்ராம் அணிந்து, பின்னர் புனித மஸ்ஜிதுக்கு(மக்காவிலுள்ள கஆபாவிற்கு) செல்வாரேயானால், அவருடைய முன் பாவங்களும், பின் பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும்." (திர்மிதி, அஹ்மத்)

பாலஸ்தீன மக்களுக்காக துஆ செய்வோம். ஒன்றாய் இணைவோம் பாலஸ்தீன மக்களுடன்.. மீட்போம் அல் அக்ஸாவை...இன்ஷா அல்லாஹ்

இவண்

தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்

நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்

வைகறை வாசகர் வட்டம்



# கோ - எஜுகேஷனைக் கைவிட்ட பெல்ஜியம்!

பர்தா அணிவது இப்படி என்று நமது நபித்தோழியர்கள் இன்முகம் காட்டி வரவேற்றார்கள். அதேபோல் இன்றும் நமது பல்கலைக்கழக மாணவிகள் வரவேற்றார்கள்.

இந்த செய்தியை படித்தவுடன் மேலை நாடுகளில் இந்த பர்தாவை நோக்கிப் பாய்ந்தோடி வரும் பெண்களின் எண்ணிக்கை பெருகி நின்றது என்று வாசகர்கள் தரும் செய்திகள் வந்து குவிந்து நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுகின்றன.

மேலைநாட்டு சாதாரணப் பெண்களல்ல! சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் இவர்களெல்லாம் கூட இந்த பர்தா முறையை போற்றிடவும், சிலாகித்து பேசவும், எழுதவும் முன் வந்துள்ளார்கள். அதிசயம். ஆனால் உண்மை!

பல எழுத்தாளர்கள் அதிலும் பெண் எழுத்தாளர்கள் இந்த பர்தா முறைக்கு எதிராக ஒரு பெரும் எழுத்துப் போரையே தொடர்ந்தார்கள்.

பர்தா போடுவதால்தான் முஸ்லிம் பெண்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாதவர்களாக ஆகிவிட்டார்கள் என்று முழங்கினார்கள். இப்படி எழுதி அவர்களில் பலர் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள்.

இந்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் மேலை நாடுகளிலும் அவை போதிக்கும் தத்துவங்களையும் உண்மை என நம்பி ஏமாந்தவர்கள்.

பிரிட்டன் என்ற ஆங்கிலேயே நாட்டையும் இன்னும் உள்ள ஐரோப்பிய நாடுகளை தான் நாம் மேலைநாடுகள் என்கின்றோம். அமெரிக்காவும் இப்போது பர்தாவை எதிர்ப்பவர்களின் வரிசையில் இணைந்து விட்டது.

இந்த முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் மேலை நாடுகள் தாம் நமக்கு ஒரு முன்மாதிரி என்ற அளவில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள். இந்த மேலை நாடுகளும் விஞ்ஞானம், அறிவியல், நாகரிகம், முன்னேற்றம் என்ற போர்வைக்குள் நின்று கொண்டு இஸ்லாத்தையும் அதனைப் பின்பற்றும் முஸ்லிம்களையும் இஸ்லாமிய ஆடை அமைப்புகளையும் இடித்துக் கொண்டே இருப்பவர்கள்.

இந்த மேலைநாட்டு மயக்கத்தில் விழுந்து அரபு எழுத்துலகில் அலாதியான அதிர்வுகளை ஏற்படுத்தியவர் தான் டாக்டர் நவால் அல் சாதவி. இவர் ஒரு பெண் எழுத்தாளர்.

இவருடைய எழுத்துக்களால் கவரப்பட்டு பல நாடுகளில் முஸ்லிம் பெண்கள் பர்தாவிற்கு வெளியே வந்தார்கள். நவீன ஆடைகள் என்ற பெயரில் தங்கள் உடல்களை வெளிக்காட்டி உலா வந்தார்கள் வீதிகளில்.

இவருடைய எழுத்துக்களால் கவரப்பட்டு பல ஆட்சியாளர்கள் சட்டங்களை போட்டார்கள். அந்த சட்டங்கள் பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில் பிரதான, சாலைகளில், ஆலைகளில், அரசு அலுவலகங்களில் பெண்கள் பர்தா அணிய கூடாது. அப்படி அணிந்து வந்தால் அவற்றை அப்புறப்படுத்தும் அதிகாரம் காவல்துறைக்கு உண்டு என்று அறிவித்தன.

துருக்கி, துனிசியா, சிரியா, சூடான் போன்ற நாடுகள் இவற்றில் சில இந்த சட்டங்கள் வெற்றி பெற்றவர்களாக இருக்கவில்லை. நாட்டு நடப்பாகவும் நடத்தி காட்டப்பட்டன. ஆனால் இந்த எழுத்தாளர் இப்போது தன்னை முழுமையாக மாற்றிக்கொண்டார். அவருடைய இப்போதைய எழுத்துக்கள் பர்தாவை ஆதரிக்கும் பிரச்சாரங்களாக பிரவாகம் எடுத்து வருகின்றன.

அண்மையில் அவர் இப்படி எழுதியுள்ளார்;

“லண்டன் மாநகர வீதிகளில் பெண்கள் ஏறத்தாழ நிர்வாணமாக நடமாடுவதை நான் பார்க்கின்றேன். அவர்கள் தங்கள் உடலை விற்பனைப் பொருட்களை போல் அடுத்தவர்களின் பார்வைக்கு வைக்கின்றார்கள். ஆடைகளுக்கு என சில பணிகள் இருக்கின்றன. ஆடைகள் இயற்கை சூழல்களினால் ஏற்படும் கேடுகளில் இருந்து நமது உடலை பாதுகாக்க வேண்டும். அவை பார்ப்பவர்களின் கீழான உணர்வுகளை தூண்டுகின்ற கருவியாக இருக்க கூடாது. ஒரு பெண் தன்னை மனித இனத்துக்கு சார்ந்தவள் என கருதினால் அவள் தனது உடலை வியாபாரப் பொருளாக காட்சி தருவதை நிறுத்திக் கொள்ளட்டும்.” (அல் முஜதிமா, குவைத் வெளியீட்டெண்:932)

தனது முந்தைய எழுத்துக்களால் பாழ்பட்டு போன சமுதாயத்தைப் பற்றி கவலைப்படும் அவர், “பார்தா என்ற திரை உள்ளங்களில் இருந்து அகற்றப் பட வேண்டுமே அல்லாமல் உடலை மறைத்துக் கொள்வதில் இருந்து அகற்றப்பட கூடாது” என்கிறார்.

படித்தவர்கள், அறிவாளிகள் என தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளும் பலர் ஆடை அணிந்து இருக்கின்றோம் என கூறி ஒட்டு துணியோடு வாழ்வதையே இந்தப் பெண் எழுத்தாளர் இப்படி எடுத்துக் காட்டுகின்றார்.

“பல பெண் பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள் இவர்கள் எல்லாம் அரசியல், சமுதாய சீரமைப்பு, கலாச்சாரம் இவற்றில் அறிகுறிகளாக இருப்பதையும் நான் பார்க்கின்றேன்.(அல் முஜதிமா, குவைத் வெளியீட்டெண்:932)

இன்னொரு எழுத்தாளர் அவரது பெயர் இஹ்ஸான் அப்துல் குத்தூஸ். இவர் அரபு மக்கள் அதிகமாக படிக்கும் ஒரு கதை ஆசிரியர். நவீனங்கள் என்ற கதையை நயம்பட எழுதுபவர். பொழுதுபோக்காகவும் பொழுதை போக்கவும் அரபு மக்கள் இவருடைய எழுத்துக்களையே அதிகமாக படித்தார்கள். இவருடைய கதைகள் முஸ்லிம் சமுதாயத்திற்கு உள்ளே புகுந்து பெண்களின் மனங்களில் ஒழுக்க நெறி உடைத்தெறிந்து விட்டு வெளியே வர வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்தன.

பூங்காக்கள், வீதிகள், கிளப்கள், கடற்கரைகள், சுற்றுலாவுக்கு செல்லும் இடங்கள் இவற்றில் ஆண்களுடன் உல்லாச வாழ்க்கை என்றொரு விபரீதத்தை வளர்த்தன. இவரது கதைகள் இந்த நாவல்களில் ஒரு தலைமுறையை செய்து சீர்குலைத்து பின் புத்தி வந்தது இந்த எழுத்தாளருக்கு. இஸ்லாத்தின் நிழலில் இப்போதெல்லாம் இவர் இப்படி கூறி வருகின்றார்;

“எந்த ஒரு பெண்ணுக்கும் அடிப்படை பொறுப்பு என்பது அவரது குடும்பம், வீடு, குழந்தைகள் இவைதான். இது எல்லோரை விடவும் எனக்கு தான் அதிகமாக பொருந்தும். என்னுடைய மனைவி இல்லை என்றால் நான் வாழ்க்கையில் அடைந்த மகத்தான வெற்றிகளை அடைந்து இருக்கவியலாது. அன்பும் ஆதரவும் நிறைந்த ஒரு குடும்ப வாழ்க்கை சுவைத்திருக்க இயலாது. இவையெல்லாம் எப்படி முடிந்தது என்றால், என் மனைவி குடும்பத்தையும், குழந்தைகளையும் ஒரே மனதுடன் கவனித்துக் கொண்டாள்.”

இதில் பிரச்சினை என்னவெனில் இந்த எழுத்தாளர்களுக்கு மேலை நாட்டு மோகம் கலைந்து விவரம் தெரிவதற்குள் ஒரு தலைமுறையை கெடுத்து பல குடும்பங்களில் நிம்மதி என்பதே நிரந்தரமாக இல்லாமல் செய்து விடுகின்றார்கள். இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றுபவர்களின் வாழ்க்கையில் இதுபோன்ற குளறுபடிகள் ஏற்படுவதே இல்லை. அவர்கள் நல்லதொரு குடும்ப வாழ்க்கையை சுவைகிறார்கள்.

மேலை நாடுகளில் பல பள்ளிகளும், பல்கலைக்கழகங்களும் இப்போது ஆண்களும், பெண்களும் இணைந்து கல்வி கற்கும் முறைமையை புறக்கணித்து வருகின்றன. அவை சார்ந்த முஸ்லிம் கல்வியாளர் ஒருவர் பெல்ஜியம் நாட்டிற்கு சென்றாராம். அங்கே தொடக்கப்பள்ளி நிலையிலேயே ஆண்களுக்கு தனி பள்ளிக்கூடங்களும், பெண்களுக்கு தனி பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டிருந்தது பார்த்தாராம். உடனே பெல்ஜியம் நாட்டு கல்வியியலாளர்கள் இடம் கேட்டாராம்;

“உங்கள் நாட்டில் ஏன் தொடக்கக் கல்வியிலேயே இப்படி தனிப்பிரிவு? நீங்கள் முன்பெல்லாம் ஆண்களும் பெண்களும் இணைந்து கல்வி கற்க வேண்டும் என வாதாடி அவர்கள் ஆயிற்றே!”

அதற்கு அங்குள்ள பெண் கல்வியாளர் இப்படி பதில் சொன்னாராம்;

“தொடக்கப்பள்ளி நிலையிலேயும் கூட ஆண்களும் பெண்களும் இணைந்து கல்வி கற்பதால் ஏற்படும் கேடுகளை நாங்கள் நேரடியாக கண்டோம்.”

அண்மை காலங்களில் ரஷ்யாவிலும் இதேபோல் பல்கலைக்கழகங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நிறுவப்பட்ட கல்வி நிறுவனங்கள் 170 உருவாகியிருக்கின்றன. இவையெல்லாம் இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களில் பக்கம் இந்த உலகம் வந்து கொண்டிருக்கிறது என்பதையே காட்டுகின்றன.

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002